விட்டிலிருந்து பத்திரமாய்ப் போய்ச் சேர்ந்தானே, அதுவே போதும்! இனிமேல் இங்கு எப்போதுமே அவன் வராமலிருந்தால், தன் கண்ணில் எப்போதுமே படாமலிருந்தால், ரொம்ப நல்லது. எந்த இரகசியம் எப்படிப் போனாலும் சரிதான். அதையெல்லாம் தெரிந்து கொண்டு நமக்கு என்ன ஆகவேண்டும்? இவரும் குழந்தை வஸந்தியும் நன்ருயிருந்து, வாழ்க்கை நிம்மதியாக நடந்தால், அதுவே போதும். தான் இன்றைக்கு அநுபவித்தது போன்ற பயங்கரங்கள் இனிமேல் வேண்டவே வேண்டாம்.

இப்படி எண்ணிக்கொண்டே சீதா அறைக்கு வெளியில் வந்து முன்போலக் கதவைப் பூட்டத் தொடங்கினுள். திடீரென்று ஒரு உணர்ச்சி,— தான் செய்யும் காரியத்தை இரண்டு கண்கள் உற்றுப் பார்ப்பதுபோன்ற பிரமை,— ஏற்பட்டது. திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள். சாப்பாட்டு அறையின் வாசற்படியண்டை தாரிணி நின்று கொண்டிருந்தாள்.

காரணமில்லாத பீதியுடன் சீதா சிறிது நேரம் தாரிணியை வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்தாள். கையிலே இருந்த சாவியினுல் பூட்டைப் பூட்டுவதற்குக்கூடச் சக்தி இல்லாமல் நின்ருள். இதைப் பார்த்த தாரிணி புன்னகை பூத்த முகத்துடன் அவள் அருகில் நெருங்கி வந்து, "சீதா! எதற்காகப் பயப்படுகிருய்? நீ யாரைப் பார்ப்பதற்காக வந்தாயோ, அவனைப் பார்க்கத்தான் நானும் வந்தேன். அவன் விஷயத்தில் உன்னைக் காட்டிலும் எனக்கு அதிகமான சிரத்தை இருக்கக் கூடியது இயற்கையல்லவா?" என்ருள்.

வியப்பினுல் விரிந்த கண்களினுல் சீதா தாரிணி தேவியைப் பார்த்து, "அக்கா! உங்களுக்கு எப்படித் தெரியும்?" என்று கேட்டாள்.

"ஊகித்துத்தான் தெரிந்துகொண்டேன், சீதா! உன்னுடைய நடை உடை பாவனைகள், பேச்சுகள்—எல்லாம் என் மனதில் ஒருவாறு சந்தேகத்தை உண்டாக்கின. ஸ்நான அறையில் என்னுடைய கைக்குட்டை இருந்ததாகச் சூரியா சொன்னதும் சந்தேகம் உறுதிப்பட்டது. அப்புறம் ......" என்று தாரிணி தயங்கினுள்.

"அப்புறம் என்ன, அக்கா?"

"செய்யக் கூடாத ஒரு காரியம் செய்தேன், சீதா! அதற்காக நீ என்னை மன்னிக்க வேண்டும். உன்னுடைய குழந்தையைப் பார்ப்பதற்காக உன் கணவருடைய ஆபீஸ் அறைக்குள் போயிருந்தேனல்லவா? அப்போது மேஜையில் நீ பாதி எழுதி வைத்திருந்த கடிதம் என் கண்ணில் பட்டது. என்னையறியாத ஒரு ஆவலினுல் அதைப் படித்தேன். அந்தக் கடிதத்தின் கடைசியில்......"

"அக்கா! இதுதானு உங்களுக்குத் தெரிந்த இலட்சணம்? பிறத்தியார் கடிதத்தைப் படிக்கலாமா? இவர் கூட என் கடிதங்களைப் படிக்கிறதில்லையே?"

"அதற்காகத்தான் முதலிலேயே மன்னிப்புக் கேட்டுக் கொண்டேனே, சீதா!" என்று இரக்கமான குரலில் கூறினுள் தாரிணி.

"போனுல் போகட்டும். நான் எழுந்து வந்தது உங்களுக்குத் தெரியுமா? நீங்கள் தூங்கவில்லையா?"

"எனக்கு எப்படித் தூக்கம் வரும், சீதா! அவ்வளவு பயங்கரமான சம்பவங்கள் நடந்திருக்கும்போது? நீ என்னைத் தூங்கப் பண்ணுவதில் அதிக சிரத்தை காட்டினுய். நான் தூங்கிய பிறகு ஏதோ நீ செய்யப்போகிருய் என்று எதிர்பார்த்தேன். ஆகையால் தூங்குகிறதுபோலப் பாசாங்கு செய்தேன். நீயே தூங்கிப்போய்விட்டதாகத் தெரிந்ததும் ஏமாற்றமடைந்தேன். ஆனுல் கடிகாரம் மணி இரண்டு அடித்து உன்னை எழுப்பிவிட்டது. நீ எழுந்து சாவியை எடுத்துக்கொண்டு மெள்ள நடந்து வந்தாய். நானும் பின்னுல் உனக்குத் தெரியாதபடி வந்தேன். சட்டென்று நீ விளக்குப் போட்டதும் ஒருவேளை என்னைப் பார்த்து விடுவாயோ என்று பயந்து போனேன். ஆனுல் நீ பார்க்கவில்லை. கதவைத் திறந்துகொண்டு இந்த அறைக்குள் போனுய். யாரையோ தேடி ஏமாற்றமடைந்தாய். ஆனுல் நான் ஏமாற்றமடையவில்லை...."

"அது ஏன்? நீங்கள் ஏன் ஏமாற்றமடையவில்லை? இங்கே ஒருவரும் இல்லையென்று உங்களுக்கு எப்படித் தெரியும்?" என்று கேட்டாள் சீதா.

ரஸியா பேகத்தைப் பார்ப்பதற்கு. நாம் தெரிந்துகொள்ள விரும்பிய விவரங்கள் தெரியாவிட்டாலும் அவளுக்கு எச்சரிக்கை செய்துவிட வேண்டியது அவசியம். பொழுது விடிந்தபிறகு அவள் இங்கே இருக்கக் கூடாது.

தலையணையின் அடியில் சீதா கையை விட்டுத் துழாவி அங்கேயிருந்த சாவியை எடுத்துக் கொண்டாள். சிறிதுகூடச் சத்தம் செய்யாமல் படுக்கையிலிருந்து எழுந்தாள். எதிர்ப்பக்கச் சுவரில் ஒரு கதவு இருந்தது. அந்த வழியாகச் சென்றால் இவளும் சூரியாவும் படுத்திருக்கும் அறை இருக்கிறது. வலது பக்கம் இருந்த வாசற்படி வழியாகப் போனால் சாப்பாட்டு அறைக்குள் போய் அங்கிருந்து கொல்லைப் பக்கம் போகலாம். யாருக்கும் தெரியாது. இந்த விவரம் அப்போது தனக்குத் தோன்றியதை நினைத்து, தன் அறிவு தெளிவாகத்தான் இருக்கிறது என்பதற்கு வேறு என்ன அத்தாட்சி வேண்டும் என்று சீதா எண்ணிக் கொண்டாள். வலது பக்கத்துச் சுவரண்டை சென்று அங்கிருந்த கதவைச் சத்தமில்லாமல் திறந்தாள். ஜாக்கிரதைக்கு ஒரு தடவை திரும்பிப் பார்த்தாள். தாரிணி அக்கா தூங்கிக் கொண்டுதானிருக்கிறாள். நல்லதாய்ப் போயிற்று.

தன்னுடைய காலடிச் சத்தம் தன் காதுக்குக்கூடக் கேளாதபடி சீதா மெள்ள மெள்ள அடி எடுத்துவைத்து நடந்து போனாள். கடைசியாக, அந்தத் தட்டுமுட்டு சாமான் அறை வந்தது. இருட்டில் கையினால் தடவிப் பூட்டு இருக்கும் இடத்தைக் கண்டு பிடித்தாள். சாவியைப் பூட்டுக்குள் செலுத்தப் பார்த்தாள். எவ்வளவு முயன்றும் முடியவில்லை. இது என்ன சங்கடம்? விளக்குப் போட்டுத்தான் ஆகவேண்டும் போலிருக்கிறது. போட்டால் என்ன? இங்கே யார் வரப்போகிறார்கள்? வெளிச்சம் கொஞ்சம் இருந்தால்தான் நல்லது. இருட்டில் திடீரென்று கதவு திறந்ததும், அந்த ஸ்திரீ......ரஜனிப்பூர் பைத்தியக்காரி... யாரோ என்னமோ என்று அலறிக் கொண்டு எழுந்தால்? அவள் கையில் கத்தி வேறே இருக்கிறது!

கையினால் தேடி மின்சார விளக்கின் ஸ்விட்ச் இருக்குமிடத்தைக் கண்டு பிடித்து விளக்கைப் போட்டாள்...... அது என்ன சத்தம்? யாரோ நடக்கும் காலடிச் சத்தம் மாதிரி கேட்டதே!...... ஒரு வேளை அந்த ஸ்திரீ அறையின் உள்ளே எழுந்து நடமாடுகிறாள் போலிருக்கிறது. அதுவும் நல்லதுதான். அவளைத் தொட்டு எழுப்ப வேண்டிய அவசியமில்லை.

இருட்டில் பூட்டைத் திறக்கச் செய்த முயற்சியில் தான் செய்த தவறு சீதாவுக்குத் தெரிந்தது. பூட்டின் முன் பக்கத்தில் சாவியைப் போடுவதற்குப் பதிலாகப் பின்புறத்தில் போட முயன்றிருக்கிறாள். அது எப்படித் திறக்கும்? இதை நினைத்தபோது சீதாவுக்குச் சிரிப்புக்கூட வந்தது.

இதோ பூட்டுத் திறந்தது! கதவும் திறந்தது! சீதா மெதுவாக உள்ளே ஒரு காலை வைத்து எட்டிப் பார்த்தாள். இது ஏன்? அறைக்குள்ளே யாரும் இல்லையே! ஒருவரும் நடமாடவில்லையே! ஒரு சத்தமும் கேட்கவில்லையே!

இன்னொரு காலையும் உள்ளே வைத்து நாலுபுறமும் நன்றாகப் பார்த்தாள். அறை காலியாக இருந்தது!

இது என்ன விந்தை! முன்னிரவில் நடந்ததெல்லாம் உண்மையில் கனவில் நடந்ததோ? அந்த ஸ்திரீ ஸ்நான அறைக்குள் இருந்தது, அப்புறம் இந்த அறைக்குள் சென்றது, வெளிப் பக்கம் கதவைப் பூட்டச் சொன்னது எல்லாம் தன்னுடைய மனப் பிரமையா? இல்லவே இல்லை. எல்லாம் உண்மையாக நடந்தவைதான். பின்னே, அந்த ஸ்திரீ எப்படி அங்கிருந்து மாயமாய் மறைந்து போனாள்?

அப்போது அந்த அறையிலிருந்து பின்பக்கம் திறந்த கதவு சீதாவின் கண்ணில் பட்டது. அந்தக் கதவின் தாழ்ப்பாள் அகற்றப் பட்டிருந்தது. சீதாவுக்கு உண்மை புலனாயிற்று. அந்தக் கதவைத் திறந்து கொண்டு அவள் வெளியே போயிருக்கிறாள். போலீஸ்காரர்கள் வந்து தடபுடல் செய்தது ரஸியா பேகத்தின் காதில் பட்டிருக்க வேண்டும். சந்தடி அடங்கியதும் புறப்பட்டிருக்கிறாள். தான் தெரிந்து கொள்ள விரும்பியதை அவளிடம் தெரிந்து கொள்ள முடியாமற் போய்விட்டது! ஆயினும் பாதகமில்லை. எப்படியாவது அவள் இந்த

மேலும் எதற்காகத் தான் சொல்ல வேண்டும்? அவன்தான் கொலைகாரி என்பது என்ன நிச்சயம்? காக்கை உட்காரப் பனம்பழம் விழுந்தது போல் இருக்கலாமல்லவா? பைத்தியம் பிடித்த நாயைக் கொன்றதாக அவன் சொன்னது ஏன் உண்மையாயிருக்கக் கூடாது?......ஆனால் எதற்காக அப்படி இரகசியமாக அவன் வந்திருக்க வேண்டும்? தன்னை எப்படிப் பயப்படுத்தி விட்டான்?......அடாடா! லலிதாவுக்கு எழுதிய கடிதத்தை ஆபீஸ் அறை மேஜை மேலேயே வைத்திருக்கிறோமே? எடுத்துவைக்க மறந்து விட்டோமே? அதை யாரும் பார்த்திருக்க மாட்டார்கள். பார்த்தால் இவர்தான் பார்க்க வேண்டும். ஆனால் என்னுடைய கடிதங்களையோ, எனக்கு வரும் கடிதங்களையோ இவர் பார்ப்பதே இல்லை! எவ்வளவு உயர்ந்த குணம்? தவறிக் கண்ணிலே பட்டிருந்தாலும், 'லலிதா' என்ற பெயரைப் பார்த்ததும் மேலே படிக்கமாட்டார். அதை நினைத்தால் வேடிக்கையாகத்தானிருக்கிறது. இவரை லலிதா கலியாணம் செய்து கொண்டு இந்த வீட்டில் இப்போது குடித்தனம் பண்ண வேண்டியது. அவள் இருக்க வேண்டிய இடத்தில் நாம் இருக்கிறோம், அதற்கு என்ன செய்யலாம்? அவரவர்களுக்குக் கடவுள் விதித்திருக்கிறபடி தானே நடக்கும்? ...... இதென்ன? கண்ணை இப்படிச் சுற்றிக் கொண்டு வருகிறதே? தூங்கக்கூடாது; இன்றைக்குத் தூங்கக்கூடாது ....

'டிணிங்', 'டிணிங்' என்று இரண்டு மணி அடித்ததைக் கேட்டுச் சீதா விழித்துக் கொண்டாள். கடவுளே! தூங்கிப் போய் விட்டோம் போலிருக்கிறதே! இரண்டு மணிதான் ஆயிற்றா? அல்லது மேலே ஆகிவிட்டதா? சுவரில் மாட்டியிருந்த கடிகாரத்தைச் சீதா பார்த்தாள். இரவு நேரத்துக்கென்று போட்டிருக்க மிக மங்கலான சிவப்பு பல்பின் வெளிச்சத்தில் கடிகாரம் இரண்டு மணி காட்டுவது தெரிந்தது. இவ்வளவுதானே? இப்போதுகூட அந்த அறைக்குப் போகலாம். ஆனால் தடபுடல் செய்யக் கூடாது. சத்தமில்லாமல் எழுந்திருக்க வேண்டும். அடுத்த அறையில் புருஷர்களும் இந்த அறையில் தாரிணி அக்காவும் நன்றாகத் தூங்குகிறார்களா என்று தெரிந்து கொள்ள வேண்டும்.

அது என்ன சத்தம்? கதவு திறக்கிற சத்தம்போலிருக்கிறதே! இந்த நேரத்தில் எந்தக் கதவு திறக்கிறது? ஒரு வேளை .... இல்லை, இல்லை. அடுத்த வீட்டுக் கதவாயிருக்கும்; அல்லது சத்தம் கேட்டதே வெறும் பிரமையாயிருக்கும். இருந்தாலும் சற்றுப் பொறுத்து எழுந்திருக்கலாம். மறுபடியும் தூங்கிவிடக் கூடாது. இதோ தாரிணி அக்கா படுக்கையில் 'ஒருக்களித்துப்' படுத்துக் கொண்டு நன்றாய்த் தூங்குகிறாள். தூங்கட்டும்; அதுதான் நமக்கு வேண்டியது.

ஐயோ! இது என்ன?......அதோ அந்த நிலைக் கண்ணாடியில் மங்கலாகத் தெரியும் உருவம்! பயங்கரமாயிருக்கிறதே! முகத்திலே தாடி! தலையிலே துருக்கிக் குல்லா! கண்களில் நெருப்புத் தணல்!...... சீதாவின் உடம்பில் ஒரு நிமிஷம் இரத்த ஓட்டம் அடியோடு நின்று போயிற்று. கைகால் வெலவெலத்து அசைவற்றுப் போயின. ஆகா! அந்த உருவத்தை இப்போது காணவில்லை! ஏதோ ஒரு கைமட்டும் இருட்டிலிருந்து தனியாக வெளிப்பட்டு அந்த உருவத்தைத் தொட்டு அழைத்துக் கொண்டு போனமாதிரி தோன்றியது. எப்படியோ, அந்த உருவம் போய்விட்டது! சீச்சீ! வெறும் பிரமை! மூளை குழம்பி விட்டது போலத் தோன்றுகிறது. மூளை குழம்பவும் இல்லை, ஒன்றுமில்லை. கண்டது சொப்பனமாயிருக்கும். அன்று இரவெல்லாம் ஏதேதோ பயங்கர. விஷயங்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தோமல்லவா? அந்த ஞாபகந்தான்; வேறு ஒன்றுமில்லை. நம்முடைய மூளை தெளிவாகத்தான் இருக்கிறது.

சீதா படுக்கையில் எழுந்து உட்கார்ந்தாள். கண்களைத் துடைத்துக் கொண்டு எதிர்ச் சுவரில் பதித்திருந்த நிலைக் கண்ணாடியிலே பார்த்தாள். திரும்பி, திறந்த ஜன்னலையும் பார்த்தாள். ஒன்றுமேயில்லை. வெறும் பிரமைதான்! பைத்தியக்காரத்தனம்!

அடுத்த அறையில் சத்தமேயில்லை. நன்றாகத் தூங்குகிறார்கள். தாரிணியும் தூங்குகிறாள். இதுதான் சமயம்,


தீபாவளி
தினத்தன்று ராஜதானி -
முழுவதும் ஆரம்பமாகிறது...
ஜுபிடரின்
மோகினி
அனைவரும் அன்று கண்டு களிப்பர்.........
மீண்டும் மீண்டும் அதையே கண்டானந்திப்பர்
தயாரிப்பு - எம்.சோமசுந்தரம் - டைரக்ஷன் - லங்கா சத்யம் - திரைக்கதை - ஏ.எஸ்.ஏ.சாமி - வசனம் - எஸ்.டி.சுந்தரம்
டி.எஸ்.பாலையா - எம்.ஜி.ராமச்சந்தர் - ஆர்.பாலசுப்ரமணியம் - புளிமூட்டை ராமசாமி - எம்.என்.நம்பியார்.........





"ஓவல்டின்" நோய்க்குப் பின் சீக்கிரத்தில் ஆரோக்கியத்தையும் வலுவையும் திரும்பப் பெறச் செய்யக்கூடிய சரியான ஆகார சத்து அளிப்பதால், அதன் மிகவும் உத்தமமான மதிப்பையும் அவசியத்தையும், எல்லா இடங்களிலும் உள்ள டாக்டர்களும் நர்ஸ்களும் ஒப்புக்கொள்ளுகிறார்கள்.

"ஓவல்டின்" னின் விருப்பத்தக்க சுவையானது நோயாளிகளின் ருசி உணரும் சக்தி குறைந்த வாய்க்கு வன்மை ஒத்துக்கொள்வதாயும் ஏற்றதாயும் இருக்கிறது. ஓவல்டின் சாரமாகவும் பூரணமாகவும் கொடுக்கும் முறைப்படி முன்று கூட்டு சத்தாக்கப்பட்ட ஆகாரம், எளிதில் ஜீரணிக்கப்பட்டு தேகத்தில் சேர்ந்துவிடக்கூடியதாய் இருப்பதால் நோய்க்குப்பின் உடம்பின் தேவைக்கு மிகவும் ஏற்றதாக இருக்கிறது.

"ஓவல்டின்" சிறந்த பரிபூர்ணமான உணவு வேண்டிய போஷாக்கை மறுபடி திரும்பக் கொடுக்க வல்ல ஆகாரசத்தானது அதில் சேர்ந்துள்ள பழுத்த பார்லியாலிருந்தும், புதிய ஏடுடன் கூடிய பசுவின் பாலிலிருந்தும், மற்றும் தேகத்துக்கும் மூளைக்கும் நரம்புகளுக்கும் வலிமை கொடுத்து பரிபாலிக்க வல்ல விட்டமின்களிலிருந்தும், இதர மூல வஸ்துக்களிலிருந்தும் கிடைக்கிறது. [illegible]


டிஸ்ட்ரிப்யூட்டர்கள் :

கிரஹாம்ஸ் டிரேடிங் கம்பெனி (இந்தியா) லிமிடெட், தபால் பெட்டி நெ. 1205, மதராஸ். மற்றும் பம்பாய், கராச்சி, கல்கத்தா நகரிலும், தி இங்கிலீஷ் ஸ்காட்டிஷ் ஜாயிண்ட் கோவாபரேடிவ் ஹோல்சேல் சொஸைட்டி லிமிடெட், [illegible] கோட்டை (ஸிலோனுக்கு)

'ஓவல்டின்'

'OVALTINE பலவிருத்தி ஆகார பானம்'

OV/103




"... the search for an IDEAL ANT-ACID has long exercised the minds of gastro-enterologists "and I have no hesitation in acclaiming Magtriz as conforming to an accepted ideal."
Writes an M.D.
Prompt and effective relief.
Neutralisation of gastric acids for several hours.
Mild laxative effect.
Safe in large doses over a prolonged period.
MAGTRIZ is therefore indicated for Hyperchlorhydria, Peptic Ulcer, Intestinal Toxaemia and Minor Digestive Disturbances.
Write for Professional Literature.
AGENTS IN INDIA
Issa Sons & Co., Waterloo Mansions, Fort, BOMBAY
Oriental Mercantile Agency, 99a Armenian St., MADRAS
P. H. Hira & Co., Bunder Road, KARACHI
P. H. Hira & Co. 5, Dharamtala Street, CALCUTTA
MAGTRIZ
STOMACH POWDER
ANTACID — ANTIPEPTIC — ANTITOXIC
FOR THE TREATMENT OF DYSPEPSIA, FLATULENCE, GASTRIC HYPERACIDITY, INTESTINAL TOXAEMIA and ALLIED CONDITIONS.
WESTMINSTER LABORATORIES LTD.
LONDON N.W.1 ENGLAND.

மோஷியோக்ராப்

MOTIOGRAPH

★



சௌண்ட் ஸிஸ்டம்

உலகத்திலே மிகச் சிறந்தது

மாடல் **AA & AA 2**

- ★ மிகவும் நவீனமானது
- ★ புத்தம் புதிய அழகிய டிசைன்
- ★ உறுதியான அமைப்பு
- ★ எல்லாபாகங்களும் பால்பேரிங் களிலே வேலை செய்கின்றன
- ★ சிறிதும் சத்தமின்றி தொந்தரவே இல்லாது வேலை செய்யக் கூடியது.

MOTIOGRAPH

இந்த ப்ரொஜக்டரின் பெருமையைப் பற்றி எழுத்தில் விவரிப்பது சிரமம். ஆகவே முழு விவரம், விலைகளுக்கு எழுதவும்

இப் போன் விழாவின் மாடலை அதிகப் பிரபலப்படுத்த மிகவும் கவர்ச்சிகரமான சலுகைகள் இந்த ஆண்டு முடிய அளிக்கப்படுகின்றது

போன்: 86282 — தந்தி: "SOUNDHEAD"

இண்டர்நேஷனல் டாக்கீ எக்விப்மெண்ட் கோ., லி-ட்

18, மவுண்ட் ரோடு, சென்னை

தலைமை ஆபீஸ்:	கிளைகள்:		
பம்பாய்:	லண்டன்:	டெல்லி:	நியூ யார்க்:
17, க்வீன்ஸ் ரோடு, பம்பாய் - 4	21, ஓர்ம்வுட் தெரு லண்டன், இ.ஸி. 2	சந்தனி சௌக் டெல்லி	57, வில்லியம் தெரு நியூயார்க் - 5

சென்னை
பிராட்வே &
கெயிட்டியில்
29-10-48 முதல்

வாஹினியாரின்

யோகி
வேமனா

நாகய்யா நடித்தது....



இது ஒரு சின்ன கேள்விதான்?

ஒவ்வொரு நிமிஷமும் ஒருவன்
பிறக்கிறான்

ஒவ்வொரு நிமிஷமும் ஒருவன்
இறக்கிறான்

மனிதன் எங்கிருந்து வருகிறான்?
எங்கே போகிறான்?

இதற்குப் பதிலைத் தேடிய ஞானி
வேமனா

★

வாழ்வின்
ஸூக்ஷ்மத்தை
அறிந்த
வித்தகரின்
படம்
யோகி வேமனா

தினசரி 3 காட்சிகள்
2-30, 6-30 &
9-30 p.m.

சென்னை உரிமை: ஸ்ரீ ரத்னா பிக்சர்ஸ், சென்னை - 10

கல்கி

பொருளடக்கம்

மலர் 8 இதழ் 14	அக்டோபர் 31	சர்வதாரி ௵ ஐப்பசி 15

பலே பையன்!	சாஸ்திரி	...	10
என்ன சேதி?	...	...	11
காந்தியை நினைப்போம்	நாமக்கல் கவிஞர்	...	12
குழப்படி அரசின் குயுக்தி வேலைகள்	...	...	13
நெஞ்சம் கலங்கும் இலங்கை இந்தியர்	...	...	14
அலை ஓசை	கல்கி	...	17
புதுச்சேரி தேர்தல், பாரு!	விந்தன்	...	27
மாந்தருக்குள் ஒரு தெய்வம்	ரா. கி.	...	30
சென்னை காட்டிய சீரிய வழி	ரஜனி	...	35
பம்பாய் மாப்பிள்ளை	லோமாஸ்	...	36
வெடிக்காத பட்டாசு! (பாப்பா மலர்)	பி. எஸ். மணி	...	39
மூன்று எழுத்துக்கள்	சபரி	...	43
தீபாவளி இல்லை!	பகீரதன்	...	46
காலக்ஷேபம்	...	...	48
உண்மையைக் கண்டேன் :.........	எஸ். வி. எஸ்.	...	50
ராமபாணந்தான் ஊழித் தீ!	டி. கே. சி.	...	53
கொம்பு வாணம்	ரா. வீழிநாதன்	...	55
வட்ட மேஜை	...	...	59

இந்த வருஷத்துத் தீபாவளிப் பண்டிகையைப் பற்றி நினைக்கும்போது ஒரு விஷயம் ஞாபகத்துக்கு வருகிறது. சென்ற வருஷத்துத் தீபாவளியின்போது காந்தி மகாத்மா நம்மிடையே வாழ்ந்தார். இந்தத் தீபாவளியில் அவர் இப் பூவுலகில் இல்லை; அமர உலகில் வாழ்கிறார். பாழ்பட்டுக் கிடந்த பாரத நாட்டை வாழ்விக்க வந்தவர் கொலைபாதகனுடைய குண்டுக்கு இரையாகி நம்மைப் பிரிந்து சென்றுவிட்டார். ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு இந்திய நாட்டைச் சுதந்திர நாடாக்கிய மகா புருஷரை நாம் இழந்துவிட்டோம். பலாத்காரப் பேய்கள் கோர தாண்டவமாடிக் கொண்டிருந்த இந்த மண்ணுலகில் அஹிம்சையின் மகா சக்தியை நிலைநாட்டிய புண்ணியர் நம்மை விட்டுப் போய்விட்டார். சுயநல அந்தகாரம் சூழ்ந்திருந்த பூவுலகில் தியாகம் என்னும் தூங்கா விளக்கை ஏற்றி வைத்த பெருமான் நம்மைப் பிரிந்து சென்றுவிட்டார்.



இத்தகைய மகத்தான நஷ்டத்தை நாமும் நாடும் அடைந்த வருஷத்தில் தீபாவளிப் பண்டிகையை எப்படிக் குதூகலமாகக் கொண்டாட முடியும்? எப்படி மனம் வரும்?

இந்த வருஷத்துத் தீபாவளியைக் கொண்டாட ஒரே ஒரு முறைதான் உண்டு. அன்று கிருஷ்ண பரமாத்மா நரகாசுரனை வெற்றிகொண்டதுபோல், வகுப்புத் துவேஷம் என்னும் பயங்கர ராட்சஸனைத் தம்முடைய ஆத்மத் தியாகத்தினால் வென்று அருள் புரிந்த காந்தி மகாத்மாவை இந்தத் தீபாவளி தினத்தில் நினைவு கூருவோம். அடிமை இருள் சூழ்ந்திருந்த இந்திய நாட்டில் சுதந்திர மணி விளக்கை ஏற்றிவைத்த ஏந்தலை நன்றியுடன் நினைந்து வந்தனை கூறுவோம். அந்த மகான் ஏற்றி வைத்த மணி விளக்கை என்றும் அணையாமல் பாதுகாப்போம் என்று நாம் ஒவ்வொருவரும் தீபாவளி தினத்தில் உறுதி கொள்வோம்.

பலே பையன்!



கல்கி

மலர் 8 | தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 14

என்ன செய்தி?

தமிழர் பெருந்தன்மை

காங்கிரஸ் தலைமைப் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட டாக்டர் பட்டாபி சீதாராமய்யாவுக்கு வாழ்த்துக் கூறுகிறோம். அவர் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முக்கிய காரணபுருஷர்களாயிருந்த தமிழ்நாட்டுப் பிரதிநிதிகளையும் வாழ்த்துகிறோம். டாக்டர் பட்டாபிக்கு 1206 வோட்டுகளும் ஸ்ரீ தாண்டனுக்கு 1053 வோட்டுகளும் தேர்தலில் கிடைத்தன. அதாவது 153 வோட்டுகள் டாக்டர் பட்டாபி அதிகம் பெற்றிருக்கிறார். தமிழ்நாட்டுப் பிரதிநிதிகள் 181 வோட்டுகள் டாக்டர் பட்டாபிக்கு அளித்தார்கள். தமிழ் நாட்டுப் பிரதிநிதிகள் வோட்டுப் போட்டிராவிட்டால் டாக்டர் பட்டாபிக்கு வெற்றி கிடைத்திராது. தமிழ்நாட்டு வோட்டுகளில் சரிபாதி ஸ்ரீ தாண்டனுக்குப் போயிருந்தாலும் டாக்டர் பட்டாபி சீதாராமய்யா காங்கிரஸ் தலைவராகி யிருக்க முடியாது.

ஆந்திரநாட்டுக் காங்கிரஸ் பிரதிநிதிகளைக் காட்டிலும் அதிக கட்டுப்பாட்டுடன் டாக்டர் பட்டாபிக்குத் தமிழ்நாட்டுப் பிரதிநிதிகள் வோட்டுக் கொடுத்திருக்கிறார்கள். ஆந்திரநாட்டில் ஸ்ரீ தாண்டனுக்கு 36 வோட்டு கிடைத்தது; தமிழ்நாட்டிலோ 14 பேர்தான் ஸ்ரீ தாண்டனுக்கு வோட்டுப் போட்டார்கள்.

மாகாணப் பிரிவினை விஷயமாகவும் முக்கியமாகச் சென்னை நகர் சம்பந்தமாகவும் தமிழ் நாட்டுக்கும் ஆந்திர சகோதரர்களுக்கும் தீவிரமான கருத்து வேற்றுமை ஏற்பட்டிருந்தது. ஆந்திரத் தலைவர்களின் போக்கு அநியாயமானதென்றும் விபரீதமானதென்றும் தமிழ் நாட்டார் கருதினார்கள். ஆயினும் அந்தத் தகராறுகளை இந்தத் தேர்தல் விஷயத்தில் கொண்டு வராமல் தமிழ்நாட்டுப் பிரதிநிதிகள் டாக்டர் பட்டாபிக்கு வோட்டுக் கொடுத்தது பெரிதும் பாராட்டத்தக்கது. தமிழ் மக்களுடைய பெருந்தன்மைக்கும் தாராள குணத்துக்கும் இதைக் காட்டிலும் சிறந்த அத்தாட்சி வேண்டியதில்லை.

காந்தி மகாத்மா ஜீவியவந்தரா யிருந்த காலத்தில் ஒரு தடவை டாக்டர் பட்டாபி சீதாராமய்யாவைக் காங்கிரஸ் தலைவராக்கவேண்டும் என்று சிபார்சு செய்தார். காந்தி மகானுடைய விருப்பம் அப்போது நிறைவேறவில்லை; இன்று நிறைவேறியிருக்கிறது. இம்மாதிரியே காந்தி மகாத்மா தம் வாழ்க்கையில் வெளியிட்ட மற்றும் பல விருப்பங்களும் நாளடைவில் நிறைவேறும் என்று எதிர்பார்க்கலாம்.

திருவாங்கூரில் பதவிப் போர்

சில காலத்துக்கு முன்பு தமிழ்நாட்டில் பதவிப் போராட்டம் என்னும் பேய் புகுந்து தன் திருவிளையாடல்களை நிகழ்த்தியது. இதனால் தமிழ் நாட்டுக்கு இந்தியா தேசமெங்கும் அபகீர்த்தி ஏற்பட்டிருந்தது. அந்த அபகீர்த்தி இப்போது ஓரளவு மறைந்திருக்கிறது. தமிழ்நாட்டில் தலைவிரித்தாடிய பதவிப் போராட்டப் பேய் இப்போது திருவாங்கூரில் குடி புகுந்திருப்பதாகத் தெரிகிறது. திருவாங்கூரில் திவானுடைய ஏதேச்சாதிகாரத்தை ஒழித்து ஜனநாயகப் பொறுப்பாட்சியை ஏற்படுத்துவதற்காகத் திருவாங்கூர் மக்கள் வெகுகாலம் போராடினார்கள். திருவாங்கூர் சமஸ்தான காங்கிரஸ் மேற்படி போராட்டத்தின் முன்னணியில் நின்று கடைசியாக வெற்றியும் கண்டது. சுதந்திரப் போராட்டத்தில் வெற்றிக்குப் பிறகு பதவிப் போராட்டம் தொடங்கி ஜனநாயகம் அலங்கோலம் அடைந்து வருகிறது. சமஸ்தான காங்கிரஸின் இணைபிரியாத தலைவர்களாக ஸ்ரீ பட்டம் தாணுப் பிள்ளையும் ஸ்ரீ வெர்க்கீஸும் விளங்கினார்கள். பொறுப்பாட்சி ஏற்பட்டதும் இந்த இருவரும் ஸ்ரீ கேசவன் என்பவரும் மந்திரிகள் ஆனார்கள். இந்த மூன்று பேரும் ஒன்றுபட்டு ஒற்றுமையாக

அரசாங்கத்தை நடத்த முடிய வில்லை. சுதந்திரப் போரின்போது ஒன்று யிருந்தவர்கள், மந்திரி சபைக்குள்ளே போட்டிக்கும் பொறாமைக்கும் இரையானார்கள். ஸ்ரீ பட்டம் தாணுப் பிள்ளை தமக்குப் பலம் அளிக்கப் புது மந்திரிகளைச் சேர்த்துக்கொண்டார். "புது மந்திரிகளைச் சேர்த்துக் கொண்டால் நாங்கள் ராஜிநாமா செய்து விடுவோம்" என்று மற்ற இருவரும் சொன்னார்கள். அந்த சங்கடம் ஒருவாறு தீர்ந்தது. இனி எல்லாம் சரியாக நடக்கும் என்று நாம் நினைத்துக் கொண்டிருந்த சமயத்தில், ஸ்ரீ பட்டம் தாணுப் பிள்ளையின் பிரதம மந்திரி பதவிக்கே பாக்கு வந்துவிட்டது. அவரும் அவருடைய மந்திரி சபையும் ராஜிநாமா செய்து, இப்போது ஸ்ரீ பரூர் நாராயணப் பிள்ளை என்பவர் பிரதமராகி யிருக்கிறார். இரண்டு தரப்பிலும் வெளியாகும் அறிக்கைகளிலிருந்து, கொள்கைகளிலே அடிப்படையான வித்தியாசம் இருப்பதாகத் தெரியவில்லை. வெறும் வீம்பும் போட்டியும் பொறாமையுமே கலவரத்துக்குக் காரணம் என்று தெரிகிறது.

திருவாங்கூர் சம்பவத்திலிருந்து வெளியாகும் முக்கியமான உண்மை என்ன? "**சுதந்திரப் போர் நடத்துவது சுலபம்; சுதந்திரம் பெறுவதும் சுலபம்; கிடைத்த சுதந்திரத்தை நிலைநாட்டுவதும் அதை நல்ல முறையில் உபயோகிப்பதும் கஷ்டம்**" என்பது தான். இந்த உண்மையை எண்ணிப் பார்க்கும்போது, இந்திய தேசம் பெற்ற சுதந்திரத்தைப் பாதுகாக்கப் புது டில்லியில் நமது உத்தமத் தலைவர்கள் சிலர் இருக்கிறார்களே என்பது பற்றி நமக்கு அளவில்லாத மகிழ்ச்சியுண்டாகிறது. ராஜாஜியும் ஜவாஹரும் வல்லபாயும் இச்சமயம் இந்தியாவின் ஆட்சிப் பொறுப்பை ஏற்று நடத்துவது இந்தியாவின் மகத்தான பாக்கியமாகும்.

ஐக்கிய கேரளவாதிகள் வெற்றி

சமீபத்தில் கொச்சி அசெம்பிளிக்கு நடந்த தேர்தலில், இந்திய தேசிய காங்கிரசின் ஆதரவைப்பெற்ற கொச்சி பிரஜா மண்டலம் நிறுத்திய அபேட்சகர்களே அமோக வெற்றி பெற்றனர். பிரஜா மண்டலத்தை எதிர்த்து நின்றவர்களில் தொண்ணூறு சத விகித நபர்கள் தோல்வியடைந்தனரென்றால், பிரஜா மண்டல அபேட்சகர்களின் வெற்றி எத்தகையது என்பதை அறிந்து கொள்ளலாம். அதிலும் சர்வஜன வோட்டு முறையின்படி தேர்தல்கள் நடந்தன என்பதும் மேற்படி அசெம்பிளியே பின்னர் கொச்சி அரசியல் நிர்ணய சபையாக இருக்கப் போகிறதுஎன்பதும் குறிப்பிடத்தக்கவை.

பிரஜா மண்டல அபேட்சகர்கள் யாவரும் ஐக்கிய கேரள இயக்கத்தை ஆதரிப்பவர்களாவர். திருவாங்கூரிலும் ஐக்கிய கேரள இயக்கம் பலம் அடைந்து வருகிறது. திருவாங்கூர், கொச்சி, மலபார் பிரதேசப் பிரதிநிதிகளின் கூட்டமொன்று சென்ற வாரம் எர்ணாகுளத்தில் நடந்தது. அதில் திருவாங்கூர் புதிய பிரதமர், கொச்சி பிரதமர், சென்னை விவசாய மந்திரி ஸ்ரீ மாதவமேனன் முதலிய பிரமுகர்கள் கலந்துகொண்டு, ஐக்கிய கேரளம் அமைய வேண்டிய அவசியத்தை வற்புறுத்திப் பேசினார்கள்.

ஐக்கிய கேரள மாகாணம் ஏற்படும் போது திருவாங்கூர்த் தமிழர்களுக்குச் சுயநிர்ணய உரிமை அளிக்கப்படும் என்று திருவாங்கூர் சமஸ்தான காங்கிரசைச் சேர்ந்தவர்களே சொல்லி வந்திருக்கிறார்கள். ஆனால் அந்தப் பேச்சையே இப்போது காணோம். திருவாங்கூர்த் தமிழர்கள் **சத்தியாக்கிரஹ இயக்கத்தை** மேற்கொள்ளத் தீர்மானித்திருப்பதாக ஸ்ரீ நேசமணி (?) அறிக்கை விட்டிருக்கிறார். இத்தகைய அவசியம் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது ஐக்கிய கேரள இயக்கத் தலைவர்களின் முக்கிய கடமையாகும்.

காந்தியை நினைப்போம்!

தீபாவளி யெனும் திருநாள் : இதுநாள்
அகாரத் தனங்களை அடியோடு நீக்கி
அன்பின் வாழ்க்கையை ஆரம்பமாக்கி
பகவான் திருவருள் பாலித்த நன்னாள்.
சாதிக் கொடுமைகள் சமயப் பிணக்குகள்
மத மொழி இன வெறி மாச்சரியங்கள்
அதிகார மோகம் ஆதிக்ய தாகம்
முதலிய எல்லா முரட்டுத் தனங்களை
முற்றிலும் தொலைத்துத் தலைமை முழுதி
சுதராட்டை கட்டிக் காந்தியை நினைந்து
இறைவனைத் தொழுது இன்பம் மிகுந்து
மனையறம் சிறந்து வாழ்வீர், மங்களம்.

—நாமக்கல் வெ. ராமலிங்கம் பிள்ளை

குழப்படி அரசின் குயுக்தி வேலைகள்!

செவ்வாய்க் கிழமைக்கு மங்கள வாரம் என்று பெயர் வந்ததுபோல் பிரான்சுக்குக் குடியரசு என்ற பெயர் வந்திருக்கிறது!

முன்பு குடியரசை ஸ்தாபிப்பதற்காகப் பிரஞ்சு மன்னனைத் தூக்கிலிட்ட பிரான்ஸ், இப்போது யதேச்சாதிகாரத்தையோ அல்லது வேறெதாவது அவல ஆட்சி முறையையோ அமைப்பதற்காகக் குடியரசையும் தூக்கிலிடத் துணிந்து விடுமோ என்று தோன்றுகிறது!

இன்றைய பிரான்ஸைக் குடியரசு என்று கூறுவதைக் காட்டிலும் குழப்படி அரசு என்று வர்ணிப்பதே பொருத்தமாக இருக்கும்.

இந்த உலகிலே நாளொரு மந்திரி சபை ராஜிநாமா செய்வதும் பொழுதொரு மந்திரி சபை ஏற்படுவதுமான அதிசயத்தைப் பிரான்ஸ் தேசத்தைத் தவிர வேறெங்குமே காண முடியாது.

ஒவ்வொரு வருஷத்திலும் பிரான்ஸில் எத்தனை மந்திரி சபைகள் ராஜிநாமா செய்தன என்ற ருசிகரமான புள்ளி விவரங்களைச் செய்தி ஸ்தாபனங்கள் அடிக்கடி உலக நாடுகளுக்கு அறிவிப்பது வழக்கம்.

எனவே ஒரு காலத்தில் குடியரசுக்குத் தாயகமாக விளங்கிய பிரான்ஸ், இப்போது குழப்படி அரசுக்குத் தாயகமாக விளங்குகிறது என்பதற்கு அங்கு அடிக்கடி—நாள் கணக்கிலும் வாரக் கணக்கிலும் வீழ்ச்சியுறும் அல்பாயுள் மந்திரி சபைகளே போதிய சான்றாகும்.

அவ் விஷயமாக யாருக்காவது கொஞ்ச நஞ்சம் சந்தேகமிருப்பினும் சமீபத்தில் புதுச்சேரி, காரைக்கால், மாஹி முதலிய பிரஞ்சு இந்தியப் பிரதேசங்களில் நிகழ்ந்த தேர்தல் அலங்கோலங்களுக்குப் பிறகு அந்தச் சந்தேகமும் நிவர்த்தியாகி இருக்கும் என்பது நிச்சயம்!

* * *

இந்தியாவிலிருந்து சென்ற வருஷம் ஆகஸ்டு மாதம் பிரிட்டிஷார் வெளியேறிய உடனேயே பிரஞ்சுக்காரர்களும் இந்தியாவில் தங்களுடைய ஆதிக்கத்தின் கீழுள்ள பிரதேசங்களை விட்டு விட்டு வெளியேறியிருக்கவேண்டும். அவ்வாறு வெளியேறியிருந்தால் மிகவும் கண்ணியமாகவும் கௌரவமாகவும் இருந்திருக்கும்.

அவ்விதம் செய்யத் தவறிய பிரான்ஸ், அத்துடன் நிற்காமல் இப்போது தவறுமேல் தவறு செய்யத் துணிந்திருக்கிறது. ஓர் அரசாங்கத்தின் பெருமைக்கும் புகழுக்கும் ஒவ்வாத காரியங்களில் ஈடுபட்டிருக்கிறது. முப்பது கோடி மக்களின் மதிப்புக்குரிய சுதந்திர இந்திய அரசாங்கத்தின்மீது ஆதாரமின்றிப் புகார் கூற முற்பட்டிருக்கிறது.

இந்திய சர்க்கார் கவனிப்பாளர்களின் முன்னிலையில் தேர்தல்களை நடத்த வேண்டும் என்பதற்காக அவைகளை ஒத்திப் போட்ட பிரஞ்சு சர்க்கார், பிறகு திடீரென்று மனம் மாறிச் சென்ற இருபத்து நாலாந்தேதி தேர்தல்களை நடத்தினர். அவைகளை ஒத்திப்போட வேண்டும் என்ற இந்திய சர்க்காரின் வேண்டுகோள் அவர்களுடைய செவிகளில் ஏறவில்லை.

தேர்தல் நடவடிக்கைகளிலும் எண்ணிக்கையற்ற மோசடிகளுக்குப் பிரஞ்சு இந்திய அதிகாரிகள் இடம் கொடுத்து விட்டார்கள். தேர்தல்களை நேரில் பார்வையிட்ட டாக்டர் சுப்பராயன், அகில இந்திய காங்கிரஸ் காரியக் கமிட்டியின் காரியதரிசி டாக்டர் ராஜகுமார் போன்ற பிரமுகர்கள் அந்த மோசடிகளை யெல்லாம் அம்பலமாக்கியிருக்கின்றனர்.

ஜனநாயக முறைப்படி தேர்தல்கள் நடக்குமென்று பிரஞ்சு இந்திய கவர்னர் கூறிய உறுதி ஏட்டுச் சுரைக்காய் ஆகிவிட்டது. தேர்தல்களில் தடியரசு முறைகளே தாண்டவமாடின.

எனவே புதுச்சேரியில் காங்கிரஸ் அபேட்சகர்களோ, வாக்காளர்களோ வெளியில் தலைகாட்டவும் முடியவில்லை. ஏராளமான காங்கிரஸ் வோட்டர்களுடைய பெயர்களே தேர்தல் ஜாபிதாவில் இல்லை. மற்றக் கட்சியைச் சேர்ந்தவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் இஷ்டப்படி அடையாளச் சீட்டுகள் பெற்றுப் பல வோட்டுகள் போடுவது சாத்தியமாயிற்று.

இந்திய ஐக்கிய எதிர்ப்பு வாதிகளும் பிரஞ்சு சர்க்காரின் தாசர்களும் இட்

தேசமட்டமாயிற்று. மற்றவர்களுக்குப் பாதுகாப்பு எதுவும் இராமற் போனதால், பலர் குண்டர்களின் பலாத்காரத்துக்கும் ஆளாக நேர்ந்தது.

வயது வந்தவர் யாவருக்கும் வோட்டுரிமை அளிக்கப்பட்டும் கூட, குண்டர்களின் ஆர்ப்பாட்டங்களுக்குப் பயந்து ஜனங்கள் வெளியே தலை காட்டாததால் தெருக்களெல்லாம் மனித சஞ்சாரமற்றிருந்தனவாம். கண்ணியமுள்ளவர் எவரும் போலிங் ஸ்டேஷனுக்கு அருகில்கூடச் செல்ல முடியவில்லையாம்!

தேர்தல் மோசடிகளைச் சகியாமல் காரைக்கால் காங்கிரஸ் கட்சியினர் தேர்தல்களில் கலந்து கொள்ளாமல் அடியோடு பகிஷ்கரித்து விட்டார்கள்.

மாஹியிலோவெனில், ஜனசமுத்திரம் பொங்கியெழுந்து அங்கு சர்க்கார் நிர்வாகத்தையே முறியடித்து விட்டது!

அதன் பயனாக அங்கு ரத்தக்களரி எதுவுமின்றிச் சில நிமிஷ நேரத்தில் ஜனநாயக அரசாங்கம் அதாவது உண்மையான குடியரசு ஏற்பட்டது.

அந்தக் குடியரசைக் குலைக்கப் பிரஞ்சு யுத்தக் கப்பல் மாஹிக்கு வந்திருக்கிறதாம்?

* * *

"பிரான்ஸ் புதுக்கோட்டையல்ல, ஹைதராபாத்துமல்ல" என்று பிரஞ்சு இந்திய அதிகாரி ஒருவர் மீசையை முறுக்கிக் கொண்டு இந்தியாவை எச்சரித்திருக்கிறார்.

அந்த அதிகாரியின் கூற்றுக்கு இந்தியா அளிக்கும் பதில் இதுதான்:

சென்ற உலக மகா யுத்தத்தில் மகத்தான வெற்றிபெற்ற பிரிட்டனைப் பணிய வைக்கும் சக்தி வாய்ந்த இந்தியா, பத்தே நாளில் ஹிட்லரிடம் தோல்வியடைந்த பிரான்ஸைக் கண்டு பயந்து விடாது.

இந்த உண்மையைத் தேர்தல்களுக்குப் பின்னராவது பிரஞ்சு சர்க்கார் பிரதிநிதிகள் அறிந்துகொள்ள முற்பட்டிருப்பதும் அவர்களின் முறுக்கு தளர்ந்திருப்பதும் திருப்திகரமான விஷயமாகும்.

"தேர்தல் முடிவுகளுக்கும் பிரஞ்சு இந்தியாவின் எதிர்காலத்துக்கும் சம்பந்தம் இல்லை. அது இந்திய சர்க்கார், பிரஞ்சு சர்க்கார், பிரஞ்சு இந்திய ஜனங்களின் உண்மையான பிரதிநிதிகள் மூன்று சாராரும் சேர்ந்து சமரசமாகவும் சிநேக பாவத்துடனும் தீர்த்துக்கொள்ள வேண்டிய விஷயம்" என்று இந்தியாவுக்கு வந்துள்ள பிரஞ்சு சர்க்காரின் விசேஷ அரசியல் ஆலோசகர் குறிப்பிட்டிருக்கிறார்.

இதிலிருந்து, பிரஞ்சு இந்தியாவில் குட்டி அதிகாரிகளின் குயுக்தி வேலைகள் நிரந்தரமான பலன் எதையும் அளித்து விடவில்லையென்று ஏற்படுகிறது.

சூதும் வாதும் சூழ்ச்சியும் மோசமும் உலக சரித்திரத்தில் எப்போதாவது நிரந்தரமான பலனைக் கொடுத்திருப்பதுண்டா?

நெஞ்சம் கலங்கும் இலங்கை இந்தியர்

இலங்கை சர்க்காரின் தற்போதைய நிர்வாகிகள் இருக்கிறார்களே, அவர்களெல்லோரும் பலே கெட்டிக்காரர்கள் என்பதில் சந்தேகமில்லை.

ஆனால், அவர்கள் தங்களுடைய கெட்டிக்காரத் தனத்தைத் துஷ்பிரயோகம் செய்ய முற்பட்டிருப்பதுதான் வருந்தத்தக்கதாகும்.

ஏனெனில் அவர்கள் தங்களுடைய புத்திசாலித்தனத்தை ஆக்க வேலைகளில், அதாவது இலங்கையர்களின் முன்னேற்றத்துக்கான காரியங்களில் உபயோகித்திருந்தால் எவ்வளவோ மேன்மையாக இருந்திருக்கும். அதை விடுத்து அவர்கள் தங்களுடைய மேதாவித்தனத்தை அழிவு வேலைகளில், அதாவது இலங்கையின் சுபிட்சத்துக்காகச் சென்ற ஒரு நூற்றாண்டுக்கு மேலாகப் பாடுபட்ட அப்பாவிகளான ஏழை இந்தியத் தொழிலாளர்களின் உரிமைகளுக்கு உலை வைக்கும் காரியங்களில் காட்ட முற்பட்டிருக்கிறார்கள்.

சமீபத்தில் இலங்கைப் பார்லிமெண்டில் நிறைவேறிய இலங்கைப் பிரஜா உரிமை மசோதாவும் குடியேற்றத் தடை மசோதாவும் அநீதியானவை என்று இலங்கைப் பார்லிமெண்டில் பலர் எடுத்துக் காட்டினார்கள்: பூகோளம், பண்பாடு முதலிய பல விஷயங்களிலும் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இருந்து வரும் தொடர்பைப்

பற்றிக் குறிப்பிட்டார்கள். தர்மத்தின் பெயரிலும் புத்த பகவானின் பெயரிலும் மன்றாடி முறையிட்டார்கள்.

அவற்றைக் கண்டித்து இந்தியர்களின் பிரம்மாண்டமான கூட்டமொன்றும் கொழும்பில் நடைபெற்றது.

இப்போது சென்னை அசெம்பிளியில் அவற்றைக் கண்டித்தும், இலங்கை இந்தியர்களில் பெரும்பாலோரும் சென்னை மாகாண வாசிகளாதலால் அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும்படி இந்திய சர்க்காரைக் கேட்டுக் கொண்டும் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேறியிருக்கிறது.

* * *

உலகிலே கண்டும் கேட்டும் இராத விசித்திரமான, அநீதியான அந்த மசோதாவின்படி எட்டு லட்சம் இந்தியர்கள் உள்ள இலங்கையில் இன்னும் நூறு ஆண்டுகள் கழிந்து 2948-ல் 2500 இந்தியர்களுக்குப் பிரஜா உரிமை கிடைக்குமெனில், அந்த மசோதாவின் மற்ற அம்சங்களைப் பற்றி விவரிக்க வேண்டிய அவசியமே இல்லை!

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் உள்ள நட்புக்கு யாதொரு பங்கமும் நேராமல் இருக்கவேண்டும் என்பது இலங்கை சர்க்கார் நிர்வாகிகளின் எண்ணமாக இருக்கும் பட்சத்தில், அவர்கள் அவ்வளவு மோசமான மசோதாக்களைத் தயாரித்தே இருக்க மாட்டார்கள்.

பிரிட்டன், அமெரிக்கா போன்ற வல்லரசுகள் கூட இந்தியாவின் நட்பையும் ஒத்துழைப்பையும் பெறுவதில் அக்கறை கொண்டிருக்கும் போது, இலங்கை, பர்மா முதலிய நாடுகள் இந்தியாவின் விரோதத்தைச் சம்பாதித்துக் கொள்ளும் காரியங்களில் ஈடுபடுவதைப் பார்க்க மிகவும் ஆச்சரியமாக இருக்கிறது.

இலங்கைப் பிரதமர் டாக்டர் சேனநாயகா சில தினங்களுக்கு முன் இந்தியா வழியாகப் பிரிட்டனுக்குச் சென்றபோது, இலங்கையிலுள்ள இந்தியர்கள் ஆனந்தமாக இருப்பதாயும் சில விஷமிகள் மாத்திரம் வீணாகக் கிளர்ச்சி செய்து வருவதாயும் கூறிவிட்டுப் போனார்.

இலங்கைப் பிரதமரின் மேற்படி கூற்று இந்தியர்கள் இடைவிடாது கேட்டுப் புளித்துப் போன பழைய பல்லவியாகும்.

இந்தியாவில் யாரும் சுதந்திரத்தை விரும்பவில்லை யென்றும், சில கலகக்காரர்கள் மாத்திரம் வீணாகக் கிளர்ச்சி செய்து வருகிறார்களென்றும் பிரிட்டிஷார் கூறிவந்தனர்.

இப்போது பிரஞ்சு இந்திய அதிகாரிகள் என்ன கூறுகிறார்கள் தெரியுமா?

பிரஞ்சு இந்தியப் பிரதேசங்களில் எல்லாம் அமைதியாக இருப்பதாயும், ஆனால் வெளியார் சிலர் வந்து வீண் கலகம் செய்து வருகிறார்களென்றும் பிரஞ்சு அதிகாரிகள் கூறுகின்றனர்.

ஜனங்களின் நியாயமான உரிமைகளை மறுக்கும் யதேச்சாதிகாரிகளின் வழக்கமான பல்லவியையே புதிதாக யதேச்சாதிகாரம் படைத்துள்ள இலங்கைப் பிரதமரும் பாடியிருக்கிறார்!

* * *

இலங்கை இந்தியாவின் விரோதத்துக்கு ஆளாகாமல் இருக்க வேண்டுமாயின், கீழ்க்கண்ட நியாயமான காரியங்களை உடனே செய்ய வேண்டியது அத்தியாவசியமாகும்.

தொடர்ந்து ஐந்து வருஷகாலம் இலங்கையில் வசித்தவர்களும், நிரந்தரமாக வசிக்க விரும்புகிறவர்களுமான இந்தியர்களுக்குப் பூரண பிரஜா உரிமை அளிக்க வேண்டும். வம்சாவளிப் பிரஜை, ரிஜிஸ்டர்ட் பிரஜை என்ற விபரீத பாகுபாடுகளை அறவே ஒழித்துவிட வேண்டும்.

இலங்கையிலுள்ள பெரும்பான்மையான இந்தியர்கள் அறியாமையில் ஆழ்ந்து கிடக்கும் ஏழைத் தொழிலாளர்களாதலால் பிரஜா உரிமையைப் பெறும் சட்டங்கள் சங்கடமோ, சிக்கலோ, செலவோ இராமல் இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும்.

இலங்கையைத் தாய்நாடாகக் கொண்டுள்ள அல்லது தாய்நாடாகக் கொள்ள விரும்பும் இந்தியர்கள் பூரண பிரஜா உரிமை பெறுவதற்கு எவ்வித இடையூறும் இருக்கக் கூடாது.

இலங்கை இந்தியர்கள் இந்தியாவிலுள்ள தங்களுடைய உற்றார் உறவினருடன் தொடர்பு வைத்துக் கொள்ளவோ, அவர்களின் ஜீவனத்துக்குத் தொகை அனுப்பவோ தடை எதுவும் இருக்கக் கூடாது.

இலங்கை விமானப் போக்கு வரத்து சம்பந்தமாக சமீபத்தில் இலங்கைக்கு இந்திய சர்க்கார் எவ்வளவு தாராளப் பெருந்தன்மையுடன் விட்டுக் கொடுத்தார்கள் என்பதை இலங்கை சர்க்கார் எண்ணிப் பார்த்து, இந்தியாவிடமும் இலங்கையின் இன்றைய செழுமைக்குக் காரணஸ்தர்களான இந்தியத் தொழிலாளர்களிடமும் நன்றியுடன் நடந்து கொள்வார்களாக.



இருபத்திரண்டாம் அத்தியாயம்

கதவு திறந்தது!

நள்ளிரவு பன்னிரண்டு மணி அடித்தது. சீதா ஒன்று, இரண்டு, மூன்று என்று எண்ணி வந்தாள். பன்னிரண்டு அடித்ததும், "சரி; இன்னும் ஒரு மணி நேரம் இருக்கிறது. அது வரையில் தூங்காமலிருக்க வேண்டும்!" என்று எண்ணிக் கொண்டாள். ஆனால் அப்படியொன்றும் தூங்கிப் போய்விடுவோம் என்கிற பயம் கிடையாது. அன்றிரவு நிகழ்ந்த சம்பவங்களுக்குப் பிறகு அவ்வளவு சுலபமாகத் தூக்கம் வந்துவிடுமா என்ன? வராதுதான். அன்றியும், தூங்கினால் என்னென்ன பயங்கரமான சொப்பனங்கள் எல்லாம் காணுவோமோ, என்னமோ? இராத்திரி பூராவும் தூங்காமல் இருந்துவிட்டாலும் நல்லதுதான். ஆனால் அதுமாதிரியே மற்றவர்களும் தூங்காமலிருந்தால் என்னத்தைச் செய்வது? அவர்களுக்கும் தூக்கம் வருவது கஷ்டமாகத்தான் இருக்கும். அடுத்த அறையில் படுத்திருக்கும் இவரும் அம்மாஞ்சியும் இன்னும் ஏதோ பேசுகிறார்கள். பன்னிரண்டு மணிக்கு மேலே பேச்சு என்ன வந்தது? பேசாமல் தூங்கக் கூடாதோ? — இதோ பக்கத்தில் படுத்திருக்கும் தாரிணி அக்காளும் தூக்கம் வராமல் படுக்கையில் புரளுகிறாள். 'அக்கா' என்ன வந்தது, அக்கா? அவள் யாரோ, நாம் யாரோ? 'அக்கா' உறவு கொண்டாடுவதை விட்டுவிட வேண்டியதுதான்! அவள்தான் நம்மை எதற்காக 'பஹின்' என்றும், 'சகோதரி' என்றும் அழைக்க வேண்டும்? அவள் என்ன சாதியோ, என்ன குலமோ? ஒருவேளை உண்மையில் ரணியா பேகத்தின் மகள் தானோ, என்னவோ?

நினைக்க நினைக்க ஆச்சரியமாயிருக்கிறது. இப்படியெல்லாம் கதைகளில் நடக்கும் என்று படித்திருக்கிறோம். உண்மையிலேயே நடக்குமென்று யார் நினைத்தார்கள்! மகள் இங்கே படுத்திருப்பது தெரியாமல், தாயார் நேரல்லேப்புறத்து அறையில் படுத்திருக்கிறாள். தாயார் இதே வீட்டில் இருப்பது தெரியாமல் மகள் தூங்குகிறாள். ஒருவேளை தெரிந்து விட்டால்? — அதுவும் தாயார் கையில் இரத்தக் கறையுள்ள கத்தியுடன் வந்து ஒளிந்து கொண்டிருக்கிறாள் என்று மகளுக்குத் தெரிந்தால்?

இதெல்லாம் தனக்குத் தெரிந்திருக்கும்போது சொல்லாமல் மறைத்து வைத்திருப்பது சரியா? ஆனால் எப்படிச் சொல்ல முடியும்? தன்னுடைய புருஷன் மட்டும் தனியாக இருந்தாலும் சொல்லலாம். மற்ற இருவர் இருக்கும்போது எப்படிச் சொல்வது?

"மணி இரண்டு அடித்து உன்னை எழுப்புவதற்குச் சற்று முன்னால், சில நிமிஷத்துக்கு முன்னால், தோட்டத்தின் வழியாக யாரோ போனதைப் பார்த்தேன். சீதா! இந்த அறையில் இருந்தது ஒருவரா, இருவரா?"

"ஒருவர்தான்! நீங்கள் ரஸியாபேகம் என்று சொன்னீர்களே, அந்த அம்மாள் தான் இங்கே இருந்தாள். ஒருவரா இரண்டு பேரா என்று எதற்காகக் கேட்டீர்கள்?"

"இரண்டு பேர் போனதை நான் பார்த்தேன், சீதா! யாரோ ஒருவர் வந்து ரஸியா பேகத்தை அழைத்துப் போயிருக்க வேண்டும்."

சீதாவுக்குத்தான் நிலைக் கண்ணாடியில் கண்ட காட்சி நினைவுக்கு வந்தது. பரபரப்புடன், "அக்கா! அந்த இன்னொருவர் யார்?" என்று கேட்டாள்.

"எனக்குத் தெரியாது. தாடியும் துருக்கிக் குல்லாவும் செக்கச் செவந்த கண்களும் உள்ள முகம் ஒன்றைப் பார்த்தேன். அவர் முஸ்லிமோ, அல்லது முஸ்லிம் வேஷம் தரித்தவரோ, தெரியாது. யோசித்துப் பார்க்கும்போது எங்கேயோ, எப்போதோ பார்த்த முகமாகத் தோன்றுகிறது" என்றாள் தாரிணி.

"எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது" என்று சீதா கூறினாள்.

"உனக்கும் தோன்றுகிறதா? பார்த்தாயா, என்ன?"

"மணி இரண்டு அடித்துக் கண்ணை விழித்ததும், எதிரில் நிலைக் கண்ணாடியில் ஒரு முகம் தோன்றியது. உடனே அது மறைந்து விட்டது. ஒரு வேளை மனப்பிராந்தியாயிருக்கலாம் என்று நினைத்தேன். நீங்கள் சொல்லுவதிலிருந்து அது நிஜ மனிதனுடைய முகம் என்று ஏற்படுகிறது."

"அம்மா மட்டும் போவதைப் பார்த்திருந்தால், என்னால் பொறுக்க முடிந்திராது. 'அம்மா!' என்று கத்தியிருப்பேன். பின்னோடு இன்னொருவரும் இருந்தபடியால் பேசாதிருந்தேன்."

"அந்த ஸ்திரீ உண்மையில் உங்கள் அம்மாதானா? என்னால் நம்பவே முடியவில்லையே!......ஆனால் நாம் எதற்காக இங்கேயே நின்று கொண்டு பேச வேண்டும்? குழந்தை விழித்துக் கொண்டு அழுதாலும் அழுவான். புருஷர்கள் விழித்துக் கொண்டால் நமக்கு என்னமோ நேர்ந்து விட்டது என்று காபரா அடைவார்கள். உள்ளே போய்ப் படுத்துக்கொண்டே பேசலாம். எனக்கு இன்றைக்கு இனிமேல் தூக்கமே வராது. உங்களைப் பற்றிய எல்லா விவரமும் சொல்லிவிட வேண்டும்!" என்று சொன்னாள் சீதா.

இருபத்துமூன்றும் அத்தியாயம்

தாரிணியின் கதை

"அக்கா! அடியிலிருந்து உங்கள் கதையை முழுதும் சொல்லிவிட வேண்டும். கேட்பதற்கு எனக்கு மிகவும் ஆவலாயிருக்கிறது!" என்றாள் சீதா.

இருவரும் அவரவர்களுடைய படுக்கையில் உட்கார்ந்திருந்தார்கள். தாரிணி கேட்டுக் கொண்டபடி அன்று முன்னிரவில் நடந்ததையெல்லாம் சீதா தனக்குத் தெரிந்த வரையில் சொல்லியாகி விட்டது. இப்போது தாரிணியின் முறை வந்திருந்தது.

தாரிணி ஒருநெடிய பெருமூச்சுவிட்டு விட்டுச் சொன்னதாவது:—"பழைய காலத்துக் கதைகளில் தங்களுடைய கதைகளைத் தாங்களே சொல்லும் கதாநாயகிகள் 'நான் பிறந்த கதையைச் சொல்லவா? வளர்ந்த கதையைச் சொல்லவா?' என்று ஆரம்பிப்பது வழக்கம். ஆனால் பிறந்த கதையை நான் சொல்ல முடியாது. அதைத் தெரிந்து கொள்வதற்காகத் தான் ரஸியா பேகத்தைத் தேடிக் கொண்டிருக்கிறேன். கடைசியாக, அவளைக் கண்டு பிடித்து விட்டதாக எண்ணிய சமயத்தில் கைநழுவிப் போய் விட்டாள். அதுவும் நல்லது தான். இப்பேர்ப்பட்ட பயங்கர சம்பவம் நடந்திருக்கும் சமயத்தில் என்னுடைய பிறப்பைப் பற்றி அவளிடம் நான் என்ன கேட்க முடியும்? அவள்தான் என்னத்தைச் சொல்ல முடியும்!"



"அவள் உண்மையில் முஸ்லிம் ஸ்திரீதானா, அக்கா! அவளுடைய உண்மைப் பெயர் ரஸியா பேகம் தானா?" என்று சீதா கேட்டாள்.

"இல்லை, அந்த விஷயத்தை அப்புறம் சொல்கிறேன். எனக்கு நினைவு தெரிந்த காலத்திலிருந்து அவளைத்தான் என்னுடைய தாயார் என்று நினைத்திருந்தேன். உலகத்திலேயே எந்தத் தாயாரும் அவ்வளவு அன்பாக மகளை வளர்த்திருக்க முடியாது. அப்படி என்னை உயிருக்குயிராக எண்ணிப் பாதுகாத்து வந்தாள். ஆனால் உலகத்திலுள்ள மற்றப் பெண்களுக்கும் எனக்கும் ஒரு வித்தியாசம் உண்டு என்பது என்னுடைய சிறு பிராயத்திலேயே எனக்குத் தெரிந்துவிட்டது. என்னுடைய தாயார் உலகத்திலேயுள்ள மற்ற ஸ்திரீகளைப்போல் புருஷனுடன் வாழ்ந்து குடித்தனம் செய்யவில்லை. யாருக்கோ பயந்து கொண்டு மறைந்து ஒளிந்து வாழ்வதாகத் தெரிந்தது. அடிக்கடி என் தாயாரைப் பார்க்க ஒரு மனிதர் வந்து கொண்டிருந்தார். அவரை நான் 'அப்பா' என்று கூப்பிடுவது வழக்கம். இந்த வழக்கம் எப்படி வந்தது, — தானாக வந்ததா அல்லது யாராவது சொல்லிக் கொடுத்து வந்ததா என்று எனக்குத் தெரியாது. எனக்கு நினைவு தெரிந்தது முதல் அவரை 'அப்பா' என்றே நான் அழைத்து வந்தேன். அவரும் அம்மாவும் சில சமயம் ஒருவருக்கொருவர் ரொம்பப் பிரியமாயிருப்பார்கள். சில சமயம் புலி கரடிகளைப் போலச் சண்டை போட்டுக் கொள்வார்கள். அவர்கள் உலகத்தில் எல்லாரையும் போலக் கலியாணம் செய்து கொண்ட கணவனும் மனைவியும் அல்ல என்று எனக்குத் தெரிந்திருந்தது. ஆனாலும் அவர்தான் என்னுடைய தகப்பனார் என்று நம்பிக் கொண்டிருந்தேன். இரண்டு பேரும் அடிக்கடி சண்டை யிட்டபோதிலும் ஒரு விஷயத்தில் ரொம்பவும் ஒற்றுமையா யிருந்தார்கள். அதாவது

என்னிடம் பிரியமாயிருக்கும் விஷ
யத்தில்தான். நான் ஏதாவது ஒரு
பொருள் வேண்டும் என்று
சொல்லி விட்டால் போதும்.
உடனே அது வந்து சேர்ந்துவிடும்.
எனக்கு ஏதாவது கொஞ்சம்
உடம்பு சரிப்படா விட்டால்
போதும். இரண்டு பேரும் எனக்
காக உயிரைக் கொடுக்கத் தயாரா
யிருப்பார்கள். என்னுடைய தகப்
பனரின் பாஷை தமிழ். என் தாயா
ரின் பாஷை மகாராஷ்டிரம்.
ஆனல் இரண்டு பேரும் தமிழிலே
தான் சம்பாஷிப்பார்கள். ஆகை
யால் எனக்குத் தமிழ் பாஷை
பேச நன்ருய் வந்து விட்டது.
தாயாரின் பாஷையான மகாராஷ்
டிரமும் வந்தது. பம்பாயில்
வசித்தபடியால் ஹிந்தி பாஷை
தானுக வந்தது. என்னைக் கான்
வெண்ட் ஸ்கூலில் படிக்க வைத்த
படியால் இங்கிலீஷ் பாஷையும்
கற்றுக் கொண்டேன். என்னை
வளர்ப்பதற்கும் படிக்க வைப்ப
வற்கும் அவர்கள் கூசாமல் பணம்
செலவு செய்தார்கள். இத்தனைக்
கும் அவர்களிடம் பணம் கொட்
டிக் கிடக்கவில்லை. நான் சிறுமியா
யிருந்தபோது என் தாயாரிடம்
விலை உயர்ந்த ஆபரணங்கள்
ஏராளமாக இருந்தன. அவை
எப்படி வந்தன என்று எனக்குத்
தெரியாது. கேட்கவும் எனக்கு
மனம் வராது. அந்த நகைகளை
யெல்லாம் என் தாயார் ஒவ்வொன்
ருக என் தகப்பனரிடம் கொடுத்து
விற்றுக் கொண்டுவரச் சொல்
வாள். சில சமயம் அப்பாவும்
பணம் கொண்டு வருவார். அதை
வாங்கிக் கொள்ள முடியாது
என்று அம்மா பிடிவாதம் பிடிப்
பாள். ஏனெனில் அப்பாவுக்கு
வருமானம் அதிகம் இல்லை யென்
றும் அவர் காப்பாற்ற வேறொரு
குடும்பம் இருந்ததென்றும் அம்மா
வுக்குத் தெரிந்திருந்தது. சில சம
யம் அம்மாவுக்குத் தெரியாமல்
அப்பா எனக்குத் துணிமணி
வாங்கிக்கொண்டு வந்து கொடுத்து
விடுவார். தெரிந்த பிறகு அம்மா
அவரைச் சண்டை பிடிப்பாள்.
இந்த விதமாக என்னுடைய



வாழ்க்கை நடந்து கொண்டிருந்தது. கான்வெண்ட் பள்ளிக்கூடத்தில் படித்தபோது நிருபமா என்ற பெண் எனக்குச் சிநேகிதி ஆனாள். என்னுடைய பிறப்பு வளர்ப்பைக் குறித்து நினைத்து நான் சோகத்தில் ஆழ்ந்திருக்கும் போதெல்லாம் நிருபமாவின் சிநேகந்தான் எனக்கு உற்சாகம் ஊட்டி வந்தது....”

“ஆக்ராவில் பார்த்தோமே, அவர் தானே? எனக்கு அவரை ரொம்பப் பிடித்திருந்தது. சிநேகிதம் என்றால் அப்படியல்லவா இருக்கவேண்டும்?” என்று குறுக்கிட்டுச் சொன்னாள் சீதா.

“ஆம், அவள்தான்! எங்கள் இருவருக்கும் ஒரே வயது. எங்களுக்கு வயதாக ஆக, வருங்கால வாழ்க்கையைப் பற்றிச் சிந்திக்கவும் பேசவும் ஆரம்பித்தோம். ஒருவருக்கொருவர் அந்தரங்கத்தை வெளியிட்டுக் கொண்டோம். இரண்டு பேரும் கலியாணமே செய்து கொள்வதில்லையென்றும் தேச சேவைக்கே எங்கள் வாழ்நாளை அர்ப்பணம் செய்வது என்றும் தீர்மானம் செய்தோம். ஆனால் நிருபமா அந்தத் தீர்மானத்திலிருந்து மாறிவிட்டாள். சீதா! நீதான் பார்த்தாயே? நிருபமாவை அவ்வளவு இலட்சணமானவள் என்று உலகத்தார் சொல்ல மாட்டார்கள். இதை நிருபமா உணர்ந்திருந்தபடியால் தனக்குக் கலியாணமே வேண்டாம் என்று சொல்லி வந்தாள். ஆனால் வெளி அழகை மட்டும் பாராமல் அகத்தின் அழகைத் தெரிந்து பாராட்டக்கூடிய ஒருவர் வந்து சேர்ந்தார். அவரைக் கலியாணம் செய்து கொண்டு இப்போது சந்தோஷமாயிருக்கிறாள். அவள் பாக்கியசாலி.”

தாரிணியின் கண்களில் அப்போது கண்ணீர் துளிர்த்ததைச் சீதா பார்த்தாள். அவளுடைய மனம் கனிந்தது.

“அக்கா! நிருபமாவைப்போல் நீங்களும் ஒரு நாள் பாக்கியசாலியாவீர்கள்” என்றாள்.

“அவளுக்கும் எனக்கும் வித்தியாசம் உண்டு, சீதா! என்னுடைய குறை என்னுடைய பிறப்பைப் பற்றியது. தாயாரும் தகப்பனாரும் இன்னார் என்று தெரியாத என்னைக் கலியாணம் செய்து கொள்ளக் கூடிய புருஷன் இந்த நாட்டில் எங்கே இருக்கிறான்? அப்படி ஒருவன் இருந்து சம்மதித்தாலும், அவனுடைய பந்துக்கள் சம்மதிக்க வேண்டுமே? நம்முடைய தேசத்தில் கலியாணம் நடப்பது பந்துக்களின் சம்மதத்தைப் பொறுத்தல்லவா இருக்கிறது? அது போகட்டும். எனக்குக் கலியாணத்தில் இஷ்டம் இல்லை. இப்போதுமில்லை; எப்போதும் இருக்கவில்லை. தேச சேவையில் உண்மையாகவே ஆர்வம் இருந்தது. பம்பாயில் காந்திமகாத்மாவின் உப்பு சத்தியாக்கிரஹ இயக்கம் நடந்தபோது நிருபமாவும் நானும் அதிலே சேர்ந்தோம். எங்களுடைய சிறு பிராயத்தை முன்னிட்டு எங்களைச் சிறைக்கு அனுப்பவில்லை. நகரத்துக்கு வெளியிலே பல தடவை கொண்டு விட்டார்கள். ஒவ்வொரு தடவையும் நானும் நிருபமாவும் சேர்ந்தேயிருந்தபடியால் எங்களுக்குப் பெரிய தமாஷாயிருந்தது. அந்த இயக்கம் முடிவடைந்ததும் கராச்சி காங்கிரஸுக்குப் போயிருந்தோம்...”

இவ்விடத்தில் தாரிணி நிறுத்திச் சற்று நேரம் மௌனமாயிருந்தாள். ஒரு பெருமூச்சு விட்டு விட்டு மேலே கூறினாள்:—“பிறகு இந்தப் புண்ணிய பாரத பூமியைச் சுற்றிப் பார்க்க வேண்டும் என்ற ஆசை உண்டாயிற்று. காஷ்மீரம் முதல் சென்னை வரையில், கராச்சியிலிருந்து கல்கத்தா வரையில் ஊர் ஊராகச் சென்று பார்த்தோம். பிற்பாடு பீஹார் பூகம்பத்தைப் பற்றிய பயங்கரச் செய்திகள் வந்து இந்த தேசத்தையே ஒரு குலுக்குக் குலுக்கி விட்டன. பம்பாயிலிருந்து பூகம்ப சேவை செய்வதற்குப் புறப்பட்ட தொண்டர் படையில் நானும் நிருபமாவும் சேர்ந்து சென்றோம். பூகம்பத்தில் கஷ்டப்பட்டவர்களுக்குச் சேவை செய்து கொண்டிருந்த காலத்தில் எங்கள் இருவருடைய வாழ்க்கையிலும் ஒவ்வொரு முக்கிய சம்பவம் நிகழ்ந்தது. நிருபமா வேணிப்பிரஸாதைச் சந்தித்தாள்; சில காலத்துக்குப் பிறகு அவரைத் தன் வாழ்க்கைத் துணைவராகக் கொண்டாள்!” என்று தாரிணி நிறுத்தினாள்.

“அக்கா! மேலே சொல்லுங்கள். முக்கியமான இடத்தில் கதையை நிறுத்தி விட்டீர்களே? நிருபமா தேவியின் வாழ்க்கையில் திருமணம் நிகழ்ந்தது; உங்களுடைய வாழ்க்கையில்

என்ன முக்கிய சம்பவம் நடந்தது?'' என்று சீதா ஆவலுடன் கேட்டாள்.

"நிருபமாவுக்கு மணம் நிகழ்ந்தது; எனக்கு மரணம் நிகழ்ந்தது!—ஏதோ பிதற்றுகிறேன் என்று நினைக்க வேண்டாம். சீதா! எனக்குத் தெரிந்தவர்கள் அனைவருக்கும் நான் செத்துப் போனவன் ஆனேன். அப்படி எல்லோரும் என்னை அடியோடு மறந்து விட வேண்டுமென விரும்பினேன். ஆகையால் நான் இறந்து விட்டதாக என்னுடன் சேவை செய்தவர்கள் நம்பும்படி செய்து விட்டு அங்கிருந்து கிளம்பினேன். இதற்குக் காரணம் நீ பத்திரிகையில் எந்தச் செய்தியைப் பார்த்து விட்டு என் தாயார் பேரில் சந்தேகப் பட்டாயோ, அதே செய்திதான். என் தாயார் கொலை செய்ய முயன்றதாகக் குற்றம் சாட்டப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டாள் என்கிற செய்தி அப்படி என் மனதைக் குழப்பி விட்டது. இந்த உலகத்திலேயே என்னுடைய பூரண அன்புக்கு உரியவளாயிருந்தவள் என் தாயார்தான். என் தகப்பனார் என்று நான் நினைத்துக் கொண்டிருந்தேனே, அவர் பேரில் எனக்கு எப்போதும் அவ்வளவு பிரியம் ஏற்பட்டதில்லை. ஆனால் தாயார்மீது உயிருக்குயிரான நேசம் நான் வைத்திருந்தேன். அவளுடைய நடத்தையைப் பற்றி எவ்வளவு குறைகள் என் மனதில் தோன்றினாலும் அவ்வளவையும் மீறி அவள் மீதுள்ள பிரியம் மேலோங்கி நின்றது. சில வருஷமாக அடிக்கடி அவளைப் பிரிந்து நான் நாடு சுற்றிய போதிலும் அவள் மீது எனக்கிருந்த பாசம் சிறிதும் குன்றவில்லை. அவளுக்கு இந்த அபகீர்த்தி,— இந்தக் கஷ்டம்,—நேர்ந்ததை என்னால் சகிக்க முடியவில்லை. ஒரு மகாராஜாவை அவள் கொல்ல முயற்சித்தது ஏன் என்பதை எண்ணிப் பார்த்தபோது என்னவெல்லாமோ உருப்படியில்லாத சந்தேகங்கள் தோன்றின. இப்படிப்பட்ட நிலைமையில் டில்லி ரயில்வே ஸ்டேஷனில் என் தகப்பனாரைச் சந்தித்தேன்.— அதுவரையில் என்னுடைய தகப்பனார் என்று நினைத்துக் கொண்டிருந்த மனிதரைத்தான். அவர் எனக்கு ஆறுதலாக இருக்கட்டும் என்று சில செய்திகளைச் சொன்னார். அவற்றில் ஒன்று என்ன தெரியுமா? அதுவரையில் என்னுடைய தாயார் என்று நான் நினைத்திருந்தவள் உண்மையில் என் தாயார் அல்ல என்றுதான். இது எனக்கு ஆறுதல் அளிப்பதற்குப் பதிலாகச் சொல்ல முடியாத துன்பத்தை அளித்தது. இருள் நிறைந்த என் வாழ்க்கையில் ஒரே ஒரு தீபம் சுடர்விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருந்தது; அதுவும் இப்போது அணைந்து போய் விட்டது. அவள் என் தாயார் இல்லையென்றால் இவரும் என் தகப்பனார் இல்லை. பின், நான் யாருடைய மகள்? என் தாய் யார்? தகப்பன் யார்? சீதா! என் வளர்ப்புத் தாய் அவ்வப்போது ஆத்திரமாகப் பேசிக் கொண்டிருந்த சில வார்த்தைகளுக்கு இப்போது பொருள் நன்றாகத் தெரிந்தது. அதிலிருந்து யாரோ ஒரு சுதேச சமஸ்தான ராஜாவின் மகள் நான் என்ற சந்தேகம் உதித்தது. என் வளர்ப்புத் தாய் அடிக்கடி ஜாகை மாற்றிக் கொண்டிருந்தது, ரமாமணி என்ற பெயரை மாற்றி ரஸியா பேகம் என்று வைத்துக் கொண்டது,— இதற்கெல்லாம் ஒருவாறு காரணம் தெரிந்தது. என் வளர்ப்புத் தந்தை இன்னொரு விஷயமும் சொன்னார். என் தாயார் 'ரஸியா பேகம்' என்று பெயர் வைத்துக் கொண்டதுடன், 'நான் இஸ்லாமிய மதத்தைச் சேர்ந்துவிடப் போகிறேன். அப்போது தான் ஆண் மக்களுடைய தொல்லையில்லாமல் தைரியமாக வாழ முடியும்!' என்று சொல்லிக் கொண்டிருப்பாள். கொலை செய்ய முயன்றதற்குச் சில நாளைக்கு முன்னால் உண்மையாகவே அவள் முஸ்லிம் மதத்திலே சேர்ந்து விட்டதாக என் வளர்ப்புத் தந்தை தெரிவித்தார். இதனாலெல்லாம் நான் அடைந்த மனவேதனையை என் வளர்ப்புத் தந்தை தெரிந்து கொள்ளவில்லை. அவருக்கு வேறொரு முக்கியமான காரியம் இருந்தது. எனக்குத் தைரியம் சொல்லி விட்டு, தன்னை மறுபடியும் சந்திப்பதற்கு இடமும் தேதியும் குறிப்பிட்டு விட்டு அவர் போனார். ஆனால் அவரை நான் சந்திக்கவே யில்லை. சந்திப்பதற்கு மனமும் இல்லை. தாயார் விடுதலை அடையும் காலத்தை எதிர்நோக்கிக் கொண்டிருந்தேன். குறிப்பிட்ட தேதியில் சிறைவாசலுக்குப்

போனேன். ஆனால் அன்று எந்த ஸ்திரீயும் விடுதலை யடையவில்லை. விசாரித்ததில், சிறைக்குள்ளேயும் ரஸியா பேகம் யாரையோ குத்திக் கொல்ல முயற்சித்ததாகவும், அவளைப் பைத்தியம் என்று சந்தேகித்துப் பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்கு மாற்றி விட்டதாகவும் தெரிந்தது. பைத்தியக்கார ஆஸ்பத்திரியை விசாரித்துக் கொண்டு போனேன். அங்கே பைத்தியம் தெளிந்து அவள் விடுதலையாகிப் போய்விட்டதாகத் தெரிந்தது. அன்று முதல் ரஸியா பேகத்தை நான் தேடிக் கொண்டிருக்கிறேன், சீதா! அதற்காகவேதான் ரஜனி பூருக்கு நான் வந்தேன். 'ரஜனிபூர் பைத்தியம்' என்று ஒரு ஸ்திரீ டில்லியில் சுற்றி அலைந்து கொண்டிருப்பதாக அங்கே கேள்விப் பட்டேன். அதன் பேரில் டில்லியிலும் தேடிக் கொண்டிருந்தேன். கடைசியாக அவளைச் சந்தித்திருக்கக் கூடிய தினத்தில் இம்மாதிரி பயங்கர சம்பவம் நடந்து விட்டது!..."

அந்த அறையில் சற்று நேரம் மௌனம் குடி கொண்டிருந்தது. பிறகு சீதா, "ரஸியா பேகம் உண்மையில் பைத்தியம் என்று நீங்களும் நினைக்கிறீர்களா?" என்று கேட்டாள்.

"எனக்கு எப்படித் தெரியும், சீதா! நான் அவளைப் பார்த்து நாலு வருஷத்துக்கு மேல் ஆயிற்று. ஒரு வேளை அவள் பைத்தியமாக இருந்தாலும் இருக்கலாம். அவளுடைய மனதில் ஏதோ ஒரு பெரிய துவேஷம் குடிகொண்டிருந்தது மட்டும் எனக்குத் தெரியும். துவேஷம் முற்றினால் வெறி, அப்புறம் பைத்தியந்தானே? பைத்தியம் என்று ஏற்பட்டால் ஒருவகையில் நல்லதுதான். போலீஸாரிடம் அவள் அகப்பட்டால் இன்று நடந்த சம்பவத்துக்காகத் தூக்குப் போட மாட்டார்கள். பைத்திய ஆஸ்பத்திரிக்கு அனுப்புவார்கள்!"

இதைக்கேட்ட சீதா அன்றைய தினம் எப்பேர்ப்பட்ட அபாயத்திலிருந்து தப்பினோம் என்று எண்ணிக் கொண்டாள். வெறியும் பைத்தியமும் ஒரு வேளை தன் பேரிலும் திரும்பியிருக்கலாமல்லவா? அதிலும் இராத்திரி இரண்டு மணிக்குத் தனியாகச் சென்று அறையைத் திறந்த போது அவள் திடுக்கிட்டிருந்தால்? கடவுள் தன்னைக் காப்பாற்றினார். குழந்தை வஸந்தி செய்த அதிர்ஷ்டந்தான்!

சற்றுப்பொறுத்து சீதா, "இன்னும் ஒரே ஒரு கேள்வி, அக்கா! நான் அணிந்திருந்த இரத்தின மாலையைப் பற்றிக் கேட்டீர்கள் அல்லவா? அதை ரஸியா பேகம் எனக்குக் கொடுத்திருக்க வேண்டும் என்று தானே கேட்டீர்கள்?" என்றாள்.

"ஆமாம்; அதை உறுதிப் படுத்திக் கொள்ளத் தான் கேட்டேன். என்னை வளர்த்த தாயார் ஒவ்வொன்றாகப் பல நகைகளை விற்ற பிறகு கடைசியாக மிஞ்சியிருந்த நகை அதுதான்!"

"அந்த இரத்தின மாலையையும் அதோடு இரண்டாயிரம் ரூபாய் பணத்தையும் அவள் எதற்காக எனக்குக் கொடுத்தாள்?"


"என்னை ஏன் கேட்கிறாய், சீதா? என் வாயினால் சொல்ல வேண்டுமா? நீயே ஊகித்துத் தெரிந்து கொள்ளக் கூடாதா?" என்றாள் தாரிணி.

சீதாவின் உள்ளம் அதை ஊகித்துத் தெரிந்து கொண்டு தானிருந்தது. இப்போது ஊகம் ஊர்ஜிதமாயிற்று. தாரிணி நினைவு வந்த நாளிலிருந்து 'அப்பா' என்று அழைத்துக் கொண்டிருந்த மனிதர் தன்னுடைய சொந்தத் தகப்பனார் தான். தன்னுடைய குழந்தைப் பிராயத்தில் வீட்டில் தரித்திரம் பிடுங்கித் தின்றதன் காரணமும் தன் தாயார் அடிக்கடி சோகக் கடலில் மூழ்கியிருந்ததின் காரணமும் அதுவேதான். அதற்கெல்லாம் பிராயச் சித்தமாகவே அந்த ஸ்திரீ மர்மமாக வந்து இரத்தினமாலை கொடுத்து விட்டுப் போயிருக்க வேண்டும்.

தன்னுடைய கலியாணத்துக்கு முன்னால் தன் தகப்பனார், டில்லிக்குப் போயிருந்த விஷயம் சீதாவுக்கு நினைவு வந்தது. தாரிணியைப் பார்க்கத்தான் அவர் போயிருக்க வேண்டும். இப்போது அவர் எங்கே இருக்கிறாரோ? தான் பார்த்து வருஷக் கணக்கு ஆயிற்று. தாரிணியும் அவரைப் பார்க்கவில்லை. அவர் உயிரோடிருக்கிறாரோ என்னமோ? இருந்தால் பெற்ற மகளை ஒரு தடவையாவது வந்து பாராமலா இருப்பார்?

இப்படியெல்லாம் யோசித்து விட்டுச் சீதா, "அக்கா! எது எப்படியிருந்தாலும் சரிதான்; எப்போதும் நீங்கள் எனக்குத் தமக்கையாகவே இருக்க வேண்டும்!" என்றாள்.

கடிகாரத்தில் மணி நாலு அடித்தது.



புதுச்சேரி தேர்தல், பாரு!

விந்தன்

1. என்ன விநோதம் பாரு
   எலெக்ஷன் விசித்ரம் பாரு!
சின்னத்தன மாகவோட்டு
   சேகரிக்கும் வித்தைபாரு!

2. வோட்டுச்சாவடி கேட்டைப்பாரு
   உள்ளே*கூபே கூட்டம்பாரு!
வேட்டைநாய்கள் போலப்பாரா
   வெளியேநிற்கும் விறைப்பைப்பாரு!

3. காங்கிரசு வோட்டர்வந்தால்
   கதவைச்சாத்தும் கூத்தைப்பாரு!
'போங்க!' என்று விரட்டியடிக்கும்
   புதுச்சேரித் தேர்தல்பாரு!

4. பத்துப்பேருக் கொருவன்வந்து
   போலிங்பண்ணும் புதுமைபாரு!
பத்திரிகை நிருபரெல்லாம்
   பார்த்துநிற்கும் காட்சிபாரு!

5. தேர்தலுக்கு நிற்பவரே
   தேர்தல்அதி காரிபாரு!
திருட்டுத்தன மாகவோட்டைத்
   திரட்டிவிட்ட மோசம்பாரு!

6. குண்டர்களின் கோஷ்டிபாரு
   கூபேகட்சிக் கூச்சல்பாரு!
மண்டையடி பட்டுமக்கள்
   மயங்கிவிழும் கோரம்பாரு!

7. †பாரன்துரை ஜோரைப்பாரு
   பார்வையாளர் கஷ்டம்பாரு!
பாரபட்சம் காட்டிவோட்டைப்
   பறிக்கும்அநி யாயம்பாரு!

8. 'குடியரசு வாழ்க!' என்ற
   கோஷம்போன போக்கைப்பாரு!
'நடியரசு வாழ்க!' என்னும்
   தந்தினத்தாம் பாட்டைப்பாரு!

9. மாகிறெட்டு அரணைக்கட்டி
   மார்பைத்தட்டி நின்றபிரான்சு
மாஹிமக்கள் புரட்சியிலே
   மல்லாந்த மகிமைபாரு!

என்ன விநோதம் பாரு!

---

* புதுச்சேரி, காரைக்கால் இந்திய யூனியனில் சேரக் கூடாது என்று சொல்லும் கட்சியின் தலைவர்.

† பிரஞ்சிந்தியாவின் கவர்னர்.







51. முதல் ராஜி

முதல் முறையாகச் சிறையில் அடைக்கப்பட்டவுடனே காந்திஜி சிந்தனையில் ஆழ்ந்தார். என்ன விதமான சிந்தனை என்பதைக் காந்திஜியே எழுதியிருக்கிறார்:—

"வீடு, கோர்ட்டு, பொதுக்கூட்டம் எல்லாம் கனவிலே தோன்றுவதுபோல் என் மனதில் தோன்றி மறைந்தன. நான் இப்போது ஒரு கைதி. இரண்டு மாதம் சிறைத் தண்டனை பெற்றவன். இந்த இரண்டு மாதத்துக்குள் என்ன நடக்கும்? இரண்டு மாதமும் நான் சிறையிலேயே கழிக்க வேண்டி நேரிடுமா? ஜனங்கள் பொதுக் கூட்டத்தில் சபதம் செய்ததற்கு இணங்க நடந்து கொண்டால், வெகு சீக்கிரத்தில் சிறைகளை நிரப்பிவிடுவார்கள். அப்போது தண்டனையை முழுதும் அநுபவிக்க வேண்டியிராது. விரைவிலேயே விடுதலை கிடைக்கும். ஆனால் ஜனங்கள் சும்மா இருந்து விட்டால்?......இந்தச் சிறையில் இரண்டு மாத காலம் எப்படிக் கழிப்பது? இரண்டு மாதமும் இரண்டு யுகம்போலத் தோன்றும். இந்த எண்ணங்களெல்லாம் மின்னல் வேகத்தில் ஒரு கொடிப்பொழுதில் தோன்றிச் சென்றன. அடுத்த கிஷணம், மேற்கண்ட விதமான எண்ணங்கள் என் மனதில் தோன்றியது குறித்து வெட்கம் அடைந்தேன். விடுதலையைப் பற்றி நான் ஏன் சிந்திக்க வேண்டும்? ஜனங்களுக்கெல்லாம் நான் உபதேசம் செய்ததென்ன? இப்போது சிந்திப்பது என்ன? சிறைச் சாலைகளை அரசாங்கத்தின் விருந்து விடுதிகளாகக் கருதவேண்டும் என்றும், கறுப்புச் சட்டத்துக்கு உட்படுவதைக் காட்டிலும் சிறை வாசம் சொர்க்கலோகத்துக்கு இணையாகும் என்றும், கறுப்புச் சட்டத்தை எதிர்க்கச் சகல பரித்தியாகங்களும் செய்யச் சித்தமாயிருக்க வேண்டும் என்றும் பேசி வந்தேன். இப்போது என் விடுதலையைப் பற்றியோ சிறைவாசத்தின் பலா பலன்களைப்பற்றியோ நான் கருத வேண்டும்?— இந்த இரண்டாவது எண்ணத்தினால் என் மனம் தெளிவடைந்தது."

காந்திஜி இவ்விதமான சிந்தனைகளில் ஈடுபட்டிருக்கையில், வெளியே ஜோகானிஸ்பர்க் நகரில் ஏக அமர்க்களமாயிருந்தது. காந்திஜி சிறைப்பட்ட செய்தியை அறிந்ததும் இந்தியர்கள் பலர் மனக்கிளர்ச்சி அடைந்தார்கள். கையில் கறுப்புக் கொடிகளைப் பிடித்துக்கொண்டு அவர்கள் வீதிகளில் ஊர்வலமாகச் சென்றார்கள். வரவர ஊர்வலத்தில் கூட்டம் அதிகமாகிக்கொண்டு வந்தது. போலீஸார் தலையிட்டார்கள். ஊர்வலத்தைப் பலாத்காரமாகக் கலைத்தார்கள். ஊர்வலத்தில் சேர்ந்திருந்த பல இந்தியர்கள் போலீஸாரின் பிரம்படிக்கு உள்ளானார்கள்.

காந்திஜிக்குப் பிறகு அவருடைய சகாக்களையும் மாஜிஸ்ட்ரேட் தண்டித்துச் சிறைக்கு அனுப்பினார். அப்படித் தண்டனை அடைந்தவர்கள் அனைவரையும் காந்திஜி இருந்த கொட்டடிக்கே கொண்டுவந்து அடைத்தார்கள். ஒரே இடத்தில் அடைக்கப்பட்டதனால் எல்லாருக்கும் உற்சாகமாக இருந்தது. காந்திஜி சிறைக்கு வந்த பிறகு நடந்த சம்பவங்களைப் பின்னால் வந்தவர்கள் அவருக்குத் தெரியப்படுத்தினார்கள்.

ஆறு மணிக்குச் சிறைக் கொட்டடியின் கதவைப் பூட்டிவிட்டார்கள். அது இரும்புக் கம்பிக் கதவு அல்ல. முழுதும் இரும்புத் தகட்டினால் அடைத்திருந்த கதவு. சுவரில் உச்சியில் ஒரு சிறு ஜன்னல் மட்டுந்தான் இருந்தது. மற்றப்படி அவர்களை ஒரு பெரிய இரும்புப் பெட்டியில் போட்டுப் பூட்டி விட்டது போலத் தோன்றியது. ஆயினும் காந்திஜியாவது அவருடைய சகாக்களாவது மனந்தளரவில்லை. இதைப் போல் இன்னும் பல பயங்கரமான கஷ்டங்களுக்கும் அவர்கள் தங்கள் மனதைப் பக்குவப்படுத்திக் கொண்டிருந்தார்கள்.

முதன் முதலில் சத்தியாக்கிரகக் கைதியான பண்டித ராமசுந்தரம் என்பவருக்குச்

சிறையில் சகல சௌகரியங்களும் செய்து கொடுக்கப் பட்டன. அவர் முதல் கைதி; அதோடு தனிக்கைதி. ஆனால் காந்திஜியும் அவருடைய சகாக்களும் கூட்டமாக வந்தபடியால் சிறையில் அவர்களுக்கு எவ்வித வசதியும் அளிக்கப்படவில்லை.

தென்னாப்பிரிக்கா சிறைச்சாலைகளுக்குள்ளேயும் வெள்ளைக் கைதிகள் — கறுப்புக் கைதிகள் என்று இரு பிரிவுகள் இருந்தன. இதுவரை கறுப்புக் கைதிகள் என்றால் நீக்ரோக் கைதிகளாகவே யிருந்தனர். இப்போது, இந்தியர்களும் நீக்ரோப் பகுதியில் சேர்க்கப் பட்டனர்.

சிறையில் உள்ள கஷ்டங்களுக்கு மேலே காந்திஜி அதிகப்படி கஷ்டங்களை தேடிக் கொண்டார். வெறுங்காவல் கைதிகள் தங்கள் சொந்த உடைகளை உடுத்திக் கொள்ளலாம் என்பது சிறைச்சாலை விதி. இந்தியக் கைதிகளில் வெறுங்காவல் கைதிகளும் இருந்தார்கள்; கடுங்காவல் கைதிகளும் இருந்தார்கள். பின்னால் தண்டிக்கப் பட்டவர்கள் எல்லாரும் கடுங்காவல் தண்டனையே பெற்றார்கள். காந்திஜி கடுங்காவல் கைதிகளைப்போலச் சிறைச்சாலை உடையே தரிப்பேன் என்று வற்புறுத்தினார். அதன்படியே அவருக்குக் கடுங்காவல் உடை கொடுக்கப் பட்டது.

அடுத்த சில தினங்களில் மேலும் பல இந்திய சத்தியாக்கிரஹக் கைதிகள் சிறைக்கு வந்தார்கள். இவர்களில் பெரும்பாலோர் வீதி வியாபாரிகள். அதாவது துணி மூட்டையோ அல்லது வேறு சாமானோ தெருத்தெருவாய்க் கொண்டு போய் விற்கிறவர்கள். இவர்களிடம் போலீஸார் 'லைசென்ஸ்' காட்டும்படி கேட்டதும், இவர்கள் 'இல்லை' என்று பதில் சொன்னார்கள். உடனே இவர்களைப் போலீஸார் கைது செய்து கோர்ட்டில் நிறுத்தித் தண்டித்துச் சிறைக்கு அனுப்பினார்கள். இப்படியாக ஒரு வாரத்திற்குள் சத்தியாக்கிரஹக் கைதிகள் நூற்றெண்பது பேர் சிறைக்கு வந்து விட்டார்கள்.

சிறையில் கொடுத்த சாப்பாடு மிகவும் மோசமாயிருந்தது. சமைக்கும் விதம் அதைவிடக் கேவலமாயிருந்தது. உணவுத் திட்டத்தை அபிவிருத்தி செய்ய முயன்றும் முடியவில்லை. கடைசியில் "கொடுக்கிற சாமானைக் கொண்டு நாங்களே சமைத்துக் கொள்கிறோம்" என்று கேட்டார்கள். அந்த உரிமை அளிக்கப் பட்டது. தம்பி நாயுடு சமையல் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதற்குப் பிறகு சிறைச் சாப்பாடு கொஞ்சம் சுமாராயிற்று.

காந்திஜி சிறை புகுந்து இரண்டு வாரம் ஆனபிறகு, புதிதாகச் சிறைக்கு வந்தவர்கள் வெளியில் ஏதோ ராஜிப் பேச்சு நடைபெறுவதாகச் செய்தி கொண்டுவந்தார்கள். ராஜிப்பேச்சு ஆரம்பமாகியிருந்தது உண்மைதான். "டிரான்ஸ்வால் லீடர்" என்னும் பத்திரிகை ஆசிரியரான மிஸ்டர் அல்பர்ட் கார்ட்ரைட் என்பவர் மேற்படி ராஜிப் பேச்சுக்குக் காரணபூதரா யிருந்தார். மிஸ்டர் அல்பர்ட் கார்ட்ரைட் கெட்டிக்காரர்; அத்துடன் விசால உள்ளம் படைத்தவர். ஏற்கெனவே காந்திஜியுடன் பழகி அவருடைய மேன்மைக் குணங்களை அறிந்திருந்தார். தம் பத்திரிகையில் இந்தியரின் கட்சியை ஓரளவு ஆதரித்தும் எழுதிவந்தார். காந்திஜி சிறை புகுந்த பிறகு மிஸ்டர் கார்ட்ரைட் தளபதி ஸ்மட்ஸைப் பார்க்கச் சென்றார். இந்தியத் தலைவர்களுடன் எப்படியாவது ராஜியாகப் போகவேண்டும் என்று வற்புறுத்தினார். தளபதி ஸ்மட்ஸ் அதற்கிணங்கியதோடு, "நீரே சமாதானத் தூதராகச் சென்று இந்தியத் தலைவர்களுடன் பேசும். அவர்கள் ராஜிக்கு வருகிறார்களா என்று கேட்டுப் பாரும்" என்றார்.

மிஸ்டர் கார்ட்ரைட் முதலில் வெளியிலிருந்த தலைவர்களைப் போய்ப் பார்த்தார். அவர்கள் "எங்களைக் கேட்டுப் பயனில்லை. ராஜி பேசும் உரிமை உள்ளவர் காந்திஜிதான். அவர் எந்த ஏற்பாட்டை ஒப்புக்கொண்டாலும் அதை நாங்களும் ஒப்புக்கொள்ளத் தயார்!" என்றார்கள்.

அதன்மேல் மிஸ்டர் கார்ட்ரைட் சிறைக்குள் சென்று காந்திஜியைப் பார்த்துப் பேசத் தீர்மானித்தார். அதற்கு முன்னால் தளபதி ஸ்மட்ஸுடன் கலந்து ஆலோசித்துச் சில ராஜி நிபந்தனைகளைத் தயாரித்துக் கொண்டார். ராஜி நிபந்தனைகளில் முக்கியமான அம்சம் என்னவென்றால்:—

இந்தியர்கள் தாங்களாகவே வலுவில் சென்று தங்களுடைய பெயர் முதலிய விவரங்களைப் பதிவு செய்துகொள்ள வேண்டியது. அப்படிச் செய்வார்களானால் கறுப்புச் சட்டத்தை டிரான்ஸ்வால் சர்க்கார் ரத்து செய்துவிடுவார்கள்.

மிஸ்டர் கார்ட்ரைட் சிறைக்குள் சென்று இந்த ராஜி நிபந்தனையைக் காந்திஜியிடம் தெரிவித்தார். அதை இந்தியர்கள் ஒப்புக்கொள்ள வேண்டும் என்றும் வற்புறுத்தினார். "கறுப்புச் சட்டம் இந்திய சமூகத்தை இழிவு செய்கிறது என்பதுதானே உங்க

ளுடைய ஆட்சேபம்? சட்டத்தை எடுத்து விட்டால் அந்த ஆட்சேபம் போய்விடுகிறதல்லவா? இந்தியர்கள் புதிதாக டிரான்ஸ்வாலுக்குள் வருவதைக் கட்டுப்படுத்தவே டிரான்ஸ்வால் சர்க்கார் விரும்புகிறார்கள். அதற்காக ஏற்கெனவேயுள்ள இந்தியர்களைப் பற்றி எல்லா விவரங்களும் ஊர்ஜிதமாகத் தெரிந்திருக்க வேண்டும் என்று எண்ணுகிறார்கள். நீங்களாகவே இந்தக் காரியத்தைச் செய்துவிடுவதில் உங்களுக்கு என்ன ஆட்சேபம்?" என்று வாதம் செய்தார்.

காந்திஜி இதை ஒப்புக் கொண்டார். ஆனால் ராஜி நிபந்தனைகளின் வாசகத்தில் சில திருத்தங்களைச் செய்யவேண்டும் என்று சொன்னார். மிஸ்டர் கார்ட்ரைட் முதலில் "அதெல்லாம் முடியாது; இதில் திருத்தம் எதையும் ஸ்மட்ஸ் ஒப்புக்கொள்ளமாட்டார்" என்றார். அதற்குக் காந்திஜி "ராஜி நிபந்தனை வாசகத்தில் சந்தேகத்துக்கு இடம் இருக்கக் கூடாதல்லவா? கொஞ்சங்கூட மாற்றக்கூடாது என்றால், அதற்கு ராஜி என்று என்ன பெயர்?" என்று கேட்டார். கடைசியாக, "சரி; உங்கள் விருப்பத்தின்படியே திருத்திக் கையெழுத்திட்டுக் கொடுங்கள். ஸ்மட்ஸிடம் போய்ப் பார்க்கிறேன்" என்றார் மிஸ்டர் கார்ட்ரைட்.

தம்பி! இந்தமாதிரி ராஜி நிபந்தனையைக் காந்திஜி ஒப்புக் கொண்டதுபற்றி உனக்கு ஆச்சரியம் ஏற்படலாம். "சட்டப்படி பதிவு செய்துகொண்டால் என்ன? சட்டமில்லாமல் பதிவு செய்து கொண்டால் என்ன? காரியாம்சத்தில் இரண்டும் ஒன்றுதானே?" என்று உனக்குத் தோன்றலாம்.

உண்மையில், இரண்டுக்கும் மிக்க வித்தியாசம் உண்டு. நாமே சுயமாகச் செய்யக் கூடிய காரியமாயிருந்தபோதிலும், பிறர் அதைச் செய்யும்படி நம்மைக் கட்டாயப்படுத்துவதற்கு உட்பட்டால் அது நம்முடைய சுயமதிப்புக்குப் பங்கமாகிறது. அடுத்த வீட்டுக்காரனுடைய சௌகரியத்தை முன்னிட்டு நம்மை நாமே சில நிர்ப்பந்தங்களுக்கு உட்படுத்திக் கொள்ளச் சம்மதிக்கலாம். ஆனால் அடுத்த வீட்டுக்காரன் நம்மைப் பலவந்தப் படுத்தினால் அதற்கு உட்படுவதற்கு நாம் விரும்ப மாட்டோமல்லவா?

இன்னொரு விஷயத்தையும் நீ நன்கு தெரிந்து கொள்ள வேண்டும். காந்திஜியின் அஹிம்சைப் போர் முறைக்கும் மற்றவர்களின் பலாத்காரப் போர் முறைக்கும் ராஜிப் பேச்சு விஷயத்தில் மிக்க வித்தியா



மாப்பிள்ளை :—டேய், அம்பி ! உனக்கு ரூபாய் ஒன்று கொடுத்து விடுகிறேன். இந்தப் பக்கம் தலை காட்டாதே !

அம்பி :— கொடுக்கிறதைச் சட்டுப்புட்டுன்னு கொடுத்துடுங்கோ, அந்த நாற்காலியில் உட்காருவதற்கு முன்னாலே !

சம் உண்டு. பலாத்கார முறையில் எதிரியைத் தோற்கடித்துச் சரணாகதி அடையும்படி செய்கிறார்கள்; அல்லது அடியோடு அழித்து விடுகிறார்கள். அஹிம்சைப் போர் முறையில் அப்படியல்ல. எதிரியின் மனதை மாற்றுவதுதான் அஹிம்சை முறையின் முக்கிய நோக்கம். எதிரியின் மனம் சிறிதளவு மாறியிருப்பதாகத் தெரிந்தாலும் அஹிம்சை வீரன் திருப்தி யடைகிறான்; ராஜி பேசுவதற்குத் தயாராகிறான்; எதிரியின் மனம் வேதனையடையாத வகையில், அவனுடைய சரணாகதியை எதிர்பாராமல், விட்டுக் கொடுத்து ராஜி செய்து கொள்ள எப்போதும் சித்தமாயிருக்கிறான். இதனால் எதிரியின்உள்ளம் மேலும் மாறுதலடையும் என்று நம்புகிறான்.

எதிரியை அடியோடு அழித்து வெற்றி யடைவது பலாத்காரப் போரின் நோக்கம். எதிரியைச் சிநேகிதனாக்கிக் கொண்டு வெற்றி யடைவது அஹிம்சை முறையின் நோக்கம். எனவே, அஹிம்சை முறையைப் பின்பற்றுவோர் ஒவ்வொரு கட்டத்திலும் எதிரியுடன் ராஜி செய்து கொள்வதற்குச் சித்தமா யிருக்க வேண்டும்.

* * *

சட்டத்தை எடுத்து விடுகிறோம் என்று சொல்லும் அளவுக்குத் தளபதி ஸ்மட்ஸ் இறங்கி வந்தது அஹிம்சையின் வெற்றி என்று காந்திஜி கருதினார். சட்டத்தின் கட்டாயம் இல்லாமல் தாமாகச் சில கட்டுப்பாடுகளுக்கு உட்படுவதில் தம் மதிப்புக்குப் பங்கம் ஒன்றும் இல்லையென்றும் கருதினார். ஆகையினால்தான் மகாத்மா ராஜிப் பேச்சுக்கு உடன்பட்டார். மிஸ்டர் கார்ட்ரைட் கொண்டு வந்திருந்த நகல் ராஜிப் பிரேரணைகளில் தாம் அவசியமெனக் கருதிய திருத்தங்களைச் செய்து கையொப்ப மிட்டார். மிஸ்டர் குவின், ஸ்ரீ தம்பி நாயுடு இவர்களும் கையெழுத்திட்டுக் கொடுத்தார்கள்.

மிஸ்டர் கார்ட்ரைட் வந்து போன இரண்டு நாளைக்கெல்லாம் ஜோகானிஸ்பர்க் போலீஸ் தலைவர் மிஸ்டர் வெர்னன் வந்து காந்திஜியைச் சிறையிலிருந்து விடுவித்துப் பிரிடோரியாவுக்கு அழைத்துப் போனார். அங்கே காந்திஜி தளபதி ஸ்மட்ஸைச் சந்தித்தார். ஸ்மட்ஸ் மிக்க பவ்யமாகப் பேசினார். "நீங்கள் சிறைக்குப் போனபிறகும் இந்திய சமூகம் இவ்வளவு உறுதியுடனிருந்ததை நான் பாராட்டுகிறேன். இந்திய சமூகத்தின் பேரில் எனக்கு வெறுப்பு என்பதே கிடையாது. ஆனால் இங்குள்ள ஐரோப்பியர்கள் பெரும்பாலோரின் அபிப்பிராயத்தை யொட்டி நான் என் கடமையைச் செய்ய வேண்டி யிருக்கிறது. நகல் பிரேரணைகளில் நீங்கள் செய்துள்ள திருத்தங்களை ஒப்புக் கொள்கிறேன். உங்களில் பலர் சுயமாகப் பதிவு செய்து கொண்டதாகத் தெரிந்ததும் சட்டத்தை ரத்து செய்வதாக உறுதி கூறுகிறேன். இனிமேல் இந்த மாதிரி சங்கடமே ஏற்படக் கூடாது என்பது என் விருப்பம்! இனி நீங்கள் போகலாம்!" என்றார் தளபதி ஸ்மட்ஸ்.

"நான் எங்கே போகட்டும்? மற்றக் கைதிகளின் விஷயம் என்ன?" என்று காந்தி மகாத்மா கேட்டார்.

"நீங்கள் இந்த நிமிஷத்திலிருந்து சுயேச்சை யடைந்து விட்டீர்கள். இனி எங்கே வேண்டுமானாலும் நீங்கள் போகலாம். மற்றக் கைதிகள் எல்லாரையும் நாளைக்காலையில் விடுதலை செய்து விடுவார்கள்!" என்றார் தளபதி ஸ்மட்ஸ்.

அப்போது மாலை ஏழு மணி. இவ்வளவு விரைவாகத் தமக்கு விடுதலை கிடைத்து விடும் என்று காந்திஜி எதிர்பார்க்கவே யில்லை. அவர் கையிலோ காலணா இல்லை. ஜோகானிஸ்பர்க்குக்குப் போக ரயில் சத்தம் தளபதி ஸ்மட்ஸின் காரியதரிசியிடமிருந்து காந்திஜி பெற்றுக் கொண்டார். பிரிடோரியாவிலிருந்து ஜோகானிஸ்பர்க் போக ஒரே ஒரு வண்டி தான் பாக்கியிருந்தது. காந்தி விரைவாகச் சென்று அந்த வண்டியைப் பிடித்து ஏறினார்.

வெடிக்காத பட்டாசு!

பி.எஸ்.மணி

ஓர் ஊரில் ஒரு மிராசுதார் இருந்தார். அவருக்கு ஜெயம் என்று ஒரு பெண்ணும் சீனு என்று ஒரு பிள்ளையும் இருந்தனர். சீனுவுக்குப் பிடிவாத குணம் அதிகம். மேலும் அவனுக்கு ஜெயத்தைக் கண்டால் பிடிக்கவே பிடிக்காது. ஜெயம் ஏதாவது ஒரு பொருள் கையில் வைத்திருந்தால் போதும், அதை வாங்கித் தன் கையில் வைத்துக் கொள்ளும் வரை அவன் மனம் படாத பாடு படும்.

போன வருஷம் தீபாவளிப் பண்டிகையின்போது, மிராசுதார் தன் குழந்தைகளுக்காக நிறையப் பட்டாசுகளைப் பட்டணத்திலிருந்து வரவழைத்தார். தீபாவளிக்கு முந்தின நாள் இரண்டு பெட்டிகளில் பட்டாசுகள் வந்து சேர்ந்தன. மிராசுதார் ஜெயத்துக்கும் சீனுவுக்கும் ஆளுக்கொரு பெட்டியைக் கொடுத்தார். ஒவ்வொரு பெட்டியிலும் சீனவெடிகளும், பீரங்கி மத்தாப்புக்களும் நிறைய இருந்தன.

ஜெயமும் தன்னைப் போலவே ஒரு பெட்டி நிறையப் பட்டாசு வைத்திருப்பதைக் கண்டதும் சீனுவுக்கு ஆத்திரம் பொங்கி வந்தது. மெதுவாக அவளிடமிருந்து அந்தப் பெட்டியைப் பிடுங்கிக் கொள்ள முயற்சி செய்தான்; முடியவில்லை.

கடைசியில் அவனுக்கு ஒரே ஒரு வழிதான் இருந்தது. அதாவது, அவன் தன் கட்சி ஜயிக்கிற வரையில் ஓயாமல் அழுதான். யார் சமாதானப் படுத்தியும் அவன் ஓயவில்லை.

கடைசியில் மிராசுதார் ஜெயத்தைச் சமாதானப் படுத்தி அவளிடமிருந்த பட்டாசை சீனுவுக்கு வாங்கித் தர முயன்றார். "ஜெயம்! நீ இப்பொழுது அவன் கையில் இந்தப் பட்டாசைக் கொடுத்து விடு. கொஞ்ச நேரத்தில் ஆளை அனுப்பி உனக்கு நல்ல பட்டாசு வாங்கி வரச் சொல்லுகிறேன்!" என்றார்.

ஜெயத்துக்குத் தன் பட்டாசு அவ்வளவையும் கொடுக்க மனம் வரவில்லை. "அப்பா! நான் இதைத் தரமாட்டேன். நீ வேணுமானால் அவனுக்குப் புதுப் பட்டாசு வாங்கிக் கொடு!" என்றாள்.


"இல்லை, ஜெயம்! அவன் சின்னவன் தானே; நீ கொடு. உனக்கு ஒரு பெட்டிக்கு இரண்டு பெட்டிப் பட்டாசுகள் வாங்கித் தருகிறேன்" என்றார்.

கடைசியில் ஜெயம் மனமின்றிப் பட்டாசுப் பெட்டியைத் தகப்பனாரிடம் கொடுத்தாள். மிராசுதார் அந்தப் பெட்டியைச் சீனுவிடம் கொடுத்த பிறகுதான் அவன் அழுகை நின்றது. சீனு வெற்றிக்கு அறிகுறியாக ஒரு சிரிப்புச் சிரித்தான். ஜெயம் முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு அங்கிருந்து ஓடிவிட்டாள்.

எங்கே தூங்கும்பொழுது ஜெயம் தன்னிடமிருந்து பட்டாசை எடுத்துக் கொண்டு விடுவாளோ என்று பயந்து, சீனு அவைகளைத் தன் படுக்கைக்கு அருகிலேயே வைத்துக் கொண்டு தூங்கினான்.



தீபாவளியன்று காலையில் எழுந்ததும் விடுவிடென்று முதலில் சென்று எண்ணெய் ஸ்நானம் செய்தான் சீனு.



இலையுதிர்காலம்

மழைக்காலம் சென்றுவிட்டது. பெய்த மழைத் நீர் வெள்ளங்களில் தங்கியிருக்கின்றன. அறுவடையான தானியங்கள் வீடுகளுக்கு சேர்ந்துவிட்டன. ஒவ்வொரு கிராமத்திலும் [illegible] கொண்டாட்டமும்தான். தானியங்களைச் சேமிக்கும் குதிர்கள் அருகில் ஆயத்தமாக நிற்கின்றன. தொலைதூரத்தில் ஒலிக்கும் முரச [illegible] வருகின்றன என்பதை ஞாபகப்படுத்துகிறது. இக்காட்சியில் [illegible] அதிகமாகவும் மகிழ்ச்சி பெருகும் காலம் இது.

ஒவ்வொரு வீட்டிலும் — கிராமக் குடிசையிலும் சரி, நகர வீடுகளிலும் சரி — டீயின் உற்சாகமும் சுகமும் களைப்பு தீர்ப்ப பணிக்கு பெருமதிப்பாக வருகிறது.




எங்கேயும் டீ அருந்தும் நேரமே.

இன்விக்டா ரேடியோ

INVICTA

RADIO



மாடல்
91

ஆல்வேவ் பாண்ட்ஸ்ப்ரெட் மாடல்

பிரிட்டிஷ் மேக்

7 வால்வுகள் 8 பாண்ட்கள் A/C ரிஸீவர்

10" ஸ்பீக்கர் பொருத்தப்பட்டது. — விலை ரூபாய் 655/-

இன்விக்டா மாடல் 91 சிறந்ததோர் தயாரிப்பு. ஒலிபரப்பு கிரஹணத்தில் இணையற்றது. பாண்ட்ஸ்ப்ரெட் ட்யூனிங் முறையுள்ளதால் பல ஸ்டேஷன்களை சுலபமாகப் பெறலாம்.

இது ஒரு 7 வால்வு, 8 வேவ்பாண்ட் ரிஸீவர். கீழ்க்கண்ட ''வேவ் லெங்த்''களில் ஒலிபரப்புகளைக் கேட்கலாம். Medium wave 200-550m, Short (1) 60-200 மீட்டர். (2) 25-60 மீட்டர் Short (3) 11-25 மீட்டர். Short பாண்ட்ஸ்ப்ரெட் ட்யூனிங், 16, 19, 25, 31 மீட்டர்களில் கீழ்க்கண்ட முல்லார்டு வால்வுகள் உபயோகிக்கப்பட்டிருக்கின்றன :—

ECH. 35, EF. 39, EBC. 33, EBC. 33, EL. 33, EL. 33, GZ. 32.

மிக சக்திவாய்ந்த 10" ஸ்பீக்கர் உபயோகித்திருப்பதால் சுத்தமாக ஒலிபரப்பைக் கேட்கலாம். எக்ஸ்டென்ஷன் ஸ்பீக்கர் கிராமபோன் எக்ஸ்டென்ஷனுக்கு வசதிகள் உண்டு.

அளவு 14" உயரம், 22" அகலம், 8½" கனம். AC. மெயின்களில் மட்டும் உபயோகத்துக்கு 110-250v. 40-100 ஸைகிள்கள்.

சென்னை ராஜதானி, சமஸ்தானங்களுக்கு விநியோகஸ்தர்கள் :

மகமத் இப்ராஹிம் & கம்பெனி, லிமிடெட்

விக்டரி ஹவுஸ் :: 7 & 8, மவுண்ட் ரோடு :: சென்னை

இலங்கைக் கடிதம்

சென்னை காட்டிய சீரியவழி

ரஜனி

கொழும்பு, 18—10—48

குடிப் பழக்கத்துக்குப் பெயர்போன தேசம் இலங்கை. குடிப்பதை இங்கே ஒரு கௌரவமாக நினைப்பதோடு மட்டுமல்லாமல் குடி வகைகளில் அரசாங்கமே வியாபாரம் செய்து கொழுத்த லாபம் சம்பாதிக்கிறது. அரசாங்கத்துக்குச் சொந்தமான சாராய உற்பத்திச் சாலைகளில் வருடந்தோறும் ஆயிரக் கணக்கான பீப்பாய் சாராயம் உற்பத்தி செய்யப்படுகிறது.

இலங்கையில் சுதந்திர தினக் கொண்டாட்டத்தின்போது அதிகமாகப் போதை கொடுக்கக் கூடிய ஒரு ஸ்பெஷல் பிராண்டு சாராயத்தை அரசாங்கம் உற்பத்தி செய்து சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கும் பார்லிமெண்டு அங்கத்தினர்களுக்கும் மலிவான விலைக்கு விற்றது. அரசாங்க வைபவங்களிலாகட்டும், அல்லது தனிப்பட்ட நபர்களின் கல்யாணம், இறுதிச் சடங்கு முதலியவைகளிலாகட்டும், சாராயம் இன்றியமையாத பொருளாக இருந்து வருகிறது. இந்தியாவில் பருப்பு இல்லாமல் கல்யாணம் நடக்கலாம்; ஆனால் சிங்களவர் குடும்பங்களில் சாராயம் இல்லாமல் கல்யாணம் நடக்கவே முடியாது! எனவே, இந்த நிலைமை மாறி இலங்கையும் சென்னை மாகாணத்தைப் பின்பற்றுவதென்றால் ஆச்சரியத்திலும் ஆச்சரியமில்லையா?

சென்னை மாகாணம் முழுவதிலும் பூரண மதுவிலக்கு அமுலுக்கு வந்திருப்பது இலங்கையிலும் சிலரைத் தீவிரமாக யோசனையில் ஆழ்த்தியிருக்கிறது. அகில இலங்கை பூரண மதுவிலக்கு யூனியன் என்ற பெயருடன் ஏற்கெனவே ஒரு ஸ்தாபனம் இருந்து வருகிறது. ஒவ்வொரு வருஷமும் இந்த யூனியன் அங்கத்தினர்கள் ஒரு மகாநாடு கூட்டி மதுவிலக்கின் அவசியத்தைப்பற்றிப் பேசுவார்கள். சாராய உற்பத்திச் சாலையின் நிர்வாகத்தை மேற்பார்வையிடும் மந்திரி உள்படப் பல பிரமுகர்கள் மகாநாட்டுக்கு விஜயம் செய்து குடிப்பழக்கத்தின் தீமையைப் பற்றி உருக்கமாக வர்ணிப்பார்கள். மறுபடியும் இதைப்பற்றிச் சிந்திப்பது அடுத்த மகாநாட்டில்தான்!

ஆனால் சென்ற மாதம் நடந்த மகாநாட்டுக்கு மந்திரி ஸ்ரீ எ. இ. குணசிங்கா வந்திருந்தார். மதுவிலக்கை உண்மையில் ஜனங்கள் விரும்பினால் அரசாங்கம் சட்டமியற்றத் தயங்காதென்று உறுதி கூறினார். அதன் பயனாகப் பொதுஜன அபிப்பிராயத்தை மதுவிலக்குக்கு அனுகூலமாகத் திருப்ப அகில இலங்கை மதுவிலக்கு யூனியன் ஒரு திட்டம் தயாரித்திருக்கிறது.

லட்சக் கணக்கானவர்கள் பூஜை

புத்த பகவான் உயிருடனிருந்த காலத்தில் அவருடைய ஆத்ம சிஷ்யர்களாயிருந்த இருவரின் அஸ்திகள் ஸாஞ்சியிலிருந்து இங்கிலாந்துக்குக் கொண்டு போகப்பட்டன. சுதந்திர இந்தியாவின் கோரிக்கைக்கிணங்க அவை இந்தியாவுக்குத் திருப்பிக் கொடுக்கப்பட்டுச் சில மாதங்களுக்கு முன் இலங்கைக்கு வந்து சேர்ந்தன. டிஸம்பர் பத்தாம் தேதி ஸாஞ்சி அஸ்திகள் இந்தியாவுக்குத் திரும்பக் கொண்டு செல்லப்படும். அதற்கு முன் கடைசி முறையாக நகர மண்டபத்தில் அவை பொதுஜன தரிசனத்துக்காகவும் பூஜைக்காகவும் வைக்கப்பட்டிருக்கின்றன.

பாகிஸ்தானுக்கு மட்டும் சலுகை ஏன்?

இலங்கையின் கொப்பரையை விலைக்கு வாங்குவதற்கு ஸ்ரீ தர்மவீர என்ற இந்திய யூனியன் மந்திரி சபைக் காரியதரிசி இலங்கை அரசாங்கத்துடன் நடத்திய ஒப்பந்தப் பேச்சுகள் கிட்டத்தட்ட முறிந்து போய்விட்டன. பிரிட்டனுடனும் பாகிஸ்தானுடனும் ஒரு வருட ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கும் இலங்கை, இந்தியாவுடன் மாத்திரம் ஐந்து வருட ஒப்பந்தத்தைக் கோருகிறது. கொப்பரையின் விலை சீக்கிரத்தில் குறையலாம். அந்த நிலைமையில் நீண்டகால ஒப்பந்தம் செய்துகொள்வது இந்தியாவுக்கு நன்மையல்ல. தவிர, பாகிஸ்தானுக்கு மட்டும் குறுகிய கால ஒப்பந்தச் சலுகையை அளித்த இலங்கை, அதே சலுகையை இந்தியாவுக்கு அளிக்க இப்போது பின்வாங்குவதேன்?

பம்பாய் மாப்பிள்ளை

ஸோமாஸ்

கணேசய்யருக்கு அன்று காலையிலிருந்தே ஒரு வேலையும் ஓடவில்லை. கடிதமும் கையுமாகச் சிந்தனையில் ஆழ்ந்திருந்தார். கடிதத்தில் அப்படியொன்றும் கவலை தரும் விஷயம் எதுவும் இருக்கவில்லை; தலைதீபாவளிக்கு மாப்பிள்ளை வருவதாகத்தான் கடிதம் எழுதியிருந்தான். அத்துடன் கடிதம் முடிந்திருந்தால் அவருக்கு ரொம்பவும் சந்தோஷமாயிருந்திருக்கும். அவனுக்கு பம்பாய்க்கு மாற்றலாகி விட்டதால் தீபாவளி கழிந்த மறுநாளே பம்பாய்க்குப் போகவேண்டும் என்று எழுதியிருந்தான். பம்பாய்க்கு அவன் மட்டும் போவதாயிருந்தால், பாதகமில்லை. சரோஜாவையும் அழைத்துப் போகவேண்டும் என்று எழுதியிருந்தான். முதலில் மாப்பிள்ளை மட்டும் பம்பாய்க்குப் போனால் அப்புறம் சரோஜாவை அனுப்பலாமே என்றால் மாப்பிள்ளை அதற்கு இடம் வைக்கவில்லை. பம்பாயிலிருக்கும் அவன் நண்பன் மூலம் அங்கே வீடு பார்த்து வைத்துவிட்டபடியால் சரோஜாவை அழைத்துப்போவதில் சிரமம் ஒன்றுமில்லையென்றும் குறிப்பிட்டிருந்தான். ஆகையினால் மாப்பிள்ளைக்கு இது விஷயமாக ஒன்றும் எழுத அவருக்குத் தோன்றவில்லை. பழைய ஞாபகங்கள் அவர் நெஞ்சை வந்து முட்டின.



* * *

கணேசன் அளவுகடந்த உற்சாகத்துடன் சென்னைக்கு வந்தான். அவனுடைய உற்சாகத்துக்கு முக்கிய காரணம் அவனுக்கு உத்தியோகம் கல்கத்தாவில் கிடைத்தது மட்டுமல்ல; உடன் மீனுவையும் அழைத்துப் போகப்போகிறோம் என்னும் ஆனந்த நினைவுந்தான்.

கணேசன் வந்ததிலிருந்து மீனு அவன் கண்ணில் படவேயில்லை. அவன் பொறுமையை இழந்தான்.

"மீனு! மீனு!"

கணேசன் மிகத் துணிச்சலுடனும் ஆத்திரத்துடனும்தான் கூப்பிட்டான். மீனு வரவில்லை. ஆனால் கதவுக்குப் பின்புறத்திலிருந்து ஒரு மெல்லிய பெண் குரல் வந்தது.

"மீனுவின் நக்ஷத்திரத்துக்கு நாளைக்கு ஊருக்குப் புறப்பட நாள் நன்றாயில்லை. அதற்காக முந்தாநாளே நல்ல வேளை பார்த்து அவளை அடுத்த தெருவிலிருக்கும் அவள் அத்தையகத்தில் உங்கள் மாமா கொண்டுபோய் விட்டிருக்கிறார்!"—இது அவன் மாமியாரின் குரல்தான்.

"மீனு என்னோடு கல்கத்தாவுக்கு வருகிறாளா இல்லையோ!"—இது கணேசனின் கடுமையான குரல்.

"என்ன அப்படிக் கேட்கிறீர்கள்! உங்களோடு அவளை அனுப்புவதற்காகத்தானே இவ்வளவு ஏற்பாடுகளும் செய்வது? நீங்கள் நாளைக்குச் சாயங்காலம் வண்டியில் ஸ்டேஷனுக்குப் புறப்பட்டுப் போய்விட்டால், மீனுவின் அப்பா அவளை அழைத்துக்கொண்டு ஸ்டேஷனுக்கு வந்து விடுவார்!"

அருவமாயிருக்கும் மாமியாரிடம் மேலும் பேச அவன் இஷ்டப்படவில்லை; கோபவேசத்துடன் கல்கத்தா போவதற்கு வேண்டிய சாமான்களையெல்லாம் எடுத்து வைத்துக் கொண்டான்.

மாமனார் கணேசனை கச்சலித்துத் துரிதப்படுத்தினார்.

"மாப்பிள்ளை, சரியாக மூன்றரை மணிக்குப் புறப்பட்டுவிட வேண்டும்.

அப்பொழுதுதான் வேளை வந்திருக்கிறது. வண்டிக்காரன்கூட வந்து விட்டான். மணி மூன்றுக்கு மேல் ஆகி விட்டது!''

"ராத்திரி ஏழேமுக்காலுக்குத்தானே கல்கத்தா மெயில் புறப்படுகிறது? மெதுவாகப் போகலாமே!''

"சரியாய்ப் போயிற்று! இன்றைக்கு ஞாயிற்றுக் கிழமை, தெரியுமோ இல்லையோ? நாலரை மணிக்கு ராகுகாலம். மேலும் பஞ்சாங்கத்திலே ஞாயிற்றுக் கிழமையைப் பிரயாணத்துக்கு ஏற்றதாகவே எடுக்கவில்லை. அப்படி அவசியம் போய்த்தான் ஆகவேண்டும் என்றால் அதற்கு ஒரு பரிகாரம் சொல்லியிருக்கிறது சாஸ்திரத்திலே. கொஞ்சம் தயிர் சாதம் சாப்பிட்டு விட்டுப் புறப்பட வேண்டும். அப்பொழுது தோஷமில்லை. சாப்பாட்டை நான் ஸ்டேஷனுக்கு எடுத்துக்கொண்டு வந்து விடுகிறேன்! நீங்கள் இந்த வண்டியில் போய் விடுங்கள். நான் என் தங்கை அகத்துக்குப் போய் மீனுவை அழைத்துக் கொண்டு நேரே ஸ்டேஷனுக்கு வந்துவிடுகிறேன்'' என்றார் மாமனார் சாவதானமாக.

பேசாமல் ஸ்டேஷனுக்குப் போவதைத் தவிர அவனுக்கு வேறு வழி இல்லை; ஸ்டேஷனில் அரை மணி நேரத்துக்கு மேல் காத்துக்கொண்டிருந்தான். கடைசியில் அவன் மாமனாரும் மாமியாரும் ஒரு வண்டியில் வந்து இறங்கினார்கள். அவர்களுக்குப் பின்னால் இறங்கிய மீனு அஜந்தா ஓவியம் போல் அசையாமல் தலை குனிந்தபடி நின்றாள்.

கணேசனுக்கு அவளைக் கண்டதும் கோபம் அளவுகடந்து உண்டாயிற்று. எல்லோருடனும் வாய் திறவாமல் ப்ளாட்பாரத்துக்குப் போய்ச் சேர்ந்தான்.

கடைசியில் கல்கத்தா மெயில் ப்ளாட்பாரத்துக்கு வந்து நின்றது. மாபெரும் ஜனக் கூட்டம் வண்டி மெதுவாக வந்து கொண்டிருக்கும்போதே பெட்டி, படுக்கைகளை வண்டிக்குள் வீசி யெறிந்து விட்டு உள்ளே தாவி ஏறியது.

கணேசனும் மீனுவும் ஒரு வண்டியில் ஏறிக்கொண்டனர்.

"அம்மா, மீனு! கல்கத்தாவுக்குப் போய் உடம்பை ஜாக்கிரதையாகப்பார்த்துக் கொள். மாப்பிள்ளை உடம்பையும் கவனித்துக் கொள்ளு. அடிக்கடி கடிதாசி போடு!''—இது மீனுவின் தகப்பனார்.

"ஊருக்குப் போய்ச் சமர்த்தாயிரு. உன் அகத்துக்காரர் ஆபீஸுக்குப் போய் விட்டால் வீட்டில் நீ ஜாக்கிரதையாயிருக்க வேண்டும். அந்த ஊர் ஜலம் உடம்புக்கு ஒத்துப் போகிறவரையில் வெந்நீரிலேயே ஸ்நானம் செய். மாப்பிள்ளை சொல்லுகிறபடி நட. தூர தேசத்துக்குப் போகிறாய் ......!''


இதைச் சொல்லிக் கொண்டிருக்கும் போதே மீனுவின் அம்மா கண்களில் நீர் பெருகி அந்த ரயில் வண்டி, சென்ட்ரல் ஸ்டேஷன் யாவற்றையும் மறைத்துவிட்டது. மீனுவின் தகப்பனாரும் அங்கவஸ்திரத்தினால் தம் கண்களைத் துடைத்துக் கொண்டார்.

இந்தக் கண்ணீர்ப் படலத்தைக் கண்டதும் கணேசனுக்குச் சிரிப்புதான் உண்டாகப் பொங்கியது. 'பெண்ணை அவள் புருஷனுடன் அனுப்பினால்தான் என்ன? அதற்கு இப்படியா அங்கலாய்ப்பது?' என்று நினைத்தான்.

• • •

"என்ன! இன்றைக்கு இப்படித் தூங்கி விழுகிறீர்கள்! மாப்பிள்ளை எழுதிய கடிதத்தை வைத்துக்கொண்டு அப்படியே பரவசமாகி விட்டீர்களாக்கும். தலை தீபாவளியான கையோடு அவர்களை பம்பாய்க்கு அனுப்பியாகணுமே! அதற்கு வேண்டியதெல்லாம் ஏற்பாடு செய்ய வேண்டாமா?'' என்று படபடப்புடன் கூறிக்கொண்டே மீனுஷியம்மாள் கணேசய்யரிடம் வந்தாள்.

"நான் தூங்குகிறேன் என்று நினைத்தாயா? இல்லை. முப்பது வருஷங்களுக்கு முன்பு நடந்த நமது தலை தீபாவளி ஞாபகத்துக்கு வந்தது. அப்படியே மெய்ம்மறந்து அந்த நினைவிலேயே லயித்து விட்டேன். எனக்குக் கல்கத்தா



என்ன நட்சத்திரம்?



குருக்கள்:—இந்த அம்மாள் பெயரில் அர்ச்சனை பண்ணுவதா? பெயர் என்ன?

பெரிய அம்மாள்:—கசின தேவிங்க!

குருக்கள்:—என்ன நக்ஷத்திரம்?

அம்மாள்:—அதுதான், சினிமா நக்ஷத்திரங்க!

வுக்கு மாற்றலாகி உன்னை அழைத்துக் கொண்டுபோக நான் வந்திருந்தபோது நடந்ததை யெல்லாம் நினைத்தால் இப்பொழுது ஒரே வியப்பா யிருக்கிறது. உன்னை அனுப்பும்போது உன் அப்பா, அம்மா இருவரும் எவ்வளவு மனங் கலங்கினார்கள்!" என்றார் கணேசய்யர்.

"என்னை ஊருக்கு அனுப்ப அப்பா நாள் பார்த்தபோது உங்களுக்கு ஒரே கேலியும் பரிகாசமுமா யிருந்தது. இப்பொழுது உங்கள் பெண் சரோஜாவைப் பம்பாய்க்கு அனுப்ப ஓயாமல் நாள் பார்க்கிறீர்கள், நக்ஷத்திரம் பார்க்கிறீர்கள், சகுனம் பார்க்கிறீர்கள். அதுதான் 'தலைவலியும் காய்ச்சலும் தனக்கு வந்தால் தெரியும்' என்கிறார்கள் பெரியவர்கள்!" என்றாள் மீனாக்ஷியம்மாள்.

இதற்குள் வாசலில் வண்டி வந்த சத்தம் கேட்கவே மீனாக்ஷியம்மாள் உள்ளே சென்றுவிட்டாள். மாப்பிள்ளை வண்டியிலிருந்து இறங்கி வந்தார்.

மறுநாள் அவர்கள் வீட்டில் தலைதீபாவளி வெகு சிறப்பாய் நடந்தது.

"மாப்பிள்ளை, நல்ல சகுனமாகிறது, பால்காரன் வருகிறான்! வண்டியில் போய் ஏறிக்கொள்ளுங்கள். சரோஜா, சீக்கிரம் புறப்படு, அம்மா" என்றார் கணேச ஐயர்.

மாப்பிள்ளை தயக்கத்துடன், "இரவு ஒன்பது மணிக்குத்தானே பம்பாய் மெயில் புறப்படுகிறது? சாப்பிட்டு விட்டு எட்டரை மணிக்கு டாக்ஸியில் போனால் போதுமே!" என்று கூறினார்.

"அது சரிதான். நல்ல வேளையில் புறப்பட்டு விட வேண்டும் என்பதற்காகச் சொல்லுகிறேன்!" என்று கணேசய்யர் கூறியதும் அவர் முகத்தில் புன்னகை அரும்பியது. அப்பொழுது அங்கு வந்த மீனாக்ஷி அம்மாள் முகத்திலும் புன்னகை பூத்தது.

வண்டியில் மாப்பிள்ளையும் சரோஜாவும் ஏறிக் கொண்டார்கள். இன்னொரு வண்டியில் சாமான்களுடன் கணேசய்யரும் மீனாக்ஷியம்மாளும் ஏறிக் கொண்டனர். வண்டி செண்டிரல் ஸ்டேஷனுக்குப் பறந்து சென்றது.

ஆயிற்று; கல்கத்தா மெயில் புறப்படும் நேரம் நெருங்கியது. மணியும் அடித்து விட்டது. என்ஜினும் பெரிய குரல் கொடுத்து விட்டுப் பெருமூச்சுடன் கிளம்பியது.

கணேசய்யர், "அம்மா, சரோஜா! சமர்த்தாயிரு. மாப்பிள்ளை, குழந்தையை ஜாக்கிரதையாய்ப் பார்த்துக் கொள்ளுங்கள். அவளுக்குச் சூது வாது தெரியாது. ஏதோ அவளிடம் குற்றங் குறைகளிருந்தாலும் அவைகளை யெல்லாம் மனதில் வைக்கக்கூடாது!" என்றார்.

"நீங்கள் ஒன்றுக்கும் கவலைப் படாதீர்கள், மாமா!" என்றார் மாப்பிள்ளை.

அதற்குள் வண்டி போக ஆரம்பித்து விட்டது. மீனாக்ஷியம்மாள் ஒன்றுமே பேசவில்லை. "அம்மா, போய் வருகிறேன்!" என்று சரோஜா சொன்னதும், "போய்வா, அம்மா! ஜாக்கிரதை!" என்று கண்களில் நீர் மல்கக் கூறினாள்.

சரோஜாவும் மாப்பிள்ளையும் ஆனந்தமாகப் புன்முறுவல் பூத்த முகத்துடன் ரயிலில் போய்க் கொண்டிருந்தார்கள். இங்கே பிளாட்பாரத்தில் கணேசய்யரும் மீனாக்ஷி அம்மாளும் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டு நின்றதும், அவர்களுடைய முகத்திலும் ஒருவிதச் சந்தோஷமும் தேங்கி யிருக்கத்தான் செய்தது.



மனைவி:—எனக்கு ரொம்ப ஜலதோஷம் பிடிச்சிருக்கு.

கணவன்:—போகிறது, போ! எதைக் கண்டாலும் பிடிக்கல்லேன்னு, சொல்லுவே, ஜலதோஷமானும் பிடிச்சிருக்கே!

புதுச் சட்டைகளைச் சரியாகக் கூட மாட்டிக் கொள்ளவில்லை; அதற்குள் அவனுக்குப் பட்டாசின் ஞாபகம் வந்து விட்டது. விளக்கை ஏற்றிக் கொண்டு ஒவ்வொரு பட்டாசாக விட ஆரம்பித்தான். என்ன ஆச்சரியம்! அவன் கொளுத்திப் போட்ட பட்டாசுகள் ஒன்றுகூட வெடிக்கவில்லை. அவன் அழுது கொண்டே தன் தகப்பனாரிடம் சென்றான். "அப்பா! என் பட்டாசு ஒன்றுகூட வெடிக்கவில்லை!" என்று விசித்துக் கொண்டே சொன்னான்.

அவர் வந்து எல்லா வெடிகளையும் கொளுத்திப் பார்த்தார். அவைகளில் ஒன்றுகூட வெடிக்காதது அவருக்கும் ஆச்சரியமாயிருந்தது.

"ஏன் அப்பா, என் வெடி ஒன்றுகூட வெடிக்கவில்லை? அக்காவுக்குக் கொடுக்காத நினைலேயா? அப்பா! நான் இனிமேல் அக்காவுக்கு நிறையப் பட்டாசு கொடுக்கிறேன், அப்பா!" என்றான்.

சீனுவின் முரட்டுப் பிடிவாதத்தைச் சரிப்படுத்துவதற்கு இதுதான் வழி என்று எண்ணி, "பார்த்தாயா? நீ பிடிவாதம் பிடித்து அக்காவிடமிருந்து பட்டாசை வாங்கினதால்தான் வெடிக்கவில்லை. நீ இனிமேல் பிடிவாதம் பிடிக்காமல் இருக்கிறாயா?" என்று கேட்டார் தகப்பனார்.

"ஆகட்டும், அப்பா!" என்று தலையசைத்தான் சீனு.

சீனுவைச் சந்தோஷப் படுத்துவதற்காக அவன் தகப்பனார் அந்த ஊரிலுள்ள கடையிலிருந்து வேறு பட்டாசுகள் வாங்கி வரச் செய்தார். பட்டாசு பூராவையும் சீனுவிடம் கொடுத்தார். அவன் ஓட்டோடியும் சென்று பாதியைத் தன் அக்காவிடம் கொடுத்து விட்டு வந்து, தனது பட்டாசுகளைக் கொளுத்த ஆரம்பித்தான். எல்லாம் வெடிக்க ஆரம்பித்தன. அவனுக்கு ஆனந்தம் தாங்க முடியவில்லை. அக்காவுக்குத் தன்னுடைய பட்டாசில் பாதியைக் கொடுத்ததால் தான் தன் பட்டாசுகள் வெடித்தன என்று நினைத்துக் கொண்டான்.

இந்த வருஷம் தீபாவளி வந்ததும் பிரகாசர் அதே மாதிரி இரண்டு பெட்டிகள் நிறையப் பட்டாசுகளை வரவழைத்தார். சீனு பிடிவாதம் பிடிக்காமல் முதலில் ஒரு பெட்டியைத் தன் அக்காவுக்குக் கொடுத்து, "அக்கா! உனக்கு ஒரு பெட்டி நிறையப் பட்டாசு தந்துட்டேன்; என் பட்டாசெல்லாம் வெடிக்குமோ, இல்லையோ?" என்றான்.

"இந்த வருஷம் கட்டாயம் உன் பட்டாசெல்லாம் வெடிக்கும். நீ போன வருஷம் பிடிவாதம் பிடித்து என் பட்டாசையும் பிடுங்கிக் கொண்டாயல்லவா? எனக்கு வருத்தம் தாங்க முடியவில்லை. நீ தூங்கிக் கொண்டிருந்தபோது உன் பட்டாசுப் பெட்டியில் ஜலத்தை விட்டுவிட்டேன். அதனாலேதான் உன் பட்டாசு எல்லாம் வெடிக்கவேயில்லை!" என்றாள் ஜெயம்.

"இந்தச் சமாசாரத்தை நீ முன்னமேயே சொல்லியிருந்தால் இந்த வருஷம் உனக்குப் பட்டாசே கொடுத்திருக்க மாட்டேனே!" என்று சிரித்துக் கொண்டே சொன்னான் சீனு.

மதுரை எனமல் கம்பெனி

பெயின்ட் & ஜெனரல் மெர்ச்சென்ட்ஸ்

கலர் எனமல் போர்டுகள் தயாரிப்பவர்கள் :

தபால் பெட்டி : 41, 125, திண்டுக்கல் ரோடு : மதுரை

(Y. M. C. A. கட்டிடத்திற்கு சமீபம்)

தந்தி : "எனமல்" வொர்க்ஸ் : T. P. K. ரோடு, பழங்காநத்தம்

★

சென்னை மெஸர்ஸ். அடிசன்ஸ் பெயின்ட்ஸ் & கெமிகல்ஸ் லிமிடெட்டால்

தயார் செய்யப்படுகிற

பிரசித்திபெற்ற "ஸ்பார்ட்டன்" பெயின்ட் வகையராக்களுக்கு மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி ஜில்லாக்களுக்கு (ஸ்பார்ட்டன் ஹார்டிப்ரூபுக்கு மதுரை, திருச்சிராப்பள்ளி ஜில்லாக்களுக்கு மட்டும்) பூரண விநியோகஸ்தர்களாக எங்கள் கம்பெனி நியமிக்கப்பட்டிருப்பதை சந்தோஷத்துடன் அறிவித்துக் கொள்கிறோம்.

தற்போதைய ஸ்டாக்கிலிருந்து கிடைக்கக் கூடியவைகள் :

தின்னர்ஸ்	லாக்கர்ஸ்	ப்ரைமர்ஸ்ஸர்பேசர்	ரப்பிங் கம்பவுண்ட்
பாலிஷ் & தின்னர்	காஸ்கட் ஸிமெண்ட்	ரேடியட்டர் ஸிமெண்ட்	சோல்டரிங் ப்ளூட்
க்ராபைட் க்ரீஸ்	சேஸிஸ் ப்ளாக்	மாஸ்க்கிங் க்ரீம்	க்ரோம் க்ளீன்
ப்ரென்ச் பாலிஷ்		ஹார்டிப்ரூப்	

நவம்பர்/டிசம்பர் மாதம் டெலிவரிக்கு கீழ்க்கண்டவைகள் புக் செய்கிறோம் :

பிளாக் ஜப்பான்	ஸில்வர் பெயின்ட்	ஸ்பார்சால்தின்னர் (டர்பன்டைன்)
ஆட்டோ லாக்கர்ஸ்	ஆட்டோ எனமல்,	ஸைன் ரைட்டர் எனமல்
ஸின்தடிங் எனமல்,	குயிக் ட்ரையிங் அவுன்ஹோல்டு எனமல்,	வார்னிஷ்.

1949 - ஜனவரி மாதம் முதல் சகலவிதமான பெயின்ட்டுகளும் கிடைக்கும்.

கறையான்களை ஒழிப்பதற்கும், வெயில், மழையிலிருந்து உங்கள் சாமான்களை காப்பாற்றுவதற்கும் "ஸ்பார்ட்டன்" **ஹார்டிப்ரூபை** உபயோகியுங்கள்.

மொத்த வியாபாரிகளுக்கு தகுந்த கமிஷன் கொடுக்கப்படும்.

மோட்டார்கார், சைக்கிள் முதலியவைகளுக்கு ஸ்ப்ரே பெயின்ட் செய்து கொடுக்கிறோம்.

விவரங்களுக்கு எழுதவும்

R. P.

மூன்று எழுத்துக்கள்

சபரி

அன்று எனக்கு விடுமுறை நாள்; ஆபீஸ் இல்லை.

அப்போது ஏப்ரல் மாதம். நல்ல கோடைகாலம். வெளியே தலைகாட்ட முடியவில்லை.

காலை மணி பதினொன்று இருக்கும். பொழுது போகவில்லை. எதையும் செய்ய மனமும் ஓடவில்லை.

மாடிக்குப் போனாலாவது கொஞ்சம் சௌகரியமாக இருக்கும் என்று நினைத்து அங்கே போனேன். ஆனால், கீழே இருந்ததைவிட அங்கே வெப்பம் அகோரமாக இருந்தது.

மேஜை மேலே அன்று காலை வந்த செய்திப் பத்திரிகை கிடந்தது.

கோடை காலத்திலே அதிகாலையில் பத்திரிகை வந்ததும், அதை நான் ஆவலாகப் பிரித்துப் பார்ப்பது வழக்கம். வேறு எதற்காகவும் அல்ல; சென்னை நகரத்திலே எத்தனை டிகிரி உஷ்ணம் என்பதைக் கண்டு களிப்பதற்காகத்தான்! உஷ்ணம் 108 டிகிரி, 109 டிகிரியைக் கடந்து போய்விட்டால், இரண்டு டம்ளர் 'ஐஸ் வாட்டர்' சாப்பிட்டது போல எனக்கு ஒரே ஆனந்த முண்டாகி விடும். வேறு எந்தப் பெரிய காரியத்தைச் சாதிக்கா விட்டாலும், சென்னையில் 110 டிகிரி, 111 டிகிரி உஷ்ணம் இருந்த போது நான் உயிர் வாழ்ந்தேன் என்பதையாவது என்னுடைய பிற்கால சந்ததிகள் பெருமையுடன் சொல்லிக் கொள்ளலாம் அல்லவா?

வழக்கம்போல அன்றைய தினமும் பத்திரிகையைப் பிரித்துப் பார்த்தேன்.

குண்டூரில் ஒரு கான்ஸ்டபிள் 'ஸன்ஸ்ட்ரோக்'கினால் செத்துப் போனானாம்; ஐக்கிய மாகாணத்திலுள்ள கோரக்பூரில் இரண்டு வீடுகள் சூரிய வெப்பம் தாளாமல் தீப்பற்றிக் கொண்டனவாம். சென்னையிலே ஒரு கிழவி நடுத்தெருவில் போய்க் கொண்டிருந்த போது மூர்ச்சையாகிக் கீழே விழுந்தாளாம்.

இதையெல்லாம் பார்த்ததும் எனக்கே மூர்ச்சை யுண்டாவதுபோல இருந்தது. பத்திரிகையை வீசி எறிந்துவிட்டு அங்கிருந்த ஒரு நாற்காலியில் உட்கார்ந்தேன். ஆனால், உட்கார முடியவில்லை.

வானம் கொதித்தது; பூமி கொதித்தது; மேஜை சுட்டது; நாற்காலி சுட்டது; சுவர்கள் கொதித்தன. நானே கொதித்துக் கொண்டிருந்தேன்.

நல்ல வேளையாக அன்று எனக்கு ஓய்வு நாள்.

எனக்கு ஒரு யோசனை உதித்தது. சட்டையை அவிழ்த்துக் கொடியில் மாட்டி விட்டு, ஒரு வாளியை எடுத்துக் கொண்டு போய்த் தண்ணீரை மொண்டு கொண்டு வந்து அறை முழுவதும் கொட்டினேன். குறைந்த பட்சம் இருபது முப்பது வாளித் தண்ணீரையாவது கொட்டியிருப்பேன். சுவர்கள் மீதும், மேலே விட்டங்கள் மீதும், ஏன்-என் மீதே கூடத் தண்ணீரைக் கொட்டிக் கொண்டேன்!


வாசல் கதவு மாத்திரம் திறந்திருந்தது. இப்போது சற்றுக் குளுகுளு வென்றிருப்பது போலத் தோன்றியது. ஏறக்குறைய ஒரு அரைக்கால் உதகமண்டலம் போலவும் மாகாணி சிம்லாவைப் போலவும் இருந்தது. சாய்வு நாற்காலியை இழுத்துக் கொண்டு வந்து அறையின் நடுவிலே, வாசலை எதிர்த்தாற் போலப் போட்டுக் கொண்டு அதன்மீது சாய்ந்தேன்.

வெகு சுகமாக இருந்தது.

முன்னாலே பார்த்தேன். ஒரே பாழ் வெளி. வெய்யில் பளிச்சென்று முகத்திலடிப்பது போலக் கண்ணைப் பறித்தது. ஆடு மாடுகள், காக்கைக் குருவி ஒன்றைக் கூடக் காணோம். ஆனால்—?

உலகமே கருகிச் சாம்பலானதைப் போலத் தோன்றிய அந்த அகோர வெப்பத்தில், ஆடுமாடுகள் எதுவும் காணப் படா விட்டாலும், குருவி காக்கை எதுவும் அகப்படா விட்டாலும் சில மனித ஜந்துக்கள் மாத்திரம் அங்கே நடமாடிக் கொண்டிருப்பதைக் கண்டேன்.

அங்கே ஒரு கட்டிட வேலை நடந்து கொண்டிருந்தது. ராவ்பகதூர் ரங்கிமல் சௌகார் பத்து வீடுகளுக்குத் திட்டம் போட்டு அங்கே கட்டிடம் கட்டிக் கொண்டிருந்தார். கட்டிடம் கட்டுவதற்கு



இரண்டு வருஷத்துக்கு முன்னாலேயே, அவர் காலியிடத்தைக் கட்டிக் காட்டிப் பத்துப் பேரிடம் ஒரு வருஷ வீட்டு வாடகையை அட்வான்ஸாக வாங்கிக் கொண்டார். ஆனால் வருஷம் இரண்டு ஆகியும் அவர் கட்டிட வேலையை ஆரம்பிக்கவே இல்லை. கடைசியில், அட்வான்ஸ் கொடுத்தவர்கள் அவர்மீது ஆத்திர மடைந்து, இரண்டு மூன்று மாதத்துக்குள் எப்படியாவது கட்டிடத்தைக் கட்டிக் கொடுத்து விட வேண்டுமென்றும், இல்லாவிட்டால் கோர்ட்டில் அவர் மீது வழக்குத் தொடரப் போவதாகவும் மிரட்டி வக்கீல் நோட்டீசு விட்டார்கள். சௌகார் வேறு வழி இல்லாமல் வேலையை ஜரூராக ஆரம்பித்தார்.

அஸ்திவார வேலை முடிந்து விட்டது. அதன் மேலே இப்போது செங்கல் சுவர் எழும்பிக் கொண்டு வந்தது. கொத்தர்கள் செங்கல் மேல் செங்கல்லாக வைத்து, அதன் மீது தங்கள் வியர்வையையும் சாந்தையும் குழைத்துப் பூசிக் கொண்டிருந்தார்கள்.

அந்தக் கொத்தர்களைத் தவிர, ஐந்தாறு ஆண்களும் நான்கைந்து பெண்களும் எடுபிடி வேலை செய்து கொண்டிருந்தார்கள். பெண்களில் ஒருத்தி தண்ணீரை மொண்டு கொண்டு வந்து கொட்டிக் கொண்டிருந்தாள். மற்றொருத்தி, மலை போல அங்கே குவிந்திருந்த மண்ணை எடுத்துக் கொண்டு போய் அப்பால் கொட்டிக் கொண்டிருந்தாள். ஒரு பெண் செங்கல்லைக் கூடையில் எடுத்துக் கொடுத்தாள். ஐம்பத்தைந்து அறுபது வயது மதிக்கத்தக்க ஒரு கிழவி அந்தக் கூடையை வாங்கிக் கொண்டுபோய்க் கொத்தனாரிடம் கொடுத்துக் கொண்டிருந்தாள்.

வேலை சுறுசுறுப்பாக நடந்து கொண்டிருந்தது.

அத்தனை பேரிலும் என் மனமும் கண்ணும் ஏனோ அந்தக் கிழவியை நாடிச் சென்ற வண்ணமாகவே இருந்தன.

ஐம்பத்தைந்து வயதுள்ள அந்தக் கிழவி எவ்வளவு உற்சாகமாகவும் வேகமாகவும் சந்தோஷமாகவும் ஒவ்வொரு கூடையும் செங்கல்லை எடுத்துக் கொண்டு போய்க் கொடுத்துக் கொண்டிருந்தாள்! இந்தப் பொல்லாத கடும் வெய்யிலிலே அடி யெடுத்து வைக்க அவளால் எப்படி முடிகிறது? இதோ, கீழே படுத்துக் கொண்டிருக்கும் என் தாய்க்கும் ஏறக் குறைய அதே வயதுதானாகிறது. ஆனால், அவளோ மாதம் முப்பது நாளும் படுத்த படுக்கையாக அல்லவா இருக்கிறாள்? அப்படியிருக்கும்போது இந்தக் கிழவி மாத்திரம் எப்படி இந்த வெய்யிலில் வேலை செய்ய முடிகிறது? அப்படி அவளை வேலை செய்யத் தூண்டும் சக்தி எது?

அவளுக்கு ஸன்ஸ்ட்ரோக்கோ, ரத்தப் பெருக்கோ ஏன் ஏற்படுவதில்லை?

இதைப் பற்றி நான் வெகுநேரம் வரை யோசித்துக் கொண்டே இருந்தேன். திடீரென்று கீழேயிருந்து ஒரு குரல் கேட்டது.

"என்ன, மணி இரண்டு ஆகிவிட்டதே; சாப்பிட வரவில்லையா?"

மணி இரண்டா ஆகிவிட்டது? கைக் கடியாரத்தைப் பார்த்தேன். ஆம், சரியாக மணி இரண்டு. வெய்யிலின் கொடுமையையும் மிஞ்சி நான் யோசனையில் தீவிரமாக ஆழ்ந்து விட்டேன் போலும்!

"இதோ, வந்துவிட்டேன்!" என்று சொல்லிக்கொண்டே எழுந்து கிழே போனேன்.

பொதுவாகக் கடியாரத்தைப் பார்த்த தும்தான் எனக்கு வயிறு பசிக்கும். இப்போது என் மனைவி 'மணி இரண்டு' என்று சொன்னதும் எனக்கு வயிறு 'கர்' ரென்று பசித்தது. கிழே இலை போட்டுத் தயாராக வைத்திருந்தது. கையை அலம்பிக்கொண்டு சாப்பிட உட்கார்ந்தேன். அப்போது வாசலில் யாரோ கூப்பிடும் சத்தம் கேட்டது.

"அம்மா, கொஞ்சம் தண்ணி கொடுங்க, அம்மா!"

அது யாராக இருக்கலாம் என்று நினைத்து எட்டிப் பார்த்தேன். அந்தக் கிழவி—செங்கல்லை எடுத்துக் கொண்டு போய்க் கொடுத்துக் கொண்டிருந்த அதே கிழவி—அங்கே நின்று கொண்டிருந்தாள்.

என் மனைவி அவளை முறைத்துப் பார்த்துவிட்டு, "தண்ணி இல்லே, போ!" என்றாள்.

நான் சாதத்தில் கையை வைத்து விட்டேன். இருந்தபோதும் மனம் கேட்க வில்லை. எழுந்து கையை அலம்பிக் கொண்டு ஒரு சொம்பில் தண்ணீர் மொண்டு கொண்டுபோய் அவளுக்குக் கொடுத்தேன். அவள் அதை ஆவலாக வாங்கிப் பருகினாள். பிறகு, நன்றியறிதலுடன், "சாமி, நீங்க நன்று யிருக்க வேணும்!" என்று என்னை உளங்கனிய வாழ்த்தினாள்.

அவள் புறப்படப் போனாள். என் வாய் என்னையும் அறியாமல் அவளைப் பார்த்து ஒரு கேள்வி கேட்டது:

"நீ எப்படி இந்த வெய்யிலில் வேலை செய்கிறாய்?"

அவள் சிரித்தாள். வியப்புடன்தான் சிரித்திருக்க வேண்டும். அந்தகைய கேள்வியை அவளுடைய வாழ்க்கையில் வேறு யாரும் கேட்டிருக்க முடியாது. கணத்தில் அந்த வியப்பு மறைந்தது. அவள் சொன்னாள்:

"வெயிலா, சாமி! அதைப் பத்தி யெல்லாம் நினைப்பதற்கு எங்களுக்கு நேரம் எங்கே இருக்கிறது, சாமி?"


"என்ன, அப்படிச் சொல்லுகிறாய்?" என்று நான் புரியாதவனைப் போல மீண்டும் அவளைக் கேட்டேன்.

"ஆமாம், சாமி! வயித்தைப் பத்தி நினைக்கிறதுக்கே எங்களுக்கு நேரம் சரியாக இருக்கும் போது வெயிலைப் பத்தி நினைக்கிறதுக்கு எங்களுக்கு நேரம் எங்கே இருக்கிறது, சாமி?" என்றாள்.

ஒரு கணம் நான் அசைவற்று அப்படியே நின்றேன்.

வயிறு என்பது அவ்வளவு சக்தி வாய்ந்ததா? மே மாதத்துக் கடும் வெய்யிலை விடவா? அந்த மூன்று எழுத்துக்களுக்கு அவ்வளவு வலிமை உண்டா?

டெலிபோனில் தர்ப்பணம்!



சாஸ்திரிகள்:—எனக்கு அங்கு வர நேரம் இல்லை; டெலிபோனிலேயே மந்திரத்தைச் சொல்கிறேன்; தர்ப்பணம் செய்யுங்கள். தக்ஷிணையை அப்புறம் வந்து 'கலெக்ட்' பண்ணிக் கொள்கிறேன். சுக்லாம் பரதரம்............விஷ்ணும் சசிவர்ணம்......

தீபாவளி இல்லை!

பகீரதன்

தியாகராய நகரம்,
30-10-48

என் பிரியமுள்ள அனுசூயாவுக்கு,

எல்லா வருஷமும் போலிருந்தால் நீ இதற்குள் எண்ணெய் ஸ்நானம் செய்து விட்டுப் புதுப் புடவை உடுத்திக் கொண்டு உன் கணவருடன் சந்தோஷமாகத் தீபாவளி கொண்டாடி யிருப்பாய். இந்த வருஷம்தான் காந்தி மகானை இழந்து நாம் கண் கலங்கி நிற்கிறோமே! என்ன செய்வது? நாம் கொடுத்து வைத்தது அவ்வளவுதான்!

எனக்கு இரண்டு மூன்று நாட்களாக உன்னுடைய நினைவேதான். பகலெல்லாம் உன்னைப் பற்றி நினைப்பேன்; இரவெல்லாம் உன்னைப் பற்றிக் கனவு காண்பேன். நீ என்னை விட்டுப் பிரிந்த மறுநாளே என் கணவரிடமிருந்து கடிதம் வந்தது. 'மாம்பலத்திலே வீடு கிடைத்து விட்டது. உடனே புறப்பட்டு வா; தீபாவளியைப் புது வீட்டிலேயே கொண்டாடலாம்' என்று எழுதி யிருந்தார்.

எந்த வேளையில் இந்த வீட்டுக்கு வந்தேனோ? வந்ததிலிருந்து உனக்கு ஒரு கடிதம்கூட எழுத முடியவில்லை. வீட்டிலே சாமான்கள் எல்லாம் ஒரே அல்லோல கல்லோலமாகக் கிடந்தன. அதற்காக இவர் பண்ணின அமர்க்களத்தை எழுத முடியாது. ஏதோ எனக்குத் தெரிந்த வரையில் சாமான்களை எடுத்து வைத்தேன். வெளியிலே போய்விட்டு வந்தவர் 'ஹோ' என்று இரைந்து கொண்டே வந்தார். 'அது சரியாக இல்லை, இது சரியாக இல்லை; மேஜையை இங்கே போட்டிருக்கக் கூடாது, அலமாரியில் என்னுடைய சாமான்கள்தான் இருக்கணும்; காப்பி ஃபில்டரைச் சமையல் உள்ளில் வைத்து மூடி இருக்கணும்; நிலைக் கண்ணாடியை உனக்குத் தகுந்தாற்போல மாட்டிக் கொண்டாய்; நான் கிராப்புச் சீவணும்னால் முக்காலிமேல் ஏறி நின்று தகிங்கிணதோம் போடவேணும்' என்றெல்லாம் ஆயிரம் குறைகள் சொன்னார்.

'இதோ பாருங்கள், எனக்குத் தெரிந்த மட்டில் என்னமோ செய்தேன். இனி நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள்!' என்றேன்.

'ரொம்ப சரி, உனக்கு இன்னும் கொஞ்சம் நாளுக்காக இருக்கத் தெரிந்து விட்டால் நீ எவ்வளவு பேசுவாயோ, தெரியவில்லை. முழம் நீளம் வாயாவது இருக்கே! உங்கம்மா எதைச் சொல்லிக் கொடுக்கா விட்டாலும் இந்த மாதிரி வாயாடவாவது சொல்லிக் கொடுத்தாளே, அதுவரையில் சந்தோஷம்! நானே எல்லாவற்றையும் செய்கிறேன், பார்!' என்று சொல்லிச் சட்டையைக் கழற்றி வைத்துவிட்டு வந்தார்.

வரும்போதே வழியில் இருந்த நாற்காலியில் கால் தடுக்கித் தொபுகடீரென்று கீழே விழுந்தார். நான் சிரமப்பட்டுச் சிரிப்பை அடக்கிக்கொண்டு அவரைப் பார்க்காதவள் போல மறு பக்கம் திரும்பிக் கொண்டேன். நான் என்ன செய்கிறேன் என்று பார்த்துக் கொண்டே காமரா உள் பக்கம் போனவர், 'படார்' என்று நிலைப்படியில் மோதிக் கொண்டு எதையோ தேடுபவர்போலத் தலையைத் தடவிக்கொண்டே கீழே உட்கார்ந்தார். அதை என்னால் பார்த்துக் கொண்டிருக்க முடியவில்லை. ஓடோடியும் போய், 'என்ன தேடுகிறீர்கள்? ஏன் இப்படித் தலையை ஒற்றைக் கையால் அமுக்கிப் பிடித்துக் கொண்டிருக்கிறீர்கள்?' என்று கேட்டேன். 'ஒன்றுமில்லை, உன்னுடைய சிநேகிதி கொடுத்தாள் என்று ஒரு மகாத்மா படம் கொண்டு வந்தாயே, அதைக் கொண்டு முதலில். கூடத்தில் மாட்டுவோம்' என்றார்.

'பொழுது விடிந்ததும் பார்த்துக் கொள்ளலாம். மணி எட்டாகிவிட்டது. சாப்பிடலாம் வாருங்கள். அந்தப் படத்தை மாட்டுவதற்குச் சுவரில் ஆணிகூடக் கிடையாது'' என்றேன்.

உடனே வேலைக்கார முனியம்மாளைக் கூப்பிட்டு, 'இரண்டணாவுக்கு ஆணி வாங்கிக் கொண்டு வா!' என்று அனுப்பினார். அடுத்தாற்போல் என்னைப் பார்த்து, 'சரோஜா! அடுத்த வீட்டுக்குப் போய் அந்த அம்மாளைப் பார்த்துக் குழந்தைகள் எல்லாம் சௌக்கியமா என்று கேட்டுவிட்டுக் கொஞ்சம் சுத்தி வாங்கிக்கொண்டு வா!'' என்று என்னை அனுப்பினார். அந்த வீட்டு அம்மாள் ரொம்ப நல்லவள். 'ராத்திரியிலே எதற்குச் சுத்தி? சாயங்காலத்திலிருந்து

உங்கள் வீடு அமர்க்களப்படுகிறதே!' என்று சொல்லிக் கொண்டே சுத்தியைக் கொடுத்தான். அதை இவரிடம் சொன்னேன்: 'நம்மை என்ன, ரகளைக்காரர்கள் என்று நினைத்து விட்டார்களா? ஒரு பொம்மனாட்டிக்கு இவ்வளவு வாய் கூடாது!' என்று சத்தம் போட்டுவிட்டு அவர் படத்தை மாட்டக் கிளம்பினார்.

வேலைக்கார முனியம்மாள் கொண்டு வந்து கொடுத்த ஆணிப் பொட்டணத்தை எங்கேயோ வைத்துவிட்டு வீடு பூராவும் தேடினார். 'இழவெடுத்த வீடு! இப்பொழுதுதானே அந்த ஆணிப் பொட்டணத்தை வாங்கி இங்கே வைத்தேன். அதற்குள் எங்கே போய்விடும்? இப்படித் தேடிப் பாரேன்; கல்லுப்பிள்ளையார் மாதிரி உட்கார்ந்து விட்டாயே!' என்று என்மீது எரிந்து விழுந்தார். பிறகு இங்கு மங்கும் தேடு தேடென்று தேடினோம். நான் எதேச்சையாக, 'உங்கள் மடியில் பாருங்கள்' என்று சொன்னேன். ஆணிப் பொட்டணம் அவர் மடியிலேயே இருந்தது!

'இதென்ன விளையாட்டு? அப்பொழுதே என் மடியில் இருக்கிறது என்று சொல்லக் கூடாதா?' என்று கத்திவிட்டு, 'இதோ பார்! மெதுவாக ஆணியை அடி!' என்றார். நானும் அடித்தேன். 'வேகமாக அடி' என்றார். 'சரி' என்று வேகமாக அடித்தேன். 'அடியே! என் கையில் அடித்து விட்டாயே!' என்று கத்திக் கொண்டே தன் விரலை வாயில் வைத்துக் கொண்டு என்னை விழுங்கிவிடுவதுபோலப் பார்த்தார். நான் பயந்தே போய்விட்டேன்.

அதற்கேற்றாற்போல அந்தச் சமயத்தில் எங்கிருந்தோ வந்த காற்று அரிக்கன் விளக்கை அணைத்துவிட்டது. நானும் அவருமாகக் கஷ்டப்பட்டு நெருப்புப் பெட்டியைத் தேடி அரிக்கனைக் கொளுத்தினோம். அரிக்கன் விளக்கைக் கொளுத்தியவர் நெருப்புக் குச்சியை அணைக்காமல் கூடத்தில் எறிந்து விட்டார். என் கேட்கிறாய் அதை? வெளியிலிருந்து வரும்போது என் தம்பி எனக்கு நாலு சீன வெடிக் கட்டுக்கள் கொடுத்திருந்தான். அதை அங்கே போட்டிருந்தேன். இவர் அணைக்காமல் எறிந்த நெருப்புக் குச்சியில் அந்தப் பட்டாசுக் கட்டுக்கள் பற்றிக் கொண்டு 'படார்! படார்!' என்று வெடிக்க ஆரம்பித்து விட்டன. இப்படி வெடித்த சத்தத்தைக் கேட்டுப் பக்கத்து வீட்டிலிருந்தவர்கள் எல்லாம் வந்து கூடிவிட்டார்கள். அவர்களைப் பார்க்கவே எனக்கு வெட்கமாகப் போய்விட்டது. இவர் கையில் சுத்தியை வைத்துக் கொண்டு நின்றதைப் பார்க்கும்போது சாட்சாத் எங்கள் வீட்டுக் குலதெய்வம்போலவே இருந்தது. பக்கத்து வீட்டுக்காரர்களை எல்லாம் அனுப்பிவிட்டு, 'நீங்கள் காந்தி படத்தை மாட்டினது போதும். பேசாமல் படுத்துக் கொள்ளுங்கள். பொழுது விடிந்ததும் மாட்டிக் கொள்ளலாம்' என்று சொன்னேன்.

அவ்வளவுதான்; வந்துவிட்டது கோபம். ஒரு குதி குதித்து, 'நீ போய் வேணுமானால் படுத்துக் கொள். நான் இந்தப் படத்தை மாட்டாமல் தூங்கப் போவதில்லை' என்று கத்திவிட்டு ஒரு மணி நேரமாகச் சிரமப் பட்டுக் காந்தி மகாத்மாவின் படத்தைச் சுவரில் மாட்டிய பிறகு நிமிர்ந்த நடையுடன் வந்தார். எனக்கும் உள்ளூற அவருடைய விடாமுயற்சியில் சந்தோஷம்தான். அதை மனதிற்குள்ளேயே நினைத்துக் கொண்டு அவரை ஒருமாதிரியாகப் பார்த்தேன். 'என்ன சரோஜா! உன் [illegible]திக்கு ரொம்ப வந்தனம் என்று சொல்லிக் கடிதாசி எழுது. காந்தி படத்தை வீட்டிலே



மாட்டியிருப்பது நம் வீட்டுக்கே ஒரு அவமானமாயிருக்கிறது என்று மறந்து விடாமல் எழுது!' என்று சொன்னார்.

'ஆகட்டும்!' என்று சொல்லிவிட்டு 'சாப்பிடலாமா?' என்றேன். விரலில் தான் கத்தியால் அடித்து விட்டாயே, குழம்புச் சாதமே சாப்பிட முடியாது. கொஞ்சம் மோரும் சாதமுமாகப் பிசைந்து எடுத்துக் கொண்டு வா!' என்று சொல்லி விட்டு உட்கார்ந்தார்.

என்னடி சொல்வேன்! கூடத்திலே 'படார்' என்று சத்தம் கேட்டது. ஓடிப் போய்ப் பார்த்தோம். காந்தி மகான் படம் ஆணியையும் சேர்த்துப் பெயர்த்துக் கொண்டு கீழே விழுந்து கண்ணாடி உடைந்து விட்டது. நல்ல வேளையாகப் படம் கெட வில்லை. எனக்கும் அவருக்கும் முகத்தில் ஈயாடவில்லை. ரொம்பவும் கஷ்டத்துடன் என்னைப் பார்த்துக் கம்மிய குரலில், 'நீ விசாரப் படாதே! காலைக்கே கண்ணாடி போட்டுக் கொண்டு வருகிறேன்' என்று சொல்லிச் சாப்பிடாமலேயே படுத்துக் கொண்டார்.

பொழுது விடிந்ததும் முதல் வேலையாகக் கடைத்தெருவுக்குப் போய் மகாத்மா படத்துக்குக் கண்ணாடி போட்டுக் கொண்டு வந்து வைத்திருக்கிறார். நல்ல வேளையாகச் சுவரில் மாட்டவில்லை. மேஜைமேலேயே வைத்து மாலை போட்டு வைத்திருக்கிறார். இந்தியாவின் தந்தையாகிய காந்தி மகான் அமரராகி இன்னும் ஓராண்டு முடியவில்லை யல்லவா? அதனால் இந்த வருஷம் நானும் அவரும் தீபாவளி கொண்டாடவில்லை. நாங்கள் மட்டும் என்ன, இந்தியாவிலேயே இந்த வருஷம் யார்தான் அவ்வளவு உற்சாகமாகத் தீபாவளி கொண்டாட முடியும்?

இப்படிக்கு,
உன் அன்பை மறவாத,
சரோஜா.

காலக்ஷேபம்

அயோக்கியர்கள்!

முதல் கைதி:—என்ன அண்ணே! போலீஸ்காரங்க கொஞ்சம் யோக்கியதையோடு நடந்துக்கிட்டிருந்தால் நான் இங்கே வந்திருக்கவே மாட்டேன்!

இரண்டாவது கைதி:—அவுங்க என்னடா யோக்கியதை யில்லாமல் நடந்துகிட்டாங்க?

முதல் கைதி:—அதை ஏன் கேட்கிறே? திருடன் மாதிரிப் பதுங்கிப் பதுங்கித் தொடர்ந்து வந்து என்னைப் பிடிச்சிட்டாங்களே!

★

சிரமம்தான்!

ஒரு பள்ளிக்கூட உபாத்தியாயருக்குப் பின் வருமாறு ஒரு கடிதம் வந்தது:

"தயவு செய்து உங்கள் வகுப்பில் படிக்கும் ராமுவுக்கு வீட்டுக் கணக்கு இனிமேல் கொடுக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். நீங்கள் முந்தாநாள் அவனுக்குக் கொடுத்த கணக்கு அவன் தகப்பனாரை ரொம்பவும் சிரமப்படுத்தி விட்டது. 'ஹைகோர்ட்டுக் கட்டிடத்தை ஐம்பது தடவை சுற்றி வருவதற்கு ஒரு மனிதனுக்கு எவ்வளவு நேரம் பிடிக்கும்?' என்ற கணக்குத்தான் அது. அதற்காக அவர் ஆபீஸுக்கு லீவு போட்டுவிட்டு ஹைகோர்ட்டைச் சுற்றினார். கடைசியில் அவர் கஷ்டப்பட்டுக் கண்டு பிடித்த கணக்கு விடையைத் தப்பு என்று சொல்லிவிட்டீர்களாமே!"

வாஸ்தவம்

"டேய், உண்மையைச் சொல்லி விடு. உன் கணக்கை யெல்லாம் முருகனுடைய நோட்டுக்களைப் பார்த்துத்தானே போட்டாய்?"

"இல்லே, ஸார்! நான் அதைப் பார்த்துப் போடவில்லை, ஸார்!"

"இப்பொழுது அடி விழும். நிஜத்தைச் சொன்னால் மன்னித்து விடுகிறேன். உம்!"

"நான் அவன் நோட்டுக்களைத் தொடக்கூட இல்லே, ஸார்! அவனேதான் போட்டுக் கொடுத்தான்!"

★

ரயிலைப் பிடிக்க!

ஒருவர் (அவசரமாகக் கடைக்குள் நுழைந்து):—ஐயா, கடைக்காரரே! எலி பிடிக்கும் கூண்டு ஒன்று வேண்டும்; சீக்கிரம் கொடுங்கள்.

கடைக்காரர்:—ஏன் அவ்வளவு அவசரம்?

ஒருவர்:—நான் அரக்கோணம் பாசஞ்சரைப் பிடிக்க வேண்டும்.

★

கெட்டிக்காரப் பையன்!

பையன் (வாசலிலிருந்து உள்ளே வேகமாக ஓடி வந்து):—அப்பா, அப்பா! வாசலிலே ஒருத்தன் ஓயாமல் 'ஓரணா, ஓரணா' என்று கத்திக் கொண்டிருக்கிறான். ஒரு அணாக் காசு கொடு. அவனிடம் வீசி எறிந்து விட்டு வந்து விடுகிறேன்!

அப்பா:—அவன் யாரடா, அவன்?

பையன்:—மிட்டாய்க்காரன், அப்பா!

உண்மையைக் கண்டேன்: உவமையை மறந்தேன்!

எஸ்.வி.எஸ்.

கண்ணுக் கெதிரிலிருந்த நீள் கடலைப் பார்த்தவாறு கடற்கரையி லமர்ந்திருந்தேன். அதில் சிறிய அலைகளும் பெரிய அலைகளும் ஒன்றுடன் ஒன்று மோதி எழும்பிப் புரளுவதைப் பார்க்கவில்லை. அந்த அலைகளில் துள்ளி விளையாடும் சிறுவர்களைப் பார்க்கவில்லை. அந்த அலைகளின் அழகில் ஈடுபட்டு உட்கார்ந்திருந்த மனித வர்க்கத்தையும் பார்க்கவில்லை. அந்த நீள் கடலின் நீளமும் அகலமும் நிரம்பி யிருந்த நீலநிறத்தையே பார்த்து வியந்து கொண்டிருந்தேன்.



சற்று, அந்தக் கடற்கரையின் வெண் மணற் பரப்பில் சாய்ந்தேன்.

அகண்டாகாரமான வான வெளி கண்ணுக்குப் பட்டது. இல்லை......இல்லை...... வானவெளி கண்ணுக்குப் படவில்லை. அந்த வானவெளி முழுதும் பரவியிருந்த-மறுபடியும் - அந்த நீல நிறந்தான் கண்ணுக்குப் பட்டது. 'ஆகா! வானமும் வாரிதியும்—எங்கும் ஒரே நீல நிறம்! எவ்வளவு அழகாக இருக்கிறது!'' என்று எண்ணி மகிழ்ந்தேன்.

கூடவே ஒரு எண்ணம் உதித்தது. பக்கத்தில் 'அவள்' இருந்தால் இந்தக் காட்சியை இன்னும் எவ்வளவு அனுபவிக்கலாம் என்று எண்ணினேன்.

அடாடா! இது என்ன பைத்தியக்காரத்தனம்! எனக்குத்தான் 'அவள்' கிடையாதே! எனக்குக் கலியாணமே ஆகவில்லையே என்ற நினைவு வந்தது!



எனினும், 'ஒரு நாள் அவள் வருவாள்... வரட்டும்... அப்போது இங்கே அமர்ந்து கண்ணுக் கெட்டிய தூரம் வானமும் நீரும் [illegible] நீல நிறம் விரவி யிருப்பதைக் காண்பிக்கலாம்' என்று எண்ணிக் கொண்டேன்.

அது மட்டுமா?

"எங்கும் விரவியிருக்கும் நீல நிறம் எங்கும் நிறைந்த இறைவனுக்கு ஏற்ற நிறமென்று உணர்ந்து நம்மவர் கண்ணனுக்கும் ராமனுக்கும் திருமேனியை நீல நிற மயமாகச் செய்தார்கள் என்பதை யெல்லாம் அவளிடம் சொல்லி அனுபவிக்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டேன்.

உண்மையிலேயே ஒரு நாள் 'அவள்' வந்தாள். அழகிய நீல நிறப் புடவையை அணிந்துகொண்டு வந்தாள். நான் சொல்ல வேண்டுமென்று எண்ணியிருந்ததெல்லாம் மறந்தேன்!

* * *

வானுலக வீதியிலே அவ்வொரு நாள் பூரண சந்திரன் உலா வந்தான். தன் பூரண சந்திரிகையையும் பொழிந்து மண்ணுலகைப் பொன்னுலகாக்கிக் கொண்டு வந்தான். அந்தக் காட்சியில் ஈடுபட்டுப் பரவசமாகி யிருந்தேன். அப்பொழுது என் உள்ளத்தின் வெகு ஆழமான பகுதியிலிருந்து ஒரு உண்மை மென்ன மென்ன மேலுக்கு வந்து கொண்டிருந்தது. அதைக் கொஞ்ச நாழிகையில் என் உதடுகளும் முணு முணுக்க ஆரம்பித்தன. 'இவ்வளவு நிறைவுள்ள சந்திரனிலும் ஒரு குறை இல்லாமற் போகவில்லை! ஆகவே, எந்த அழகிய வஸ்துவிலும் ஒரு சிறு குறையில்லாமற் போகாது!' என்று நினைத்தேன்.

இதையும் அவளுக்குச் சொல்ல வேண்டும் என்று எண்ணிக் கொண்டேன்.

ஒரு நாள் உண்மையிலேயே அவள் வந்தாள். அவள் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தேன். அந்த முகம் சந்திரனை விட அழகாக இருந்தது. ஒரு குறையும் காணக் கிடைக்க

வில்லை. ஆகவே அவ ளிடம் சொல்ல வேண் டும் என்று எண்ணிக் கொண் டிருந்ததும் என் உள்ளத்தை விட்டுத் தானே அகன்று விட்டது!



* * *

முன்னம் ஒரு நாள் கவிஞன் இயற்றிய கவி யொன்றைப் படித்துக் கொண்டிருந்தேன்.

காதலியின் குறு நகை யை வெகுவாக அனுப வித்துப் பாடி யிருந்தான். அவள் குறு நகை புரிவதைக் கண்டால் 'செவ் வாம்பல் மலருக்குள் முல்லை மலர் எப்படி வந்தது?' என்று வியந்து கேட்கத் தோன்றுமாம்.

ஆம், அதரங்களை ஆம்பலுக்கும், பற் களை முல்லைக்கும் ஒப்பிட்டிருந்தான்.

இந்த உவமையைக் கொண்டு அந்தக் குறு நகையைக் கற்பனை செய்து பார்த் தேன். என் மனசுக்குப் பிடிபடவே இல்லை!

சரி, ஒரு நாள் அவள் வருவாள். அவ ளையே கேட்போம் என்றிருந்தேன்!

அந்த ஒரு நாளும் வந் தது. அவளும் வந்தாள், புன்னகைபூத்தவண்ணமே வந்தாள். அதை வியந்த நான் அவளைக் கேட்க வேண்டுமென் றிருந்ததை மறந்தேன்!

ஆம், உண்மையைக் கண்டேன், உவமையை மறந்தேன்!

இவ்விதம் அவள் நேரில் இல்லாதபோது, இந்த விஷயங்கள் நினை வுக்கு வருகின்றன. நேரில் கண்டாலோ எல்லாவற்றையும் மறந்துவிடுகிறேன்.

இந்த நினைவும் — மறதியுந்தான் எவ் வளவு ஆச்சரியமாக இருக்கிறது!

* * *

இப்பொழுது அவள் தன் பிறந் தகத்திலிருக்கிறாள். தீபாவளிக்கு வரச் சொல்லி எழுதி யிருக்கிறாள். நானும் போவதாகத் தீர்மானித்திருக்கிறேன். இந்தத் தடவை உண்மை வெற்றி கொள் கிறதா, உவமை வெற்றி கொள்கிறதா என்று பார்க்க வேண்டும்!

தாடி ஜாக்கிரதை!



தாத்தா முன்னெச்சரிக்கையாக வாளியில் ஜலத்தை வைத்துக்கொண்டு படிக்கிறார்.

கம்பர் தரும் காட்சி

டி.கே.சி.

228. ராமபாணந்தான் ஊழித் தீ!

சீதையின் இதயத்துக்குள் எப்படியோ ஒரு ஏமாற்றம் புகுந்து, "என் உயிர் இங்கேயே போய்விடும்; என்னை ஒருவரும் மீட்க-மாட்டார்கள். அபரக் கிரியைகளை கங்கைக் கரையில் செய்துவிடச் சொல்" என்றெல்லாம் புலம்புகிறாள். அனுமனுக்கு ஒன்றும் ஓடவில்லை.

"எவ்வளவோ உறுதி சொல்லியும் கணையாழியைக் காட்டியுங் கூட சீதைக்கு உறுதி பயக்கவில்லையே! உயிர் பதைப்பது நிற்கவில்லையே" என்று கையை நெரித்த வண்ணமாய் நிற்கிறான் அனுமன். சிறிது நேரம் கழித்து அவனது உள்ளத்தில் ஒரு ஊக்கம் பிறக்கிறது.

சந்தம்

தானன தானன
தான தன்னன

இத்திறம் இனையன
விளம்ப, 'இன்உயிர்

தந்துறல் ஒழிந்திலள்
தைய லாள்' என,

எத்திறத்(து) ஏவெவை
இயைந்த, இன்னுரை

ஒத்தன, தெரிவுற
உணர்த்தி னான்அரோ.

[இத்திறம் இனையன விளம்ப: இந்த விதமாக இன்ன இன்ன விஷயங்களைச் சீதை சொல்லவும்; ஒழிந்திலள் தையலாள்: பதை பதைக்கிற உயிருக்கு அமைதி வரவில்லையே சீதைக்கு; என: என்று எண்ணியவனாய்; எத்திறத்து ஏவெவை இயைந்த: என்ன முறையில் என்ன என்ன விஷயங்கள் பொருந்துமோ அவைகளை; இன் உரை ஒத்தன: இதமான பாவத்துக்கு ஒத்ததான வார்த்தைகளில்; தெரிவுற உணர்த்தினான் அரோ: சீதையின் மனதில் படும்படியாகப் பேசினான் அனுமன்.]

* * *

சீதையினுடைய மன ஆற்றாமை புலனாகியது. அதோடு ராமனது இணையில்லாத வீரமும் ஆற்றலும் ஞாபகத்துக்கு வருகின்றன. அனுமனது உள்ளத்தில் ஒரு ஹாஸ்யமும் பிறந்துவிடுகிறது.

"வெகு அழகாய் இருக்கிறது! நீ இங்கே இறந்து போகிறதாம். அதைக் கேட்டு அந்த ராமனும் 'எல்லாம் பிரயோசனம் இல்லாத காரியம்' என்று அப்படியே உயிர் பிழைத்து ஊருக்குப் போய் விடுவானும்! பேஷ்! பேஷ்!

தான தன்னன
தன் னன் ன

வீவாய் நீயிவண்
வீ வா யே!

ஓய்வான் இன்னுயிர்
உய் வா னும்!

போவான் அந்நகர்!
புக் கங் கே

வேய்வான் மௌலியும்
மெய் யன் றே.

[வீவாய் நீ இவண் வீவாயே: இறந்து போய் விடுவாய் நீ இந்த இடத்தில்; சரி சரி, இறந்துவிடுவாயாக்கும்; அதைக் கேட்ட ராமனும்; ஓய்வான்: பிரயோசனமில்லாத காரியம் என்று சும்மா இருந்து விடுவான்; இன் உயிர் உய்வானும்: உயிரும் அவனுக்கு உடலில் நன்றாய்த் தங்கிவிடும்; போவான் அந்நகர்: அயோத்தியைப் பார்த்து நடக்கவும் தோன்றும்; புக்கங்கே: அயோத்திக்குள் பிரவேசித்து; வேய்வான் மௌலி: கிரீடம் வேறு சூடிக் கொள்ளுவான்; மெய்யன்றே: வாஸ்தவம்; ரொம்ப வாஸ்தவம்!]

குறிப்பு:—சீதையின் நிலையைக் கண்ட அனுமனுக்கு ஒன்றும் பேச முடியாதிருந்தது. மனசு ஸ்தம்பித்து விட்டது என்று சொல்லலாம். இந்த நிலையில் உள்ளமானது திடீர் என்று உடைப்பெடுத்துக் கொண்டு வார்த்தைகளாக வரும் பாவத்தைச் செய்யுளில் பார்க்க வேண்டும்!

* * *

தூங்க முடியாத சிறை வாசம் நாள் நாளாக இருந்து கொண்டே இருக்கிறது. சிறை வாசத்தின் அனுபவம் நன்றாய்க் கிட்டுகிறது உனக்கு!

இந்த நிலைமையில் ராவணனும் பிழைத்து விடுவான் அல்லவா?

கைத்தோ டுஞ்சிறை
 கற் போ யை

வைத்தோன் இன்னுயிர்
 வாழ் வா னும்,

பொய்த்தோர் வில்லிகள்
 போ வா ராம்,

இத்தோ(டு) ஒப்பது
 யா துண் டே!

[கைத்தோடும் சிறை கற்போயை: உயிரே காந்து போகும்படியாக நிகழும் சிறை வாசத்தின் துயரத்தை அறிந்து அனுபவிக்கிறாய் அல்லவா நீ. இந்த உன்னை: வைத்தோன்: சிறை வைத்தவனுகிய ராவணன்: பொய்த்தோர் வில்லிகள் போவாராம்: உன்னைக் காக்கும் விரதம் கொண்டவர்களாகிய ராம லக்ஷ்மணர்கள் விரதத்தை மறந்தவர்களாய் வெறுமனே போய் விடுவார்களாம்; இத்தோடு ஒப்பது யாதுண்டே: இதுபோல் நம்பத் தகாத காரியம் வேறில்லை!]

* * *

உத்தமியாகிய உன்னை இப்படியெல்லாம் கஷ்டப்படுத்திய அரக்கர்களைக் கொல்லாமல் வானர வீரர்களாகிய நாங்களும் உயிரைப் பத்தோபஸ்தாக வைத்துக் கொண்டு அயோத்திக்குப் போக வேண்டாமா?

நல்லோய் நின்னை
 நலிந் தோ ரைக்

கொல்லேம் எம்முயிர்
 கொண் டங் கே

எல்லோ ரும்செல,
 எங் கோ னும்

வில்லோ டும்செல
 வேண் டா வோ!

[நல்லோய் நின்னை நலிந்தோரை: உத்தமியாகிய உன்னை இப்படியெல்லாம் வதைக்கிற அரக்கர்களை; கொல்லேம் எம் உயிர் கொண்டங்கே எல்லோரும் செல: நாங்களும் கொல்லாதபடி அயோத்திக்கு எல்லாருமாகப் போக; எங்கோனும் வில்லோடும் செல வேண்டாவோ: கோதண்ட ராமனும் அந்த வில்லோடு அந்த அயோத்திக்குள் போக வேண்டாமா? இதைவிட வெட்கக் கேடு என்ன இருக்கிறது?]

* * *

சீதை சிறையிலேயே இருந்து விடுகிற காரியம், ராமன் வந்து மீட்காத காரியம் இரண்டும் ஒரு விதமான சிரிப்பை உண்டாக்கியது அனுமனுக்கு. பேசப் பேச அந்த மன நிலை மெள்ள மாறி ஆங்காரம் ஆகிவிடுகிறது. "ஏழு சமுத்திரங்களும் பதினாலு உலகங்களும் என்ன பாடு படப்போகிறது பார்" என்று ஆங்காரத்தோடு வார்த்தை வருகிறது.

தாழித் தண்கடல்
 தம் மோ டும்

ஏழுக்(கு) ஏழுல
 கெல் லாம், மன்

ஆழிக் கையவன்
 அம் பம் மா

ஊழித் தீயென
 உண் ணு தோ.

[தாழித் தண் கடல் தம்மோடும்: குடாவாய் அமைந்துள்ள ஏழு சமுத்திரங்களோடு: ஏழுக்கு ஏழ் உலகெல்லாம்: பதினாலு உலகங்களும்; மன்: ஒரே படியாக மிச்சம் இல்லாமல்; ஆழிக் கையவன் அம்பு: தோள் வளையத்துக்கான கையோடு கூடிய ராமனுடைய கொடிய அம்பு; அம்மா: அடடா; ஊழித் தீயென உண்ணுதோ: அடடா சர்வ சம்ஹார காலத்தில் வரும் தீயைப்போல் சாம்பலாக்கி விடாதா?—கடல்களையும் உலகத்தையும்.]

அனுமனது உள்ளம் இன்னும் என்ன என்ன உணர்ச்சிகளெல்லாம் உள்ளாகிறது என்பதை அடுத்த இதழில் பார்ப்போம்.

அண்ணலின் 80-வது ஜனன விழா

சென்ற 10—10—48ம் தேதி ஞாயிறன்று சென்னை சேத்துப்பட்டு தேசிய வாலிபர் சங்கத்தினர் காந்தி மகானின் ஜனன விழாவை வெகு சிறப்பாகக் கொண்டாடினார்கள். ஏழை மக்களுக்கு அன்னமளித்ததுடன், காந்தி மகானுடைய திருவுருவச் சிலையை அழகாக அலங்கரிக்கப்பட்ட ஒரு புஷ்ப விமானத்தில் வைத்துப் பல முக்கிய வீதிகளின் வழியே ஊர்வலமாகக் கொண்டு சென்றார்கள். அன்று மாலை கூடிய பொதுக் கூட்டத்தில் மகாத்மாஜியின் வாழ்க்கையைப் பற்றியும், அவர் இந்தியாவுக்கும் உலகத்துக்கும் செய்த தொண்டைப் பற்றியும் பலர் எடுத்துச் சொன்னார்கள்.

கொம்பு வாணம்



ரா. வீழிநாதன்

★ ★ ★

“டேய் முனியா! இந்த நாற்காலியை எடுத்து அங்கே போடு. அதோ இருப்பதை எடுத்து இங்கே வை. அந்த உள்ளேயிருக்கும் பெரிய கட்டிலை எடுத்து வந்து இந்த அறையில் போடு. ரேடியோவுக்குப் பக்கத்தில் ஒரு நாற்காலி கொண்டு வந்து போடு” என்று இவ்விதமாக உத்தரவுக்கு மேல் உத்தரவு இட்டுக் கொண்டிருந்தார் ராமேசன்.

தலை தீபாவளிக்காக மாப்பிள்ளை வரப் போவதாக இருந்தது. அதனால் தான் அவருடைய வீட்டில் அவ்வளவு ஆர்ப்பாட்டங்களெல்லாம் நடந்து கொண்டிருந்தன.

அவருடைய பெண் கனகத்துக்கு ஆனந்தம் நிலை கொள்ளவில்லை. ஆடிக்கு வந்திருந்த பொழுது அவளுடைய பெற்றோர் அவளுக்குத் தன் கணவனைத் தனியே சந்தித்துப் பேசச் சந்தர்ப்பமே அளிக்கவில்லை. தீபாவளிக்கு வரும் தன் கணவனைத் தனியே கண்டு நாலு வார்த்தைகளாவது பேசி விட வேண்டும் என்பது அவளுடைய அந்தரங்க எண்ணம். அதற்கேற்றாற் போல, அவளுடைய கணவன் ரகுராமனும் “ஆடிக்கு வந்திருந்த பொழுது ஆனைப் பட்ட பாடு பட்டுப் பார்த்து விட்டேன். உன்னைத் தனியே சந்தித்து இரண்டு வார்த்தைகள்கூடப் பேசமுடியவில்லை. உன் அப்பா, அம்மா இப்படி விவரமறியாத கர்நாடகப் பிரகிருதிகளாக இருப்பார்கள் என்று நான் கனவிலும் கருதவில்லை. ‘ஏதடா, புதுத் தம்பதிகளாயிற்றே! தனித்துப் பேசவேண்டும் என்று ஆசையாயிராதா?’ என்றெல்லாம் அவர்கள் நினைத்தால்தானே! உன்னையும் என்னையும் பிரித்து வைத்து வேடிக்கை பார்ப்பதில் அவர்களுக்குத்தான் என்ன ஆனந்தமோ? இந்தத் தடவை தீபாவளிக்கு நான் வரும்பொழுது, உன்னைத் தனியே கண்டு நாலு வார்த்தைகளாவது பேசாமல் திரும்புவதில்லை என்று கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறேன். இந்த விஷயத்தில் உன் ஒத்துழைப்பும் இருந்தால் என் ஆசை கைகூடும்” என்று ஆசையைக் ஊறி விடும்படியாக நீண்ட கடிதம் ஒன்று எழுதியிருந்தான்.

கனகமும் புதிதாக விவாகம் ஆனவள் தானே! அவளுக்கும் அந்த ஆசையிராதா? ஆகவே அவள் ரகுராமனுடைய வரவை ஆவலோடு எதிர்நோக்கியிருந்தாள்.

தீபாவளிக்கு முதல் நாள் காலையில் ராமேசனுடைய கார் ஸ்டேஷனுக்குச் சென்று மாப்பிள்ளையை அழைத்துக் கொண்டு திரும்பியது. மாப்பிள்ளை ரகுராமனும் தனக்கென்று தனியாக ஒழித்து விடப்பட்டிருந்த அறையில் வந்திறங்கினான். ஆடிக்கு வந்திருந்த பொழுதும் அவன் அதே அறையில் தான் தங்கியிருந்தான். அவன் ஆடிக்கு வந்திருந்த பொழுது அறை எப்படி அலங்கரிக்கப் பட்டிருந்ததோ, அப்படியே தான் இப்பொழுதும் அலங்கரிக்கப் பட்டிருந்தது. ஆடிக்கு வந்திருந்த பொழுது அவன் மாமனார் ரேடியோ கேட்பதற்கென்றும், ‘போன்’ செய்வதற்கென்றும் இப்படி ஏதாவது ஒரு சாக்கு வைத்துக் கொண்டு ‘திடும்பிரவேசம்’ செய்தவண்ணம் இருந்தார். அதனால் அவன் தன் மனைவியைத் தன் அறைப் பக்கம் காணவே முடியாமற்போய் விட்டது. இப்பொழுதும் அதே மாதிரியான ஏற்பாட்டைக் காணவே அவனுக்குத் தன் மாமனார் மீது ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. ஆனால் அவர் மீது அவன் தன் ஆத்திரத்தை எப்படிக் காட்டிக் கொள்ளமுடியும்? அல்லது தன் ஆசையைத்



தான் சங்கோசமின்றி எப்படி வெளியிட முடியும்? 'தலை விதியே!' என்று தன்னைத் தானே நொந்து கொண்டான்.

ரகுராமனுடைய அறை வாசற்பக்கத்தில் இருந்தது. கனகமும் யாரும் இல்லாத சமயம் பார்த்துத் தன் கணவனுடன் இரண்டு வார்த்தைகளாவது பேச வேண்டும் என்பதற்காக அடிக்கொருதரம் ஏதாவது ஒரு வியாஜத்தை வைத்துக் கொண்டு வாசற்பக்கம் வருவாள்.

வாசலில் கத்தரிக்காய்க்காரி கூவினால் "கதம்பம் விற்கிறது அம்மா! பார்த்து வருகிறேன்" என்றோ, வெண்டைக்காய் விற்றால் "வெட்டி வேர் வந்திருக்கிறாப் போலிருக்கிறது. வாங்கி வரட்டுமா?" என்றோ சொல்லி விட்டு வாசற்புறம் வந்து விடுவாள்.

ஆனால் அதே சமயம், அப்பாவுக்கு என்ன வெட்டி முறிக்கிற காரியமோ, ரகுராமனுடன் உட்கார்ந்து பேசிக் கொண்டிருப்பார்! அல்லது விஷமக்கார விச்சு அத்திம்பேருடன் உறவு கொண்டாடிக் கொண்டு உட்கார்ந்திருப்பான். அவன் வாசலுக்கும் உள்ளுக்குமாக நூறு நடைக்குமேல் நடந்திருப்பாள். ஆனால் அவளுடைய காரியம் தான் கை கூட வில்லை.

மத்தியானம் மணி மூன்றிருக்கும். மாமனார் ராமேசன் கண் அயர்ந்திருந்தார். மாமியாரும் உள்ளே கைக்காரியமாக இருந்தாள்.



உபாத்தியாயர்:—இந்த வகுப்பிலே நீங்கள் எல்லோரும்தான் பாஸ் பண்ணிவிட்டேளே! நீ மாத்திரம் என் அழுகிறாய்?

பையன்:—நாங்கள் எல்லோரும் பாஸ் பண்ணி, மேல் வகுப்புக்கும் போய்விட்டோம். ஆனால் நீங்க மட்டும் ஒரே கிளாசில் உட்கார்ந்திருக்கேளேன்னுதான் ......ம்...ம்...

மாப்பிள்ளை ரகுராமனுக்கு இருப்புக் கொள்ள வில்லை. கனகம் வருவதாயிருந்தால் இது தான் சரியான தருணம் என்றெண்ணிக் கட்டிலில் சாய்ந்தவாறே பத்திரிகை படிப்பவனைப் போலப் பாவனை செய்து கொண்டிருந்தான். ஆனால் கண்கள் மட்டும் உள்பக்கத்துக் கதவுப் பக்கமே கனகத்தின் வரவை எதிர்பார்த்தவாறு நோக்கியிருந்தன.

அவன் எதிர் பார்த்ததற்கேற்ப, அறையின் உள் பக்கத்துக் கதவு மெதுவாகத் திறந்தது. கதவு திறப்பதைக் கண்டதும், ரகுராமன் மட்டற்ற மகிழ்ச்சியினால் களைத்துக் கொண்டு. "கனகம், வா" என்று கூப்பிட வாய் எடுத்தான். அதற்குள் கையில் டிபன் தட்டுடனும் தண்ணீர் டம்ளருடனும் நுழைந்த மாமியாரைக் கண்டு விடவே, தான் சொல்ல எடுத்த சொற்களை மென்று விழுங்கினான். டிபனுக்காக வந்திருந்த பாதாம் ஹல்வாவையும் வேப்பம் உருண்டையாக எண்ணி விழுங்கி வைத்தானே தவிர, அது அவனுக்கு ருசிக்க வில்லை. எப்படி ருசிக்கும்? 'தன் மனைவியைத் தனியே சந்தித்துப் பேச முடியாமற் போய் விடுமோ?' என்ற அவநம்பிக்கை சந்திரனை விழுங்கும் ராகுவைப் போல, அவனுள்ளத்தை விழுங்கத் தொடங்கியது. கனகத்தைச் சந்திக்க ஏதாவது வழி தென்பட்டால் தானே அவனுக்கு?

இதே சிந்தனையில் மணி ஐந்து அடித்து விட்டது. கோலம் போடுவதற்காக வாசற் பக்கம் வந்த கனகம், அவன் அறையில் யாரும் இல்லாமல் இருப்பதைக் கண்டு, முன்னாலேயே தயாராக எழுதி வைத்திருந்த கடிதத்தை விட்டெறிந்து விட்டுச் சென்றாள். ரகுராமனும் சட்டென்று கழுகு போலப் பாய்ந்து அதைக் கையில் எடுத்துக் கொண்டான்.

அன்புள்ள......

உங்களைத் தனிமையில் சந்திக்க வேண்டும் என்பதற்காக நானும் ஆனைப்பட்ட பாடுகள் எல்லாம் பட்டுப் பார்த்து விட்டேன். ஆனால் முடியத்தான் இல்லை. எனக்கு ஒரு யுக்தி தோன்றுகிறது. அப்படிச் செய்தால் நாம் சந்திக்கலாம். இரேழியில் தானே மின்சார விளக்கின் 'மெயின் ஸ்விட்ச்' இருக்கிறது. சரியாகப் பத்து மணிக்கு நீங்கள் அதை அணைத்து விட்டால் நான் பக்கத்து அறை வழியாக வந்து உங்களைச் சந்திக்கிறேன். விளக்கு அணைந்த காரணம் கண்டு பிடிப்பதற்கோ, வேறு

விளக்குகளைத் தேடிக் கண்டு பிடித்து ஏற்றுவதற்கோ சிறிதுநேரம் பிடிக்கும். அதற்குள் நாம் சந்தித்து விடலாம்.

தங்கள் அன்புக்கன்பான

கனகம்

அந்தக் கடிதத்தைப் படித்த ரகுராமனுக்கு அது சரியான யுக்தியாகவே பட்டது. கனகத்தின் புத்திக் கூர்மையை உள்ளூற வியந்தான். 'குறிப்பிட்ட நேரம் எப்பொழுதடா வரும்?' என்று ஏங்கி அடிக்கொரு தரம் கடிகாரத்தையே பார்த்த வண்ணம் இருந்தான். கடிகாரம் வேண்டுமென்றே அன்று சண்டித்தனம் செய்வது போலப் பட்டது அவனுக்கு.

மணி பத்து அடிப்பதற்கும் ரகுராமன் பிறர் கண்களில்படாமல் 'மெயின்ஸ்விட்சை' அணைப்பதற்கும் சரியாக இருந்தது. உடனே வீடு முழுவதையும் கும்மென்று அந்தகாரம் சூழ்ந்து கொண்டது.

மின்சார வசதியுள்ள வீடுகளில் தான் மற்ற விளக்குகள் அநாதைக் குழந்தைகளைப் போலக் கவனிப்பாரற்று எங்கேயாவது ஒரு மூலையில் கிடப்பது சர்வ சாதாரணமான விஷயம் ஆயிற்றே! அதைத் தேடிக் கண்டு பிடித்து ஏற்றுவதற்குள் உன்பாடு என்பாடு என்று ஆகிவிடும் அல்லவா!

அடுத்த நிமிஷம் சொன்ன சொல் தவறாமல் கனகம் தன் கணவனது அறையில் இருந்தாள். கனகத்தின் புத்திக் கூர்மையில் லயித்திருந்த ரகுராமன் அவளுடன் என்ன பேசுவது என்று புரியாமல் தவியாய்த் தவித்தான்.

கனகத்தின் தாயார், 'நல்ல விளக்கு இது? சரியான சமயத்தில் கண்களை மூடிக்கொண்டு விட்டது!' என்று முணுமுணுத்த வண்ணம் நெருப்புப் பெட்டியைத் தேடிக் கொண்டு இரேழிப்பக்கம் வந்தாள். தகப்பனாரும் 'கரண்டு' நிற்கக் காரணம் என்ன என்று சிந்தித்தவராய் இருட்டில் தட்டித் தடவிக்கொண்டு வாசற் பக்கம் வந்தார். இரேழிக் கருகில் வந்தபொழுது, தம்பதிகளின் கைகள் ஒன்றை ஒன்று ஸ்பரிசித்தன.

தீபாவளியல்லவா! இருவருக்கும் தங்கள் பழைய தீபாவளியின் இன்ப நினைவு எழுந்தது. "அடியே! சற்று மெதுவாகத்தான் தேடேன்! என்ன அவசரம் குடி முழுகிவிட்டது!" என்று மெதுவான குரலில் சொன்னார் ராமேசன்.

இன்னும் ஏன் வெட்கம்?



"நன்னாத்தான் இருக்கு! போங்கோன்னு!" என்று 'பிகுக்காரம்' செய்து கொண்டாள் அவருடைய தர்மபத்தினி.

"கும்பிருட்டாக இருக்கும் வீட்டைப் பிரகாசமாக்கத்தான் தீபாவளியன்று வேண்டிய சௌகரியங்கள் இருக்கின்றனவே!" என்று தோன்றிற்று விஷமக்கார விச்சுவுக்கு. 'சட்'டென்று தன் பையிலிருந்த மத்தாப்புப் பெட்டியை எடுத்து, ஒரு கொம்பு வாணத்தைக் கொளுத்தினான். கொம்பு வாணம் சீறிக்கொண்டு ஜாஜ்ஜோதியாகப் பிரகாசித்தது. கை கோத்துக் கொண்டிருந்த இரு ஜோடிகளும் ஒன்றையொன்று பார்த்தவுடன், தேள் கொட்டியது போலக் கையை உதறிக் கொண்டும், தீயை மிதித்து விட்டது போலத் துள்ளிக் குதித்துக் கொண்டும் ஒதுங்கி நின்றனர்.

கொம்பு வாணத்தின் ஒளியில் 'மெயின் ஸ்விட்சு' அணைக்கப்பட்டிருப்பதைக் கண்ட விச்சு, 'டக்' கென்று 'ஸ்விட்சை'ப் போட்டான். எல்லா மின்சார விளக்குகளும் எரிந்தன. கனகத்தின் தாய்—தந்தையரின் உள்ளத்திலும் விளக்கு அணைத்ததற்குக் காரணம் மின்னொளி போலத் தென்னென விளங்கிவிட்டது. அதற்கப்புறம் புதுத் தம்பதிகளின் விஷயத்தில் தலையிட அவர்களுக்குப் பைத்தியமா என்ன?

வட்ட மேஜை

மதுரை,
17—10—48

பொதுஜனத் தொடர்பு

"கல்கி" ஆசிரியர் அவர்களுக்கு.

ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் மந்திரி சபை இருக்கட்டும். நீண்ட நாள் வாழட்டும். மந்திரி சபையைக் கலைக்கவோ, ராஜிநாமாச் செய்யவோ வேண்டாம். மக்கள் மந்திரி சபையைக் கண்டு திருப்தி யடைவதற்கு வழி தேடவேண்டும்.

மந்திரி சபையினர் மாகாணத்தில் நிர்வாக ஊழல்கள் இருப்பதை அறிந்து கொண்டே அதனை வளர விடுவது தற்கொலை புரிந்து கொள்வதுபோலாகும்.

மக்கள் சுதந்திரம் பெற்றிருக்கிறோம் என்று பத்திரிகை எழுத்துகளில் படித்திருக்கிறார்களே தவிர முழுச் சுதந்திரத்தையும், அது கருப்பா சிவப்பா என்று கூட அறியவில்லை என்பதைப் பிரதமரும் அவரது மந்திரிக் குழுவினரும் உணர வேண்டும்.

மக்களின் ஆதரவைப் பெற அரசாங்கம் செய்ய வேண்டுவது என்ன?

ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒரு பப்ளிக் ரிலேஷன் ஆபீஸ் ஏற்படுத்தி, அந்தப் பிரதேசங்களிலுள்ள மக்கள் அறிந்துகொள்ளும் படியாக, சர்க்கார் நடவடிக்கைகளை மேற்கூறிய பப்ளிக் ரிலேஷன் ஆபீஸ் மூலம் மக்களுக்கு எடுத்துக் கூறவேண்டும். தவிர முக்கியமாக ஒரு 'தபால் பெட்டி' இந்த ஆபீஸ்களில் ஏற்படுத்தி மக்களின் குறைகளையும் மகஜர்களையும் இந்த ரிலேஷன் ஆபீஸ்களிலுள்ள உத்தியோகஸ்தர்களை பரிசீலனை செய்யச் சொல்லி, அந்த ஊர் எம்.எல்.ஏ.க்களுக்கு அனுப்பும்படி செய்ய வேண்டும். இந்த எம். எல். ஏ.க்களை மக்களின் நியாயமான கோரிக்கைகளுக்குப் பரிகாரந் தேடும்படியாக ஸ்தல உத்தியோகஸ்தர்களைப் பேட்டி கண்டு கூறவேண்டும். ஸ்தல உத்தியோகஸ்தர்கள் கவனிக்கத் தவறினால் அந்தந்தக் கோரிக்கைகளையும் மனுக்களையும் சம்பந்தப்பட்ட மந்திரியின் காரியாலயத்திற்கு அனுப்ப ஸ்தல எம். எல். ஏ.க்கள் ஏற்பாடு செய்யவேண்டும். இவ்வாறு செய்தால் மக்கள், சர்க்கார் ஆகிய இரு சாரார்களிடையே ஐக்கிய மனோபாவம் ஏற்படும்.

இவ்வாறு ஒரு பப்ளிக் ரிலேஷன் ஆபீஸ் ஒவ்வொரு ஜில்லாவிலும் ஏற்படுத்தப் பட்டால், சர்க்கார் நடவடிக்கைகளை அவ்வப்போது பொதுஜனங்கள் அறிய இடமுண்டு. "நமது சுதந்திர சர்க்கார்" என்று பாமர மக்கள் நினைக்க வேண்டுமானால் இத்தகைய 'பொதுஜனத் தொடர்பு ஸ்தாபனம்' ஏற்படுவது அத்தியாவசியம்.

கு. ராமமூர்த்தி.

ரங்கூன்
6—10—48

பர்மாவில் இந்தியர்

"கல்கி" ஆசிரியர் அவர்களுக்கு

பர்மாவிலுள்ள இந்தியர்கள் பிரிட்டிஷார் காலத்திலும், ஜப்பானியர் காலத்திலும் எப்படி யிருந்தார்களோ அதைவிட மிகக் கேவலமான நிலைமைக்கு ஆளாகிவிட்டார்கள். இந்தியர் சுதந்திர மக்கள் என்று எந்த பர்மியரும் உணர்ந்ததாகத் தெரியவில்லை. இங்குள்ள இந்தியரின் உயிருக்கும் உடைமைக்கும் ஏதாவது பாதுகாப்பு உண்டா என்றால், அதுவுமில்லை. ஒரு உதாரணம்: ரங்கூனிலிருந்து எட்டாவது மைலில் கமாயுட் என்ற கிராமம் இருக்கிறது. அங்கு அதிகமாக வசிப்பவர் இந்தியர்களே. சமீபத்தில் சுமார் முந்நூறு பர்மியக் கொள்ளைக்காரர்கள் பயங்கரமான ஆயுதங்களுடன் மேற்படி கமாயுட் என்ற இடத்தில் வசிக்கும் இந்தியர்களின் வீட்டை ஒன்று கூடப் பாக்கி விடாமல் கொள்ளையடித்துச் சென்றார்கள். இந்த அநியாயத்தை பர்மா — இந்தியர் காங்கிரஸில் உள்ள சில பிரமுகர்கள் சென்று நமது ஸ்தானிகரிடம் முறையிட்டுக் கொண்டும் நாளதுவரை ஒருவித பலனும் காணோம்.

பர்மாவில் உள்ள கிராமங்களில் வசிக்கும் இந்தியர்கள் கம்யூனிஸ்டுகளுக்குப் பயந்து ரங்கூன் நகரத்திற்கு வந்து, இருக்க இடமின்றியும் உண்ண உணவின்றியும் அவதிப்படுகிறார்கள். சிலர் பிச்சை எடுத்தும் பலர் அத்தொழிலைக் கைக்கொள்ளக் கூசியும் அவர்கள் படும் நரகவேதனையைக் கடவுள் தான் அறிவார். இதுவும் நம் ஸ்தானிகருக்குத் தெரியாததல்ல. இவர்களைப் பற்றி இதுவரை எந்த முயற்சியும் எடுக்கக் காணோம். தவிரவும் கக்கூஸ் சுத்தம் செய்தல், சாக்கடை துப்புரவு செய்தல், ரிக்ஷா இழுத்தல் போன்ற தொழில்களினால் மகா இழுக்கான பெயரை பாரத நாட்டுக்குத் தேடிக் கொடுத்தவர்களும், பர்மியர்களால் 'கோரங்கி' என்பதாக அழைக்கப்படுபவர்களுமான ஆந்திர சகோதரர்களை இங்கிருந்து திருப்பி அனுப்பவோ அல்லது இந்தியாவிலிருந்து இறக்குமதியாவதைத் தடுக்கவோ நம் மேன்மை தங்கிய ஸ்தானிகர் முயற்சி எடுக்கக் காணோம். மேற்கண்ட உண்மைகளை உணர்ந்து இந்திய சர்க்கார் காலா காலத்தில் தக்க நடவடிக்கைகளை எடுக்கத் தவறினால் இங்குள்ள இந்தியர்களுடைய நிலைமை படுமோசமாகி விடும் என்பது நிச்சயம்.

கே. ஆர். லட்சுமணன்.

திருத்தங்கல்
18—10—48

நாமம் வாழ்க!

"கல்கி" ஆசிரியர் அவர்களுக்கு

வழக்கமாக ரேடியோவில் 9 மணிக்கு கச்சேரி முடிய வேண்டியது. அக்டோபர் மாதம் 9-ந் தேதி இரவு 8-45 மணிக்கு

முடிந்துவிட்டது. உடனே கவனமாகக் கேட்டதில் 'அடுத்தபடியாக ஸ்ரீமான் டி. கே. சி. அவர்கள் ராஜாஜி மண்டபத்தில் கம்பர் விழாவில் தலைமை தாங்கிச் சொற்பொழிவாற்றிய ஒலிப்பதிவைக் கேட்பீர்கள்' என்று ஒரு கனத்த குரல் கேட்டது. ஸ்ரீமான் ரசிகமணி அவர்கள் பேசினார்கள் ; பாடினார்கள் ; பொருள் விளங்கும்படியாகப் பாடினார்கள். அவர்கள் பாடியது பசுமரத்தாணிபோல் மனதில் பதிந்தது. என்னை யறியாமலே உடல் சிலிர்த்தது. மின்னலைப் போல் ஓடி மறைந்தன அந்தப் பதினைந்து நிமிஷங்களும். உடனே ஓடோடியும் சென்று, போன வாரத்துக் 'கல்கி'யின் முகப்புப் படத்தைப் பார்த்துப் பரவசமடைந்தேன். முப்பது நாட்கள் களிப்புடன் கொண்டாடக் கூடிய தமிழனது திருவிழாவை என்னைப்போன்ற தொழிலாளிகளும், நடுத்தர வர்க்கத்தாரும், பிரபலசங்கீதவித்வான்களும், பத்திரிகை ஆசிரியர்களும், அரசியல் வாதிகளும் சேர்ந்து மூன்று நாட்களாவது கொண்டாடினார்களே என்று அகமகிழ்ந்தேன். இத் திருவிழாவிற்கு மூல புருஷராக விருந்தது மன்றி, கல்கியில் முகப்புப்படம் போட்டுத் தமிழனது புகழை ஓங்கச் செய்ததற்காகக் கல்கியைப் பாராட்டுகிறோம்.

ச. எஸ். ஜி. சாரி

சென்னை
18—10—48

தண்டிக்க வேண்டும்

'கல்கி' ஆசிரியர் அவர்களுக்கு,

சென்னையில் தற்சமயம் காலரா பரவத் தொடங்கி யிருக்கிறது. அதற்குக் காரணம் அசுத்தமே. முதலாவதாகக் குழாய்த் தண்ணீர். அதை வீட்டில் நாம் வேண்டுமானால் சுத்தப் படுத்திக் கொள்ளலாம். ஆனால் பால், தயிர் முதலியவற்றில் கலந்துகொண்டு வருகிறார்களே அதற்கு என்ன செய்வது?

இரண்டாவதாக, தெருவில், முக்கியமாக சந்துகளில் குழந்தைகள் மட்டும் அல்ல, பெரியவர்களுங்கூட அசுத்தம் செய்கிறார்கள். நாம் உண்மையைப் போதித்தோமானால் 'ரோடு உன்னுடையதல்ல. சர்க்காருடையது' என்கிறார்கள்.

தவிர, கோனார்கள் மாடுகளைத் தெருவில் கட்டுகிறார்கள். அதனால் அநேக வித அசுத்தங்கள் ஏற்படுவதுடன் ஈ, கொசு முதலியன பெருகுகின்றன. இதைப் பற்றி நாம் கார்ப்பரேஷன் அதிகாரிகளுக்குத் தெரிவித்தால் அவர்கள் காதில் போட்டுக் கொள்வதில்லை.

[illegible] வண்டிகளும், மாட்டு வண்டிகளும் வாசலில் மாதக் கணக்காய் நிற்கின்றன. அதிகக் குப்பைத் தொட்டிகள் இல்லாததால் குப்பைகள் தெருக்களிலேயே எறியப்படுகின்றன. தோட்டிகளும் தீபாவளி, பொங்கல் இனாம்கொடுக்காதவர்கள் வீட்டருகில் வேண்டுமென்றே குப்பைகளை ஒதுக்குகிறார்கள்.

சென்னையில் ஜன நெருக்கடியினாலும், வீடுகள் கிடைக்காததாலும் அநேக அசௌகரியங்கள் நிறைந்த சந்துகளிலுள்ள வீடுகளில் குடியிருக்க வேண்டியிருக்கிறது. வீட்டிலோ காற்றோட்டம் இல்லை. தெருக்களும் அசுத்தமாய் இருந்தால் என் வியாதி வராது?

இவற்றைச் சுகாதார இலாகா கவனிக்க வேண்டியது அவசியமல்லவா? காலராவைத் தடுக்க இஞ்செக்ஷன் மட்டும் செய்தால் போதாது. முதலில் அசுத்தத்தைப் போக்க வேண்டும். தெருவைப் பல விதங்களிலும் அசுத்தப் படுத்துபவர்களைத் தக்கபடி தண்டிக்க வேண்டும். குழாய்த் தண்ணீரின் நாற்றத்தைப் போக்கி சுத்தப்படுத்த வேண்டும்.

கே. ஜெ. லக்ஷ்மி.

அருப்புக்கோட்டை
18—10—48

ஜவுளி ஏற்றுமதி

"கல்கி" ஆசிரியர் அவர்களுக்கு,

அருப்புக்கோட்டையில் கைத்தறி நெசவாளர்களுக்கு வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்து வருகிறது. கைத்தறி ஜவுளிகள் தேங்கிக் கிடக்கின்றன. நெசவாளர்களுக்குத் தேவைக்குத் தகுந்த அளவு நூல்கள் கிடைக்கவில்லை. நெய்த துணிகளும் விற்பனையாகவில்லை.

அருப்புக்கோட்டையிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களில் அக்டோபர் மாதம் 15ந் தேதி வரை 5 லக்ஷம் பெறும் ஜவுளியும், வியாபாரிகளிடத்தில் சுமார் 5 லக்ஷம் பெறும் ஜவுளியும் ஆகப் பத்து லக்ஷம் பெறும் ஜவுளி வாங்குவார் அற்றுத் தூங்குகின்றன. தீபாவளி சமீபத்திலிருக்கும் இந்த நேரத்தில் இவ்வளவு ஜவுளி தேங்கிக் கிடப்பது வருங்காலத்தின் பயங்கரத் தோற்றத்துக்கு அறிகுறியாகும். நெசவாளர்களுக்குப் போதிய கூலி இல்லாமலும், வேலை கிடைக்காமலும் பட்டினிப் பட்டாளங்கள் நகரெங்கும் அதிகரித்து வருகின்றன.

கைத்தறி நெசவாளர்கள் இந்தக் கடுமையான சோதனைக் கட்டத்தில் வாழ்வதா சாவதா என்ற திக்கற்ற நிலையில் தரித்திரக் கடலில் நீந்திக் கொண்டிருக்கிறார்கள்.

இவ்விஷயத்தை சர்க்கார் உடனடியாகக் கவனித்துக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், வியாபாரிகளுக்கும் வெளிநாட்டு ஏற்றுமதி பெர்மிட்டுகள் தாராளமாக வழங்கிக் கைத்தறி ஜவுளிகள் விற்பனையாவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்ய வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

அ. போ. நாராயணன்

புது டில்லி
1-10-48

பரிசுத் தொகை

"கல்கி" ஆசிரியர் அவர்களுக்கு,

நான் ஹிந்தியைப் பற்றி எழுதினது இளைஞர்களுக்கு அறிவு ஊட்ட வேண்டுமென்னும் எண்ணத்தினாலேயே ஒழிய வேறொன்றுமில்லை.

தயவு செய்து பரிசு ரூபாய் 25ஐ எந்த நன்மையாவது செய்து வரும் ஓர் சபைக்கு நேராகத் தாங்களே செலுத்திவிடக் கோருகிறேன்.

ஆ. நீ. சுந்தரமூர்த்தி

[பரிசுத் தொகை பாரதியார் நிதியில் சேர்க்கப்பட்டது. —ஆசிரியர்.]

* இந்த இதழில் வெளியாகி யிருக்கும் வட்ட மேஜைக் கடிதங்களில் மதுரை ஸ்ரீ கு. ராமமூர்த்தி எழுதி யிருக்கும் கடிதத்துக்கு ரூ. 25 பரிசு வழங்கப்பட்டது.



ஒவ்வொரு தினமும்
உங்கள் சருமம் அதிக அழகைப்பெறுகிறது
கேடில் கலந்த சோப் ரெக்ஸோனா ஒன்றே அது
உங்கள் சருமத்தை அதிக ஆரோக்கியமுடையதாகவும்,
அப்பழுக்கற்றதாகவும், நீடமாகவும் செய்கிறது.
உங்கள் மேனியை தவறாமல் ரெக்ஸோனாவினால் சுத்தம் செய்துகொள்ளுங்கள். நாளுக்குநாள் மேனி அதிக அழகு பெறுவதைக்காண்பீர்கள். ரெக்ஸோனாவில் கேடில் இருக்கிறது. சருமத்தைச் சுத்தம்செய்து மிருதுவாக்கி ஆரோக்கியமூட்டும் சக்திவாய்ந்த தைலங்களால் விஞ்ஞான முறைப்படி தயாரிக்கப் பட்ட கலப்பு மருந்து கேடில். இது உங்கள் சருமம் புது ஆரோக்கியமும் மாசற்ற சோபையும் என்றும் திகழும் புது அழகும் பெற உதவும்.
கேடில் சேர்ந்த ரெக்ஸோனாதான் இதைச்செய்கிறது!
Rexona
ரெக்ஸோனா
சோப்
RP. 41-172 TM

No. 1.



Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
116-119, Sladens Garden, Poonamallee High Road, Kilpauk, Madras

கல்கி



KALKI அக்டோபர் 31, 1948 4 அணா

சந்திரா பிரஸ்

140, தெற்குவெளி வீதி

மதுரை

★

அச்சு, பைண்டிங், ரூலிங் வேலைகள் அதிக சுத்தமாகவும், குறித்த காலத்திலும், கைதேர்ந்த வேலையாட்களைக் கொண்டு நாகரீகமான முறையில் திருப்திகரமாக செய்து கொடுக்கக் கூடும்.

★

ஜி. ஜான் தேவதாசன்

மானேஜர்

REGD. NO. M. 4392

